Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 16 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 ஜனவரி 2022




# புரட்சிக்காரனின் உள்ளம் மென்மையானது

"தம் உயிர் ஈந்து இம் மண்ணிலே விடுதலைப் பயிரை உரம்பெறச் செய்துவிட்ட தியாகிகளை நாம் என்றும் மறக்க முடியாது. மறந்தால் நாம் மனிதம் அற்றவர்களாகின்றோம்.

எம் தோழர்கள் நாம் எப்போதும் ஓரே குடும்பமாக வாழ்பவர்கள். இனிய உறவுகளைத் துறந்த நாம், எம்மை நேசித்து, நம்மோடு நாமே ஐக்கியமாகி, இறுகப் பிணைந்துவிட்ட ஜீவன்கள், நமக்கு நாமே தாயாகி, தந்தையாகி, இனிய உறவாகி இணைந்திருக்கின்றோம்.

எமக்கிடையே ஏற்படும் இழப்புகள் - எமக்கு மிக நெருக்கமானவர்கள் நிரந்தரமாகவே பிரிந்துவிடும் போது, எம்மோடு ஒன்றான, எம்மிலே ஒன்றான, அவர்களின் பிரிவுகள் எம்மை நிலைகுலையச் செய்கின்றன. உதிர்வை நினைத்தும் நாம் அழவில்லைதான், அழமுடியாதுதான். ஆனால் நாம் அடையும் வேதனை சொல்ல முடியாதது. சொன்னாலும் யாராலும் புரிந்துகொள்ள முடியாதது.

புரட்சிக்காரர்கள் என்றால் கடினமாணவர்கள் என்று எண்ணுகிறது இந்த உலகம். மனிதர்களுக்குள்ளே மிகவும் மென்மையானவன், மிருதுவான உணர்வுகளைக் கொண்டவன். அதனால்தான் புரட்சிக்கே புறப்பட்டவன் என்பதை உணரவில்லை. அந்த மென்மையான இனிய உள்ளங்களோடு நாம் உறவாட, வாழ இன்னுமொரு பிறவி கிடைக்காதா என்று ஏங்குகின்ற ஏக்கங்கள் யாருக்கும் புரியாமலிருக்கலாம். ஆனால் எம்மைச் சார்ந்தவர்கள் நிச்சயம் புரிந்துகொள்ள முடியும்.

அந்த தியாகிகள் கடந்துவந்த பாதை கடினமானதுதான். அந்தக் கடினங்கள் எம்மோடு இறுதிவரை பகிர்ந்துவந்த எம் இனியவர்கள் இடையிலே உதிர்ந்துவிடும்போது, எம் தாயை இழந்த துயர், எம் தந்தையை இழந்த துயர், இவைகளையும் கடந்து துயர் உண்டு என்றால் அவற்றையும் கடந்து துயரடையும் எம்நிலை யாருக்கும் புரியாது.

தம் இனிய கனவுகளை இம் மண்ணிலே புதைத்துவிட்டு இந்த மண்ணின் விடுதலைக்காகப் பாடுபட்ட உயிர்களை இந்த மண் மறந்துவிடக்கூடாது. அவர்களின் ஆத்மாவின் கீதங்கள் இன்னும் எம் உள்ளங்களில் ஒலித்துக்கொண்டிருப்பதை இம் மண்ணின் மைந்தர்களோடு பகிர்ந்துகொள்கிறோம்."

-தளபதி கிட்டு-

**உலக பரப்பு எங்கும் வாழும்
சங்கத்தமிழ் வாசகர்கள், ஆதரவாளர்கள்,
அனுசரணையாளர்கள், தாய்த் தமிழ் உறவுகள்,
அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு,
தமிழர் திருநாள் தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்...!**



**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
• Purchasing a Residential Property
• Selling a Residential Property
• Residential Mortgage Refinancing
• Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிப்பிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாளோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 310.00
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 / Sq. Ft (c$ 34.99 / ft.)
1000
Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side,10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

SCARBOROUGH HOME Renovation INC
your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
• All General Home Repairs • Kitchen Cabinets
• Basement Renovation • Kitchen Cabinets Installation
• Carpet Installation • Painting
• Drywall Installation • Plumbing
• Hardwood Flooring Installation • Tiling
• Washroom Remodeling
www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We' ve definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM
GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாளோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி,
வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
• AUDIT • CORPORATE TAXES
• REVIEW ENGAGEMENT • PERSONAL TAXES
• NOTICE TO READER • FINANCIAL PLANNING
• BUSINESS ADVISORY • CRA AUDITS
• CONTROLLERSHIP SERVICES • PAYROLL
• BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8


## முக்கிய அறிவித்தல்

உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள்,
சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் சர்வதேச மின் செய்தித்தாள் ஊடக
மக்களிடம் சென்றடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com



**தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்...!**

– கவிஞர் பாரதிதாசன் –

*உறவுகள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு, தமிழர் திருநாள் பொங்கல்
நல்வாழ்த்துக்கள். – உலகவணிகம்*

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தப் புறநிலைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. இன்றைய காலத்தையும், இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து. காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப, எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக்குடன் முரண்படாது, உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக, நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே.**






# சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**முகநூல்** (Facebook)
Sangathamil Canada


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# பன்முகக் கலைஞன் தளபதி கிட்டு




கிட்டு ஒரு போராளியாக, களத்தில் தளபதியாக மட்டும் இருக்க வில்லை. அவர் ஒரு பன்முகத் திறமையின் கூட்டு வடிவமாகத் திகழ்ந்தார். கிட்டு ஒரு கலைஞர். ஆற்றல் படைத்த எழுத்தாளர். சிறந்த பதிப்பாளர். ஒப்பற்ற புகைப்பட நிபுணர். இப்படிப் பல துறைகளில் அவர் சிறந்து விளங்கினார். கிட்டு தமிழ் நாட்டில் தங்கியிருந்த பொழுது அவருடைய சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்தார். தமிழீழப் போர்க்களச் செய்திகளையும், போராளிகளின் தியாகங்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல் வதற்காகத் "தமிழீழம்" என்ற பெயரில் ஒரு பத்திரிகையைத் தொடங்கினார். மாதம் ஒரு முறை வெளிவந்த இவ்விதழ் தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

"தமிழீழம்" இதழானது தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு வித்தயாச மான பத்திரிகையாகக் காட்சியளித்தது. திரும்பத் திரும்ப அரைத்த மாவையே அரைப்பதைப் போல ஒரே மாதிரியான கதைகள், கட்டுரைகள் அல்லது முக்கால் பொய்யும் கால்வாசி கற்பனையும் கலந்து எழுதப்படும் செய்திகளைக் கொண்டே பக்கங்களை நிரப்பி வெளிவந்துகொண்டிருக்கும் தமிழக பத் திரிகைகளுக்கு நடுவில் "தமிழீழம்" பத்திரிகை புதமையான தாகவும், புரட்சிகரமானதாகவும் காட்சி தந்தது.

இராண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் இலண்டனில் போர்க்களச் செய்திகளை மட்டும் தாங்கிச் சில பத்திரிகைகள் வெளியாயின. அத்தகைய பத்திரிகைகளுக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவெற்பு இருந்தது. அதைப்போல, தமிழீழப் போர்க் களத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளை முற் றிலுமாகத் திரித்தும் மறைத்தும் வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் வெளியிட்டுக் கொண்டிருந்த காலகட் டத்தில், உண்மையான நிகழ்ச்சிகளைத் தாங்கி வெளிவந்த "தமிழீழம்" தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் பெரும் வரவெற் பைப் பெற்றது. வீரச்சாவு அடைந்த போராளிகளைப் பற்றிய குறிப்புக்களைச் சுவைபடவும், வீரம் செறிந்த வகையிலும் கிட்டு எழுதினார். ஒவ்வொரு இதழிலும் வெளிவந்த இந்தக் குறிப் புக்கள் அனைவரின் உள்ளங்களையும் தொட்டன. கிட்டுவைத் தவிர வேறு யாரும் இதை எழுத முடியாது. ஏனென்றால் ஒவ் வொரு போராளியைப் பற்றியும் அவர்களுடைய சாதனைகள் பற்றியும் அவருக்குத்தான் தெரியும். அவர் எழுதிய இந்தக் கட்டுரைகளைப் படித்துவிட்டு நான் ஒரு முறை அவரிடம், "இயக்கம் தோன்றிய காலத்திலிருந்து நடை பெற்ற பல முக்கிய நிகழ்ச்சிகள், களத்தில் வீரச்சாவடைந்த முக்கிய தோழர்கள் பற்றிய விபரங்கள் மக்களுக்குத் தெரியாது. அவற்றை எழுத உங்களால் மட்டுமே முடியும். நீங்கள் அதை எழுதாவிட்டால் பல வரலாற்றுக் குறிப்புக்கள் அடியோடு மறைந்துபோகும்." என்று கூறினேன்.




இந்த உரையாடலின் விளைவாக "கிட்டுவின் டைரி" என்ற தலைப்பில் தேவி பத்திரிகையில் தொடர்ந்து கிட்டுவின் பல கட்டுரைகள் வெளியாயின. களத்தில் வீரச்சாவடைந்த சீலன், செல்லக்கிளி, சங்கர், பண்டிதர், விக்டர் போன்ற பல தளபதி களின் வரலாறுகளை உள்ள நெகிழ்ச்சியுடன் கிட்டு எழுதினார். துப்பாக்கி முனையில் மட்டுமல்லாமல் "பேனா" முனையிலும் அவர் வல்லவர் என்பதை அந் தக் கட்டுரைகள் தமிழ்நாட்டு மக்களுக்கு தெரிவித்தன.

தமிழீழுத்தில் இந்திய இராணு வம் புரிந்த சொல்லொணா அட்டூ ழியங்கள் பற்றிய உண் மையான நிகழ்ச்சிகளைத் தொகுத்து "பவான் பேப்பர்ஸ்" என்ற தலைப்பில் 20 பிரசுரங் களை ஆங் கிலத்தில் கிட்டு வெளியிட்டார். உள்ளடக்கத்தில் மட்டுமல்லாமல் பதிப்பிலும் அவைகள் மிகத் தரமான வையாக அமைந் திருந்தன. "யூ டு இந்தியா" (You too India) என்ற தலைப்பிலும் ஒரு பிர சுரம் வெளியிடப்பட்டது. இந் தியாவிலும் வெளிநாடு களிலும் இந்தப் பிரசுரங்கள் பெரும் தாக் கத்தை ஏற்படுத்தின. இந்திய அரசின் முகத்திரையை இந்த வெளியீடுகள் கிழித் தெறிந்தன.

பிரான்சிலிருந்து "எரிமலை" என்னும் மாத இதழ் இதுவரை நிழற்படப் பிரதியாகவே வெளி வந்து கொண்டிருந்தது. இதற் குப் புது மெருகூட்டி பல வண் ணங்களுடன் அச்சிட்டுக் கலை, பண்பாட்டு, சமூக மற்றும் அரசியல் ஏடாக மாற்றினார். இதற்கு ஈடான தமிழிதழ் தமிழ் நாட்டிலிருந்து கூட இதுவரை வெளிவர வில்லை. கனடாவி லிருந்து மாதம் இருமுறை வெறிவந்த "உலகத்தமிழர்" பத்திரிகையையும் (2009 முன்) சிறப்பான முறையில் வெளிவர ஆவன செய்தார். உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களைப் பற்றிய செய்திகள் ஆகியவை இந்த இதழில் வெறியாயிற்று.

நேர்வே நாட்டிலிருந்து ஆண்டுக்கு மும்முறை வெளிவரும் "சுதந்திரதாகம்" என்னும் பத்திரிகை புதுப்பொலிவுடன் வெளி வரத் தொடங்கிற்று. தமிழீழப் போராட்டம், அதன் பல்வேறு வடிவங்கள், தமிழீழம் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் போன்றவை குறித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் இப்பத்திரிகையில் தொகுத்து வெளியிடப்பட்டன. வெளிநாட்டிலிருந்து தமிழ்ப் பத்திரிகைகளை வெளியிடுவதே பெரும் சாதனையாகும். பத்திரிகைத் துறையில் பெருமளவு முன்னேறிவிட்ட மேலை நாடுகளில் வெளிவரும் பத்திரிகைகளுக்கு ஈடுகொடுத்து, செய்திகளிலும், பதிப்பிலும் தரமான பத்திரிகையை வெளியிடுவ தென்பது எவ்வளவு பெரிய சாதனை என்பதை நினைத்துப் பார்த்தால் மலைப்புத் தட்டுகிறது.

ஐரோப்பிய மக்கள் தமிழீழப் போராட்டம் பற்றி அறிந்து கொள் ளச் செய்வது போராட்டத்திற்குப் பலம் சேர்க்கும் என்பதை உணர்ந்து கிட்டு, ஆங்கிலம், பிரான்சு, டேனிஷ், இலத்தீன், நோர்வேஜியன், ஜெர்மன் ஆகிய மொழிகளில் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி வெளியீடுகள் வெளிவர ஆவன செய்தார். பிரான்சிய மொழியில் "தமிழ்" என்னும் பத்திரிகை யையும், ஜெர்மன் மொழியில் "வணக்கம்" என்னும் ஓர் இதழையும், நோர்வேஜியன் மொழியில் "தமிழீழம்" என்னும் ஓர் இரட்டை ஏட்டையும் தொடர்ந்து வெளிவரச் செய்தார்.

சுவிட்சலாந்து நாட்டில் "ஈழநாதம்" உள்ளூர் வானொலிச் சேவையைத் தொடங்கி வைத்தார். கனடாவில் உள்ள டொரண்டோ போன்ற நகரங்களில் உள்ளூர் வானொலிச் சேவைகள் கிட்டவின் முயற்சியால் தொடங்கப்பட்டன. நவீன உலகில் சிறந்த பிரச்சார உத்தியாக வளர்ந்துவரும் ஒளிப் பேழைத் பதிவுத் துறையிலும் அவர் அடியெடுத்து வைத்தார். கிட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து பொழுது "நிதர்சனம்" என்ற புலிகளுடைய தொலைக்காட்சிச் சேவை ஆரம்பித்து வைக்கப் பட்டது. அதைப்போல வெளிநாட்டுத் தமிழர்களுக்காகத் "தரிசனம்" ஒளிப்பேழையையும் (வீடியோப் பத்திரிகையும்) பிரான்சிலிருந்து வெளிவரச் செய்தார். இதற்காக ஒளிப்பதிவுத் துறையில் பல நுணுக்கங்களை அவர் கற்றார். படக்கலவை யில் (வீடியோ மிக்சிங்) அவர் கைதேர்ந்த நிபுணராகத் திகழ்ந்தார்.

ஐரோப்பிய நாடுகளில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலி களின் அலுவலகங்களில் குறிப்பிட்ட தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டால் அன்றைய தமிழீழச் செய்திகளைச் கேட் பதற்கு ஏற்பாடு செய்தார். புலிகளின் வானொலிகளும், தொலை பேசிகளும் அன்றாடம் கூறிய செய்திகள் யாரால் தொகுத்துக் கூறப்படுகின்றன என்பது எனக்குத் தெரியாது. நான் சுவிட்சர் லாந்து சென்றிருந்த பொழுது கிட்டு என்னிடம் இந்தச் செய்திச் சேவை பற்றிய எனது கருத்தைக் கேட்டார். பொதுவாக அதைப் பாராட்டினாலும் அதிலுள்ள சிறு குறைபாடுகளை நான் சுட்டிக் காட்டினேன். "அவற்றைத் திருத்திக்கொள்கிறேன்" என்று அவர் கூறிய பொழுதுதான் அவரே அந்தச் செய்தித் தொகுப்பை எழுது கிறார் என்பதை உணர்ந்தேன். பல்வேறு வேலைகளுக்கு நடுவெ ஒவ்வொரு நாளும் என்ன செய்திகள் மக்களுக்குக்

கூறப்படவேண்டும் என்பதை மிக கவனமாகத் தொகுத்து எழுதும் வேலையையும் கிட்டுவே செய்கிறார் என்பதை நான் அறிந்தபொழுது வியப்படைந்தேன்.

**புகைப்பட நிபுணன்**

கிட்டு மிகச் சிறந்த புகைப்பட நிபணராகத் திகழ்நதார். நானும் நண்பர் மணியரசனும் சுவிட்சலாந்து சென்றிருந்த வேளையில்



எங்கள் இருவரையும் பல கோணங்களில் ஏராளமான படங்கள் எடுத்தார். மறுநாள் தான் எடுத்த படங்களை எங்களிடம் காட்டினார். துல்லியமாகவும், கலை உணர்வுடனும் அப்படங்கள் எடுத்திருப்பதனைப் பார்த்து நான் அதிசயித்தேன். “இதை எங்க கற்றுக்கொண்டீர்கள்?” என்று கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே “அனுபவம் தான் எனக்கு ஆசான்” என்று கூறிவிட்டு ஒரு வேடிக்கையான நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார்.

“யாழ்ப்பாணத்தில் இருந்த நண்பர் ஒருவர் ஒரு புகைப்படக் கருவியைக் (கேமிரா) கொடுத்தார். புகைப்படக் கருவி பற்றியும்,



தானைத் தலைவருடன் தளபதி கிட்டு



மக்களுடன் தளபதி கிட்டண்ணா

படம் எடுக்கப்பட்டவுடன் எவ்வாறு சுவடிடப்படும் (பிரிண்ட்) என்பது பற்றியும் நான் எதையும் அறிந்திராத காலம் அது. அவசர அவசரமாக ஒரு படச்சுருள் முழுவதையும் எடுத்துத் தள்ளினேன். பின்பு அப்படச்சுருளை எடுத்துக்கொண்டு ஓர் அறைக்குள் சென்று படங்கள் எல்லாம் சரியாக விழுந்து இருக்கின்றனவா எனப் பிரித்துப் பார்த்தேன். எனது அறியாமையை நிலைத்தால் இப்பொழுதும் சிரிப்புத்தான் வருகிறது.” என்று கூறிவிட்டு கிட்டு சிரித்தபொழுது நானும் சிரித்தேன்.

**ஓவியர்**

கிட்டு ஒரு ஓவியக் கலைஞராகவும் திகழ்ந்தார் என்பது மிகப் பலருக்கு தெரியாத ஒரு செய்தியாகும். அவர் யாழ்ப்பாணத்தில் தளபதியாக இருந்தபொழுதும், பன்னாட்டுத் தலைமையகத்தின் பொளுப்பாளராக இலண்டனில் இருந்த வேளையிலும் ஓவியத்தில் கவனம் செலுத்த அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. ஆனால், இலண்டனிலிருந்து பிரித்தானிய அரசு அவரை வெளியேற்றிய பின்பு, ஐரோப்பிய நாடுகளில் தலைமறைவாக வாழ்ந்த காலம் அவருடைய கலை உணர்வுகளை வளர்த்துக் கொள்ளும் காலமாக அமைந்தது.

கிட்டு சிறந்த போர்வீரர் மட்டுமல்ல. சிறந்த ரசிகர் ஆகவும் கிழ்ந்தார். இயற்கை அழகை ரசிப்பதில், இனிய இசையில் மயங்குவதில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. தான் வெளியிட்ட பத்திரிகைகள் மற்றும் பரசுரங்களை வடிவமைப்பதில் அவர் காட்டிய திறன் அவருக்குள் ஓர் ஓவியக்கலைஞர் மறைந்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்தியது. மெக்ஸிக்கோ நாட்டு ஓவியர் ஒருவரிடம் முறையாக ஓவியக்கலையை பயின்றார் என கிட்டுவின் நெருங்கிய நண்பர் திலகர் கூறியிருக்கிறார். கிட்டுவின் ஓவியத் திறமை பற்றி திலகர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

நவீன ஓவியம் குறித்து கருந்து முரண்பட்டவராகக் கிட்டு இருந்தார். ஆனால் ஐரோப்பாவில் இருந்த காலத்தில் பிகேசோவின் ஓவியம் மீது காதலே கொள்ள ஆரம்பித்தார். “சவ அறை” என்னும் பிகாசோ ஓவியத்தின் சாயல் அவருடைய ஓவியம் ஒன்றில் படிவதாக உணர்ந்தேன். தனது ஓவியங்களில் ஆழ்ந்த உணர்வுகளையும் தத்துவங்களையும் வெளிப்படுத்துவதிலும் வெளிப்பாட்டுக் குறியீடுகளைக் கையாள்வதிலும் தனது கற்பனைகளை உயர உயர புறக்கவிட்டுள்ளார் என்றே கூறுதல் வேண்டும். “ஒரு விடுதலை வீரனின் மரணம்” என்ற ஓவியம் ஏராளமான வித்துக்களைப் பிரசவிப்பதாக அமைந் துள்ளது. வித்துக்களிலும் அவற்றிலிருந்து உயிர்பெடுக்கும் பல்வேறு மரம், செடி, கொடிகளிலும் அவர் மாறாத அன்பு கொண்டு இருந்தார். அவருடைய ஓவியங்கள் மரபு ரீதியாகவும், யதார்த்தமாகவும் அமைந்துள்ளது. ஆயினும் அவற்றில் சில அம்சங்களில் பண்புத்தன்மையைக் கலந்துள்ளார்.

ஒருமுறை என்னுடன் தொலைபேசியில் பேசும் பொழுது “இனி மேல் என்னை ஓவியர் கிட்டு என அழைக்கலாமோ” என்று வேடிக்கையாகக் கேட்டார். “நிச்சயமாக” என்று கூறினேன்.

**ஆங்கிலக் கல்வி**

தனக்குத் தெரியாதவற்றை “அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் கிட்டுவுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. தான் ஓர் இயக்கத்தின் தளபதி மட்டுமல்லாமல் மக்களால் மதிக்கப்படும் தலைவர் என்ற நிலையிலும் ஒரு விடயம் தனக்கு தெரியாது என்பதை வெளிப்படுத்தவும், தெரிந்தவர்களிடம் கூச்சப்பட்டதே இல்லை. அவர் இலண்டனில் இருந்த பொழுது ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுவது மிக அவசியம் என்பதை உணர்ந்தார். பிற நாட்டவர்களுடன் உரையாடுவதற்கும் அவர்களுடன் தொடர்புகொள்வதற்கும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என்று விரும்பிய அவர் இலண்டன் பி.பி.சியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆனந்தி அவர்களிடம் ஆங்கிலம் படித்தார். விரைவில் அம்மொழியில் அவர் பெற்ற தேர்ச்சியைக் கண்டு ஆசிரியையான ஆனந்தியே வியப்படைந்தார்.

அதைப்போலவே மிக நவீன சாதனமான கணணியின் (கம்யூட்டர்) தேவையைக் கண்டதன் விளைவாக அதில் தேர்ச்சி பெற வேண்டும் என்று விரும்பினார். கணணி அறிவியலையும் கற்றார்.

அவர் கற்றுக்கொண்ட திறமைகள், புகைப்படம் பிடித்தல், ஒளிப்பதிவு செய்தல், ஓவியம் வரைதல், கணணி போன்ற எதுவாக இருந்தாலும், அந்தத் திறமைகள் எல்லாவற்றையும் தனது தாயகத்தின் விடுதலைக்காகவே அவர் பயன்படுத்தினார். தான் நேசித்த தன் தாய் நாட்டின் விடுதலைக்காக உதவக்கூடிய எதுவாக இருந்தாலும் அதைக் கற்றுத் தேர்ந்தார்.

கிட்டு என்ற இளைஞர் ஒரு போராளியாக மட்டும் இருக்கவில்லை. நவீன ஆயுதங்களைக் கையாளுவதில் தேர்ச்சி பெற்றவராக மட்டும் இருக்கவில்லை. நல்ல எழுத்தாளனாக, சிறந்த கலைஞனாக, சிறந்த பதிப்பாளராக, சிறந்த ஓவியனாக இன்னும் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கினார்.



புதிய போராளிகளுக்கு பயிற்சி தரும் கேணல் கிட்டு

ஆம்! கிட்டு ஒரு பன்முகம்.

திரு. பழ. நெடுமாறனின் “காவியநாயகன் கிட்டு” என்ற நூலிலிருந்து. நன்றியுடன்.

நன்றி:: எரிமலை தை 1994

# தமிழீழ செய்திகள்




## வட இலங்கையின் சீன வேடதாரிகள்

மருத்துவர் முரளி வல்லிபுரநாதன்
சமுதாய மருத்துவ நிபுணர்

டிசம்பர் 16, 2021



தமது வல்லரசு நலன்களை பேணுவதற்காக தமிழர்களின் மீது அதிக கரிசனையை அமெரிக்காவும் இந்தியாவும் அண்மைக் காலத்தில் காட்டுவதை தொடர்ந்து ஏட்டிக்கு போட்டியாக சீன தூதுவரும் ஏனைய சீன அதிகாரிகளும் வட பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளதுடன் அதன் உச்சக் கட்டமாக வேட்டி அணிந்து வேடதாரிகளாக நல்லூர் கோவில் பூஜையிலும் பங்கேற்று அதை ஊடகங்களில் பிரபலப்படுத்துவதற்காக நல்லூரானுக்கு புறமுதுகு காட்டி அவமதிக்கும் படமொன்றையும் வெளியிட்டு இருக்கிறார்கள். தமது சொந்த நாட்டில் மத சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சீனர்கள் இலங்கையில் மத அனுஷ்டானங்களை கைக்கொள்ளுகிறார்களாம் .

போதாக்குறைக்கு வடபகுதி கடலை சூறையாடிக் கொண்டிருக்கும் சீனர்கள் வடபகுதி மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குகின்றார்களாம். ஏனைய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளின் தூதர்கள் வட பகுதிக்கு வருவதற்கும் சீன தூதுவர் வருவதற்கும் அடிப்படையில் ஒரு பாரிய வேறுபாடு இருக்கிறது. அதாவது ஏனைய பல நாடுகள் கடந்த காலங்களிலும் தற்போதும் இலங்கையில் ஒரு இனப்பிரச்சினை இருக்கிறது சிறுபான்மையினருக்கு பாரபட்சம் இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டு அதற்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சில் மற்றும் ஏனைய சர்வதேச கூட்டங்களிலும் குரல் எழுப்பி இருக்கின்றன. ஆனால் சீனா இலங்கையில் சிறுபான்மையினருக்காகவோ மனித உரிமைகளுக்காகவோ எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குரல் கொடுக்கவில்லை. மாறாக கடந்த காலத்தில் பேரினவாதத்துடன் இணைந்து தமிழர்களின் போராட்டத்தை நசுக்குவதற்காக முதன்மைப் பங்காளியாக செயல்பட்டிருக்கிறது. இப்போது முழு இலங்கையையும் சுரண்டி வளங்களை அபகரிப்பதற்கு பல்வேறு சதி திட்டங்களை இயங்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே வட பகுதி விஜயமும் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. பல தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகளும் தமிழ் ஊடகவியலாளர்களும் அண்மைக் காலங்களில் அடிக்கடி சீனாவுக்கு சென்றுவரும் நிலையில் தமிழ் பேசும் மக்கள் சீனாவின் சதி திட்டங்கள் குறித்து அவதானமாக இருப்பது மிகவும் அவசியம்.

சீனா உண்மையாக நேர்மையாக இலங்கையின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் துணை போவதானால் பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுக்கவேண்டும்

1. நிலங்கள் தனியருக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ சொந்தமாக இருப்பதனால் அதனை சீனர்கள் வாங்கலாம் விற்கலாம். ஆனால் கடற்கரையும் அதை அண்டிய கடலும் அந்த பகுதியில் தொன்று தொட்டு மீன் பிடித்து வரும் மீனவர்களுக்கு சொந்தமானது. எனவே பூநகரி உட்பட்ட இலங்கையின் மீனவர்களுக்கு சொந்தமான கடலில் அவர்களை வெளியேற்றி கடலட்டை வளர்ப்பது போன்ற செயல்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

2. நச்சுக் கிருமிகள் நிறைந்த சேதன உரத்தை இலங்கைக்குள் செலுத்த முயல்வது இல்லாவிட்டால் ஒப்பந்தம் என்ற பெயரில் ஏமாற்றி கிருமி உரத்துக்காக இலங்கையிடம் இருந்து நட்டஈடு பெறுவது நிறுத்தப்பட வேண்டும். கிருமி உரத்துக்காக பல ஆயிரம் வறிய இலங்கை மக்களின் நிவாரணத்துக்கு பயன்படக் கூடிய பல பில்லியன் டொலர்களை இலங்கையிடம் இருந்து அநியாயமாக அபகரித்துக் கொண்டு சில மீனவர்களுக்கு சில ஆயிரம் ரூபாய் பெறுமதியான நிவாரணத்தை தருவதைக் கண்டு மகிழ இலங்கையர்கள் ஒன்றும் இளிச்சவாயர்கள் இல்லை என்பதை சீனா உணர்ந்து கொள்ள வேண்டும்.

3. இலங்கையில் கட்டுமானப்பணி உட்பட்ட சீன முதலீட்டுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் இலங்கையருக்கு குறைந்த பட்சம் 50% வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அதை விடுத்து முற்றுமுழுதாக சீனாவில் இருந்து சிறைக்கைதிகள் மற்றும் தொழிலாளர்களை கொண்டு வந்து மேற்கொள்ளப்படும் திட்டங்களினால் இலங்கை மக்களுக்கும் அவர்களின் பொருளாதாரத்துக்கும் எந்தவித நலனும் இல்லாத நிலையில் அந்த திட்டங்களை இலங்கையின் பொருளாதாரத்தை சுரண்டி கடன் சுமையை அதிகரிக்கும் செயல்பாடாகவே இலங்கை மக்கள் கருதுவார்கள் என்பதை சீனா உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனியாவது சீனா திருந்தி இலங்கையின் அபிவிருத்திப் பங்காளியாக வருமா அல்லது தொடர்ந்து தனது சதிச் செயல்கள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை சுரண்டி ஷேஸ்பியரின் நாடகத்தில் வரும் இரக்கமற்ற வியாபாரி ஷைலாக் போல செயல்படுமா என்பதை எதிர் காலம் விரைவில் வெளிப்படுத்தும்.

## 15 வருடங்களின் பின் மகளை சந்தித்த தமிழ் அரசியல் கைதி

டிசம்பர் 17, 2021

கடந்த 15 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியொருவரை நிரபராதி எனக் கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவரை விடுதலை செய்துள்ளது.

மானிப்பாய் வீதி , தாவடியைச் சேர்ந்த தேவராசா சிவபாலன் (வயது 45) என்பவரே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஆயுதங்களை கொழும்புக்கு கடத்தி வந்தார் எனும் குற்றச்சாட்டில் , வத்தளைப் பகுதியில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.




அதன் பின் 2 வருட கால விசாரணைகளின் பின்னர் , பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கொழும்பு நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளுக்காக கடந்த 15 ஆண்டு காலமாக நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார்.

அந்நிலையில் கடந்த 14ஆம் திகதி அவருக்கு எதிரான வழக்கில் அவரை நிரபராதி எனக் கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவரை வழக்கிலிருந்து விடுதலை செய்தது.

இதேவேளை அவரது மகளுக்கு ஒரு வயதும் நிரம்பாத நிலையில், அவர் கைது செய்யப்பட்டு , தற்போது அவர் விடுவிக்கப்பட்டதும் தனது மகளை 15 வருடங்களின் பின் கண்டு நெகிழ்ச்சியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

## கீரிமலையில் தமிழ் மக்களின் காணிகளை கடற்படைக்கு சுவீகரிக்க முயலும் முயற்சிக்கு எதிராக போராட்டம்.....

டிசம்பர் 18.2021







# 13 ஆவது திருத்தம் தமிழர்களை பாதுகாக்காது

## ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகத்தின் தலைவர் – ஆனந்தி சசிதரன்

டிசம்பர் 16, 2021

ஒற்றையாட்சிக்குள் வருகின்ற 13 ஆவது திருத்தம் எமது மக்களை ஒருபோதும் பாதுகாக்காது என்று ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகத்தின் ஸ்தாபகர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்.....

கிட்டிய தூரத்தில் இந்தியா இருக்கும் நிலையில் சீனாவின் பார்வை யாழை நோக்கி நகர்ததப்பட்டிருக்கின்றது. இரண்டு நாடுகளும் முரன்படுகின்ற போது அது வடக்கு மக்களையே பாதிக்கும் ஒரு நிலைவரும். அந்த நேரத்தில் எமது மக்களே அழிவிற்கு உட்படும் நிலையில் இருப் பார்கள்.

நாம் இறைமையுள்ள ஒரு இனம். எமது வளங்கள் சுரண் டப்படுவதற்கான அத்திவாரம் இடப்படுவதை நாம் பார்க் கலாம். எமது வளங்களும் அபிவிருத்திகளும் எமது மக்களையே சென்றடையவேண்டும். வெறுமனே இந்த நாடுகள் சுரண்டிச்செல்வதற்கு அனுமதிக்க கூடாது. என வே எமது மக்களும் அரசியல் பிரதிநிதிளும் இந்த விடயத் தில் விழிப்புணர்வு உடையவர்களாக இருக்கவேண்டும்.

தமிழ்தேசியம் சார்ந்த கட்சிகளின் ஒற்றுமை தொடர்பாக சிவாயிலிங்கம் தலைமையில் பல கூட்டங்கள் அன்று இடம்பெற்றது. இவ்வாறான கூட்டுக்கள் தேவையில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் அன்று தெரிவித்திருந்தார். அன்று சிவாயி லிங்கம் தலைமையில் பத்து கட்சிகளின் கூட்டு தேவை யில்லை என்று பேசிய ரெலோ தற்போது தன்னுடைய தலைமையில் கூட்டமைப்பிற்குள் இருக்கும் தமிழரசுக் கட்சியையே தனக்குள் கொண்டுவர முடியாமல் ஒரு கூட்டினை அமைத்திருக்கின்றார்கள். அத்துடன் 13 வது திருத்தத்தை ஆரம்ப புள்ளி என்றும் அவர்கள் சொல் கிறார்கள்.

உண்மையில் தமிழ் மக்கள் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருக்கும் இந் நிலையில் 13 ஆவது திருத்தச்சட்டமூலம் தீர்விற்கான ஆரம்பபுள்ளியாக இருக்க முடியுமா என்ற கேள்வி எழு கின்றது. அதேபோல சுமந்திரனின் தமிழரசுக் கட்சி அமெரிக்கா சென்றிருக்கின்றது. அங்கு என்ன பேசினார் களோ தெரியவில்லை. அவர்கள் பேசி இரண்டு நாள் கழித்து வெளியுறவு இராஜாங்க அமைச்சர் ஒன்றுபட்ட நாட்டுக்குள் தீர்வை நாம் கோருவோம் என்ற கருத்தை பதிவு செய்துள்ளார். ஆனால் அவர் இங்கு சமஷ்டியைப் பற்றி பேசுகின்றார்.



ஆகவே 13ற்குள் எம்மை முடக்குவதற்கு இரு பகுதி களுமே முனைப்புடன் செயற்படுவதை பார்கின்றோம். எங்களுக்கு என்ன வேண்டும் என்பதை நாங்கள் சொல்லவேண்டும். ஒற்றையாட்சிக்குள் வருகின்ற 13 வது திருத்தம் எமது மக்களை ஒருபோதும் பாதுகாக்காது. 5வருடங்களாக மாகாணசபையில் இருந்து அதன் அதிகாரத்தை நாம் நன்கு நிரூபித்தோம். இந்த மாகாண சபையில் இருந்து ஒன்றையும் செய்ய முடியவில்லை என்று கூறிய விக்கினேஸ்வரன் ஐயாவும் இந்த வட்டத் திற்குள் நிற்பது அக முரண்பாட்டையே ஏற்ப்படுத்தி நிற்கின்றது. எனவே ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம் அதி உட்சபட்ச சுயாட்சி அதிகாரத்தை கோரி நிற்கும் என்றார்.

# தமிழீழ அரசியல் துறைபொறுப்பாளர் உட்பட காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்கின் தீர்ப்பு அடுத்த ஆண்டுக்கு தவணையிடப்பட்டது

டிசம்பர் 16, 2021



எழிலன் உட்பட காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்கின் தீர்ப்பு அடுத்த ஆண்டுக்கு தவணையிடப்பட்டது!

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட இறுதிப்போரில் சிங்கள இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போனவர் களை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட் கொணர்வு மனு மீதான தீர்ப்பு அடுத்த வருடத்துக்கு தவணை யிடப்பட்டதாக சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல்நீதிமன்றால் இன்று அறிவிக்கப்படவிருந்த நிலையில் மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் ஆயாராகிய சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,
இறுதிப்போரின் கடசிநாட்களில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவிற்கான தீர்ப்பு இன்றையநாள் வழங்கப் படவிருந்தது. இந்த வழக்குதொடர்பான பூர்வாங்க விசா ரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று அந்த நீதிமன்றம் ஒரு அறிக்கையினை சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கை மீதான வவுனியா மேல்நீதிமன்றின் தீர்ப்பு இன்று வழங்கப்படுவதாக நியமிக்கப்பட்டிருந்தது.

எனினும் அந்தத்தீர்ப்பு இன்னும் தயாரித்து முடிக்கப்படவில்லை என்று வவுனியா மேல்நீதிமன்றம் இன்று எமக்கு அறிவித் துள்ளது. அத்துடன் எதிர்வரும் வருடம் மாசிமாதம் 14 ஆம் திகதி இந்த உத்தரவு அறிவிக்கப்படும் என்ற விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது. இந்த வழக்கு இலங்கை இராணுவத்திற்கும், அரசாங்கத்திற்கும் சட்டமா அதிபருக்கும் எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தமக்கள் காணாமல் போனமை தொடர் பாக சிறீலங்கா இராணுவமும் அரசாங்கமுமே பொறுப்புக்கூற வேண்டும் என்ற விடயத்தினை கருப்பொருளாக கொண்டு இந்த வழக்குதாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் இராணுவத்தின் சார்பாக அவர்களுடைய சட்டத்தரணிகள் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர். அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தை சேர்ந்த சிரேஸ்ட அரசசட் டவாதி யொகான் அபேவிக்கிரம பிரசன்னமாகியிருந்தார். வழக்கினை தாக்கல்செய்த மனுதாரர்களான முன்னாள் மாகாண அமைச்சர் அனந்திசசிதரன் மற்றும் ஏனைய காணாமல்போனவர்களின் குடும்பத்தினரும் மன்றில் பிரசன் னமாகியிருந்தனர்.

# வடமராட்சியில் கரை ஒதுங்கிய மனித எச்சங்கள்

டிசம்பர் 15, 2021

வடமராட்சி - தொண்டமானாறு - கெருடாவில் மேற்கு - சின்னமலை கடற்கரையில் ஒதுங்கிய நிலையில் மனித எச்சங்கள் என்று சந்தேகிக்கப்படும் எலும்புகள் சில மீட்கப்பட்டுள்ளன.

நேற்று புதன்கிழமை மாலை அந்தப் பகுதியில் எலும்புகள் சில கரையொதுங்கிய நிலையில் காணப்படுகின்றன என்று வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து அந்தப் பகுதிக்கு வந்த பொலிஸார் அவற்றை மீட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப் படைத்தனர்.

இந்த எலும்புகள் தொடர்பில் இன்றைய நாள் சட்ட மருத்துவ அதிகாரி பரிசோதனைகளை நடத்தி தகவல் களை வெளியிடுவார் என்று மருத் துவமனை வட்டாரங் கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள் ளனர்.



இதேவேளை, யாழப்பாணத்தின் கரையோரப் பகுதியில் அண்மைக்காலமாக மனித சடலங்கள் கரையொதுங்கி வருகின்றன.

இதுவரை நெடுந்தீவில் ஒரு சடலமும் வடமராட்சிப் பகுதியில் 6 சடலங்களும் கரை யொதுங்கி யுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

[redacted]

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் செயலாளரிடம் பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் விசாரணை

டிசம்பர் 15, 2021



முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் செயலாளரான கனகலிங்கம் சிறிமதன் அவர்களை வவுனியா, குடியிருப்பு பகுதியில் வழிமறித்த பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் (ரிஜடி) அரை மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று (14.12.2021)இரவு 6.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவர்களின் செயலாளர் க.சிறிமதன் தனது வீடு நோக்கி வவுனியா நகரில் இருந்து குடியிருப்பு வீதி வழியாக செல்லும் போது இரவு 6.30 மணியளவில் குடியிருப்பு பகுதியில் மோட்டார் சைக்கிளில் தரித்து நின்ற சிவில் உடை தரித்த நால்வர் வழிமறித்துள்ளனர்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி தம்மை அடையாளப்படுத்தி வீதியில் வைத்து அரை மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது கடந்த பத்தாம் திகதி வவுனியாவில் நடைபெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராடடத்தில் கலந்து கொண்டமைக்கான காரணம், அவ் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தவர்கள் யார்? ஒழுங்கமைத்தவர்கள் யார்? மற்றும் தற்போது முன்னாள் பாராளுமன் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவர்களால் மேற்கொள்ளப்படும் வேலைகள் தொடர்பில் தன்னிடம் தகவல்களை பெற்றுக் கொண்ட பின்னர் தான் தொடர்ந்தும் பயணிக்க அனுமதிக்கப்பட்டதாக க.சிறிமதன் தெரிவித்தார்.

மேலும் குறித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் க.சிறிமதன் அவர்கள் 2018ம் ஆண்டு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரராஜ அவர்களின் செயலாளராக கடமையாற்றிய போதும் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் விசாரணைக் குட்படுத்தப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் சீன தூதுவர், அடுத்தது என்ன?

டிசம்பர் 15, 2021









# திருக்கோவில் கஞ்சிக்குடிச்சாறு சந்தியில் அமைந்திருந்த பிள்ளையார் சிலை உடைப்புகள்

டிசம்பர் 17, 2021



அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள கஞ்சிக்குடிச்சாறு சந்தியில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை இனந்தெரியாத விசமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்ட சம்பவம் நேற்று வியாழக்கிழமை (16) இரவு இடம்பெற்றள்ளதாக திருக்கோவில் பொலிசார் தெரிவித்தனர்.

திருக்கோவில் – பொத்துவில் பிரதான வீதியிலுள்ள கஞ்சிக்குடிச்சாறு சந்தியில் குடியிருப்புகள் இல்லாத பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேனபிள்ளையார் சிலை ஒன்றை அமைத்ததையடுத்து அதனை அந்தப் பிரதான வீதி ஊடாக பிரயாணிக்கும் மக்கள் வழிபட்டு வழிபட்டுவந்தனர்.

இந்த நிலையில் சம்பவ தினமான நேற்று இரவு குறித்த பிள்ளையர் சிலையின் கை, தும்பிக்கை போன்றவற்றை இனந்தெரியாத விசமிகள் உடைத்து சேதமாக்கியுள்ளனர் என பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை



# நெடுங்கேணியில் பெண் சுட்டுக்கொலை

டிசம்பர் 15, 2021

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் பெண் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் அப்பெண் சம்பவ இடத்திலேயே பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இன்று (15) காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா – நெடுங்கேணி – சேனைப்பிலவு பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் குறித்த பெண் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

சம்பவத்தில் பாலசுந்தரம் சத்தியகலா 34 வயதுடைய பெண்ணே இவ்வாறு பலியாகியுள்ளார்.




விவசாயத் தேவைக்காக பசளை வாங்க தாயாருடன் சென்ற நிலையில் உணவருந்திவிட்டு செல்ல முடிவெடுத்து மீண்டும் வீடு நோக்கிச் செல்கையில் வீதியில் நீர் நிறைந்திருந்தமையால் தாயாரை வீதியில் இறக்கிவிட்டு நீர் நிறைந்திருந்த இடத்தைக் கடந்த போதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் நாட்டு துப்பாக்கியால் சுடப்பட்டே மரணமடைந்துள்ளதாகவும் எதற்காக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது போன்ற பல்வேறு கோணங்களில் விசாரணை இடம்பெற்று வருகின்றது.

துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமடைந்ததால் அப்பகுதியில் பதற்ற நிலை நிலவி வருகின்றது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந் நிலையில் குறித்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் நபர் இறந்த பெண்ணின் உறவினர் எனவும் தெரிவிக்கப்படுவதுடன் ஏற்கனவே கொலைக் குற்றத்துக்காக சிறையில் இருந்து வந்த ஒருவர் எனவும் தெரிவித்தனர்.

# தமிழர்களை ஒற்றையாட்சிக்குள் முடக்க இந்தியாவும் மேற்கு உலகமும் சதி – கஜேந்திரகுமார்

டிசம்பர் 18, 2021



தமிழர்களை ஒற்றையாட்சிக்குள் முடக்கி, சீனாவிட மிருந்து இலங்கையை தம்வசம் வைத்திருக்க இந்தியா வும் மேற்கு நாடுகளும் முயல்கின்றன. இதற்காகவே அவற்றின் எடுபிடிகளான சட்டத்தரணிகளும், தங்களைத் தாங்களே மூத்த அரசியல் தலைவர்கள் என்று சொல்பவர் களும் தாங்களே நிராகரித்த 13ஐ இப்போது – 30 வருடங் களின் பின்னர் கேட்கிறார்கள். – இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரி வித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர் காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,
எந்த ஜனநாயக நாட்டிலாவது அரசமைப்பை நடைமுறைப் படுத்துமாறு கேட்கிறார்களா? அரசமைப்பு என்றால் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படி நடைமுறைப் படுத்தப்படாவிடின் அதன் பெறுமதி பூச்சியம். 35 வருடங் களாக இந்த அரசமைப்பில் – 13ஆம் திருத்தத்தில் ஏதோ இருக்கிறது. அதை நடைமுறைப் படுத்தவில்லை என்று கேட்பதா? தமிழர்கள் தமது பிரச்னைக்கு தீர்வையடைவது எப்படி? அரசமைப்பு ஊடகத்தானே அதை அடையமுடியும் – வேறு எந்த வழியிலும் முடியாது. அப்படி இருக்கும்போது இப்போதுதானே அதிகாரப் பகிர்வை பேசவேண்டும். ஆனால், இப்போது – அதுவும் ஒற்றையாட்சிக்குள் 13ஐ நடைமுறைப்படுத்தக் கேட்கிறார்கள். இந்த நேரத்தில் தானே, தமிழ்மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்று ஒருமித்து கேட்க வேண்டும் அதை செய்யத் தயாரில்லை. இவர் களின் சமஷ்டி என்பது சும்மா பெயருக்குத்தான். 35 வருடங்களாக தோற்றுப்போன – எட்டாத இடத்தில் இருக் கும் 13இல் இன்னமும் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் தலைமைகள் அல்ல. மடையர்கள் – முட்டாள்கள். ஆனால், இவர்கள் முட்டாள்கள் இல்லை – நிச்சயம் முட் டாள்கள் இல்லை. இந்நிலைக்கும் பூகோள அரசியலில் சீனாவின் வருகை முக்கியமாகிறது. இந்தியாவும் மேற்கு நாடுகளும் சீனாவிடம் இருந்து இலங்கை விடுபட வேண்டும் என்ற தேவை உள்ளது. அந்தப் பின்னணியில் அவை என்ன சொல்கின்றன என்றால், நீங்கள் சீனாவை கைவிடுங்கள் நாங்கள் தமிழனை ஒற்றையாட்சிக்குள் முடக்குகிறோம் என்று.

இதை தங்கள் முகவர்கள் – எடுபிடிகள் ஊடாக செய் கிறோம் என்பதே. சட்டத்தரணிகள், தங்களைத் தாங்களே மூத்த தலைவர்கள் என்று சொல்பவர்கள் தாங்களே நிரா கரித்த 13ஐ இப்போது 30 வருடங்களின் பின்னர் நடை முறைப்படுத்த கோருகிறார்கள். விக்னேஸ்வரன் அதைத் தாண்டி 13 தேவை – புதிய அரசமைப்பிலும் அப்படியே அது உள்வாங்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். இந்தி யாவுக்கும் இதுவே வேண்டும் என்று தமிழ் பேசும் கட்சி களின் கூட்டத்தின் பின்னர் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் பேசிய போது போட்டுடைக்கும் வேலையை அவர் செய் துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

# மதவளசிங்கன் குளத்தில் 'நாகச்சோலை ஒதுக்க வனத்திற்காக' 6.825 ஹெக்டயர் நிலப்பரப்பை அபகரித்துள்ள வனவளத் திணைக்களம்

டிசம்பர் 16, 2021

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட, மதவளசிங்கன்குளம் கிராமசேவகர் பிரிவில் 6,825 ஹெக்டயர் நிலப்பரப்பினை வனவளத்




திணைக்களம் புதிதாக அபகரிப்புச்செய்துள்ளது.

வனவளத்திணைக்களத்தின் இச்செயற்பாட்டிற்கு அப் பகுதி பொதுமக்களும், பொது அமைப்புக்களும் தமது அதிர்ப்தியை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,
இவ்வாறு அபகரிப்புச்செய்யப்பட்ட பகுதியில் வனவளத் திணைக்களம் அண்மையில் பெயர்ப் பலகை ஒன்றினை நாட்டியுள்ளது.

குறித்த பெயர்ப்பலகையில், நாகச்சோலை ஒதுக்கப்பட்ட வனம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அப்பகுதியின் மொத்தப் பரப்பளவு 6,825 ஹெக்டயர் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதேவேளை குறித்த வனப்பகுதிக்குள் அனுமதியின்றி நுழையக்கூடாதெனவும், அப்பகுதிக்குள் வனப்பா காப் புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களைப் புரிதல் தண் டனைக்குரிய குற்றமெனவும், வனப்பாதுகாப்பு கட்டளை யின் கீழ் தண்டனை வழங்கப்படும் எனவும் அந்த அறிவிப்பு பலகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் இவ்வாறு வனவளத் திணைக்களத் தினால் புதிதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலப் பரப்பானது, ஏற்கனவே மக்களுக்கு வழங்கப்பட்ட பகுதி என மதவளசிங்கன்குளம் பகுதி பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு வனவளத்திணைக்களம் இவ்வாறு புதிதாக பெயர்பலகை நாட்டும்போது தமக்கு எவ்வித அறிவித்தலும் வழங்கவில்லை என்பதுடன், தம்மோடு எவ்வித கலந் துரையாடல்களிலும் ஈடுபடவில்லை எனவும் மதவளசிங் கன்குளம் பொதுமக்களும், பொது அமைப்புக்களும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கின்றன.

மேலும் இப் பிரச்சினை தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளருடன் கலந்துரையாடத் தீர்மானித் துள்ளதாக மதவளசிங்கன்குளம் கிராம பொது அமைப் புக்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சீனர்களின் செல்வாக்கை வடக்கு கிழக்கில் நாம் விரும்பவில்லை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்

டிசம்பர் 19, 2021



சீனர்களின் செல்வாக்கை வடக்கு கிழக்கில் நாம் விரும்ப வில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற கருத்தாடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கே அவர் தொடர்ந்தும் பேசுகையில்,
இங்கே சிலர் கேட்கின்றனர் சீனாவை ஏன் எமக்கு ஆதர வாக சேர்க்க கூடாது என்கின்றனர். இதற்கு நான் பகிரங் கமாகவே கூறுகின்றேன் சீனர்களின் செல்வாக்கை வடக்கு கிழக்கில் நாம் இரு காரணங்களிற்காக விரும்ப வில்லை. அதில் ஒன்று எமது அரசியல் விடிவிற்காக நாம் செய்யும் போராட்டம் ஜனநாயகம் மற்றும் மனித உரி மைக் கோட்பாட்டில் தங்கியுள்ளது. இது இரண்டுமே சீனா விற்கு தெரியாது என்பதாகும்.

இரண்டாவது விடயம் இலங்கை தென் சீனக் கடலில் தீவாக இருந்திருந்தால் சீனாவின் கடலில் இருந்திருந்தால் அதனை அந்த பிராந்தியத்தின் நியாயமான கரிசனை யாக அது இருந்திருக்கும். ஆனால் இலங்கை இந்தியா வின் அருகில் உள்ள ஓர் தீவு. இந்தியாவின் நியாயமான பாதுகாப்பு கரிசணையை நாம் உள் வாங்கியிருக்கின் றோம். அதுவும் இந்தியாவிற்கு மிக அண்மையில் உள்ள பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை நாம் விரும்பவில்லை. ஏனெனில் சீனா இந்தியாவின் நட்பு நாடு அல்ல.

இதைச் சொல்லித்தான் சீனர்களின் இந்து சமுத்திரத்தின் ஆதிக்கத்தில் மிகவும் கரிசணை கொண்டுள்ள அமெரிக் காவுடனும் பேசினோம், இந்தியாவுடனும் பேசினோம். அதாவது உலக வல்லரசும், பிராந்திய வல்லரசும் இதனை விரும்பவில்லை. இதன்போதே வடக்கு கிழக்கில் சீனா நிலைகொள்ளாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி இரு நாட்டிடமும் உண்டு. அதற்கு நாங்கள் கேட்கின்றோம் அந்த இடத்தில் இருப்பது நாங்கள் எனவே சட்ட அதிகாரம் எங்களிடம் இருந்தால், அது நாங்கள் கேட்கும் வடிவில் கொடுக்கப்படுமாக இருந்தால் எங்கள் நிலம் மீதான சட்ட அதிகாரம் எங்கள் கைகளில் இருக்கு மானால் நீங்கள் அந்தப் பயத்தைகொள்ளத் தேவை யில்லை என்கின்றோம்.

சட்டம், ஒழுங்கு எங்களுடைய கையில் இருக்குமானால் இவை தொடர்பில் அவர்கள் பயம்கொள்ளத் தேவை யில்லை என்றோம். அநேகமாக எல்லா நாடும் தமது நலனிலேயே செயல்படுவார்கள் அதில் வியப்பில்லை. சிலவேளை ஒரு பிரதேசத்தில் குழப்பம் இருந்தால்தான் அங்கே தமது தலையீட்டை தொடர முடியும் என்ற எண் ணம் இருக்கலாம் நாம் கூறியுள்ளோம் இங்கே தொடர்ச் சியாக குழப்பநிலை இருந்தால் இலங்கை அரசிடமே நில அதிகாரம், பாதுகாப்பு அதிகாரம் எல்லாம் இருக்கப் போகின்றது. அது உங்களிற்கும் சாதகம் இல்லை. இதனை தீர்த்து வைத்தால் மட்டுமே உங்களிற்கு சாதகம் என்றோம். தற்போதும் சந்திப்புக்கள் தொடர்கின்றது இவை படம் எடுத்து முகநூலில் போடும் சந்திப்பு அல்ல. அப்படியும் இடம்பெறுகின்றது. இதே நேரம் ஜனவரியில் முக்கிய விடயங்கள் இடம்பெறவுள்ளது இடம்மெறும்போது தெரியும் என்றார்.



# வடபகுதிக்கான விஜயம் இது ஆரம்பம் மாத்திரமே

## சிறீலங்காவுக்கான சீன தூதுவர்

டிசம்பர் 17, 2021

வடபகுதிக்கான விஜயத்தின் பின்னர் ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவித்துள்ள சிறீலங்காவுக்கான சீன தூதுவர் இது ஆரம்பம் மாத்திரமே என தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின் முடிவு இது என்ற போதிலும் இது ஒரு ஆரம்பமுமாகும் என சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

எதன் ஆரம்பம் என்ற கேள்விக்கு விடைகிடைக்கவில்லை என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.



வட மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிறீலங்காக்கான சீன தூதுவர் குய் சென் ஹாங் இலங்கை கடற்பரப் பிற்குள் அமைந்துள்ள இராமர் பாலத்தின் மணல் திட்டுக்களை பார்வையிட்டுள்ளார்.

மன்னார் தாழ்வுப்பாடு  வழியாக கடற்படைக்கு சொந்தமான விரைவு படகின் மூலம் இராமர் பாலத்தின் மணல் திட்டுக்கள் வரை பயணித்து அவற்றை  அவர் பார்வையிட்டார்.

இலங்கை கடற்பரப்பிலுள்ள இராமர் பாலத்தின் மூன்றாவது மணல் திட்டு வரை பயணித்தனர்.

மன்னார் மாவட்டம் தாழ்வுப்பாட்டில் இருந்து ஒரு மணி நேர பயணத்தின்போது 17 கடல் மைல் தூரம் பயணித்தே அந்த இடத்தை அடைந்தனர்.

# ஊர்காவற்துறையில் வீடு புகுந்து பெண்கள், மாணவன் மீது சிறீலங்கா பொலிஸார் தாக்குதல்

டிசம்பர் 15, 2021

ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கு, தம்பாட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் மது போதையில் நுழைந்த பொலிஸார் வீட்டில் இருந்த பெண்கள் மற்றும் 17 வயது மாணவன் ஆகியோரை சரமாரியாகத் தாக்கி பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் பாதிக்கப்பட டவர்களால் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.

பொலிஸாரின் தாக்குதலில் ஒன்றரை வயதுக் குழந்தையின் தாய், பல்கலைக்கழக மாணவி ஆகியோர் பலத்த காயமடைந்து ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இத்தாக்குதல் குறித்து வீடியோ புகைப்படங்கள் உள்ளிட்ட ஆதாரங்களுடன் தாக்கப்பட்ட பெண்களின் தாயார் மற்றும் கிராம மக்கள் இணைந்து நேற்று மனித உரிமைகள் ஆணைக் குழவில் முறையிட்டுள்ளனர்.

# தமிழ் மீனவர்களது வாழ்வாதார அழிவு வேலைகளுக்கு துணைபோன டக்ளஸ்

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன்

டிசம்பர் 25, 2021



அழிவு வேலைகளுக்கு துணைபோன கடற்றொழில் அமைச்சர் மக்களின் இக்கட்டான நிலையை சாதகமாக பயன்படுத்தி தானே வந்து பிரச்சனையை தீர்ப்பது போல சித்தரிப்பதை ஏற்க முடியாதென  நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற கடற்றொழிலாளர்களின் போராட்டத்தில் கலந்துகொண்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இடை நடுவில் வெளியேறியிருந்தனர்.

இந்த விடையம் தொடர்பில் இன்று மாலை யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவனில் நடைபெற்ற நிகழ்வுக்குப் பின்னர் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே செல்வராஜா கஜேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களாலும் தென்னிலங்கை மீனவர்களாலும் எமது பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாம் மீனவர்களுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றோம். அந்த வகையில் எங்களைப் பொறுத்தவரை மீனவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டிய தார்மீக ரீதியான பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் மீனவர்கள் ஏற்பாடு செய்த போராட்டத்தில் நாம் கலந்து கொண்டிருந்தோம் என்னை பொறுத்தவரையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு வந்த பொழுது நான் அங்கு இருக்க விரும்பவில்லை.

தமிழக மீனவர்கள் இங்கு மீன்களை பிடிப்பதற்காக வரக் கூடும். ஆனால் சிங்கள கடற்படை அவர்களை திட்டமிட்டு இங்கே மீன்களை பிடிக்க விடுகின்றார்கள். இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் துணை போகின்றார்.

கடந்த இரண்டு வருடங்களாக அவர் அமைச்சராக இருந்து மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க முடியாமல் இருக்கின்றார். அவர் மானமுள்ள தமிழனாக இருந்திருந்தால் இந்த அரசாங்கத்தை விட்டு வெளியேறி இருக்க வேண்டும்.

வடக்கின் கரையோர பகுதியில் தமிழர்கள் இருக்கக் கூடாது என இவர்கள் திட்டமிட்டு செயற்படுகின்றனர். தமிழர் அமைச்சராக இருந்தும் மயிலிட்டித் துறைமுகம் இன்று தமிழர்களின் கையில் இல்லை. பெரும்பான்மை இனத்தவர்களே அங்கு இருந்து தொழில் செய்கின்றார்கள். கடலட்டை விடயத்தில் தென்னிலங்கை மீனவர்களால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப் படுகின்றது.

இவ்வாறான அழிவு வேலைகளுக்கும் துணைபோன அமைச்சர், மக்களின் இக்கட்டான நிலையை சாதகமாக பயன்படுத்தி தானே வந்து பிரச்சினையை தீர்ப்பதாக சித்தரிக்கின்றார். இவ்வாறான ஒரு துரதிஷ்டவசமான நிலைமை ஏற்படும் போது அதற்கு நாங்களும் துணை நிற்க முடியாது.

கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தாவுக்கு எதிராகவும் நீரியல்வள திணைக்களத்திற்கு எதிராகவும் எப்போது மக்கள் போராடுகிறார்களோ அப்போதுதான் அரசாங்கம் மக்களுடைய பிரச்சினை பற்றி யோசிக்க தொடங்கும்.

அழிவுக்கு காரணமானவர்களே கூடி அழுகின்ற செயற்பாடாகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேலையை நாம் பார்க்கிறோம். இது முழு ஏமாற்றுத்தனமான செயற்பாடு என தெரிவித்துள்ளார்.

# ஏ9 வீதி, யாழ் மாவட்ட செயலகத்தை முடக்கி மீனவர்கள் போராட்டம்!

டிசம்பர் 25, 2021

ஏ9 வீதி மற்றும் யாழ் மாவட்ட செயலகத்தை முடக்கி மீனவர்கள் போராட்டம் நடந்து வருகிறது. தற்பொழுது ஏ9 வீதி முடங்கிய நிலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு காணப்படுகின்றன.

இந்திய இழுவைப்படகு மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் உட்பட பல்வேறு மீனவ அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்றைய தினம் யாழ் மாவட்ட செயலகம் முற்றுகையிடப்பட்டு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.



யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளன முன்றலில் இருந்து கடற்றொழிலாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பேரணி யாழ் மாவட்ட செயலக முன்றலில் நிறைவடைந்தது.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கைது செய், நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யக்கூடாது, கைது செய்த படகுகளைப் விடக்கூடாது போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப் பட்டது.

# தமிழ்த்தேசிய அரசியலின் சரியான செல் திசைக்கு வலுவான சிவில் சமூகக் கட்டமைப்பு அவசியம்

டிசம்பர் 27, 2021




ஈழத்தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மீண்டும் ஒரு முறை சர்வதேசம் அவர்களைக் கையாள ஆரம்பித்திருக்கிறது. ஜனாதிபதியாக ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா இருந்தபோது இலங்கையின் கதவுகளை அமெரிக்காவுக்கு அகலத் திறந்துவிட்டிருந்தார். அப்போது, அமெரிக்கப் பிரசன்னத்தை இலங்கையில் தவிர்ப்பதற்காக இந்தியா ஈழத்தமிழர்களைக் கையாண்டிருந்தது. இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்து இலங்கையைத்தன் வழிக்குக் கொண்டுவந்திருந்தது. இப்போது, ராஜபக்ச அரசாங்கம் இலங்கையைச் சீனாவுக்குத் திறந்துவிட்டுள்ள நிலையில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து இலங்கையைப் பணியவைக்கும் முயற்சியில் தமிழ்க்கட்சிகளைக் கையாளத்தொடங்கியுள்ளன. இந்நிலையில், தமிழ்த்தேசிய அரசியலைச் சரியான செல்திசைக்கு நகர்த்துவதற்கு வலுவானதொரு சிவில் சமூகக் கட்டமைப்பை உருவாக்குவது அவசியமாகும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை (26.12.2021) நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வரங்குக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,
இந்தியாவும், அமெரிக்காவும், சீனாவும் தமிழ்க் கட்சிகளைக் கையாளத் தொடங்கியிருக்கும் சூழ்நிலையில் இக்கட்சிகள் இராஜதந்திர ரீதியாக இந்நாடுகளைக் கையாளுவதில் தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றன. தனித்தனிக் கட்சிகளாக ஏனைய கட்சிகளுக்கு எதுவும் தெரியாமலும், ஒரு கட்சிக்குள்ளேயே தனிநபர்களாக ஏனைய உறுப்பினர்களுக்குத் தெரியாமலும் இந்நாடுகளுடன் பேச்சு வார்த்தைகள் இடம்பெறுகின்றன. இவ்விடயங்களை மக்களுக்கு பகிரங்கப்படுத்துவது இராஜதந்திரமாக ஆகாது என்று கூறிவருகின்றனர். மைத்திரி-ரணில் கூட்டை உருவாக்கியபோதும் தமிழ் மக்களின் நலன் தொடர்பாகப் பேசப்பட்டதென்றும் அதனை வெளிப்படையாகப் பேசுவது இராஜதந்திரம் அல்ல என்றும் கூறியிருந்தனர். தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொறுப்பைத் தனிக் கட்சிகளிடமும் தனிநபர்களிடமும் இவ்வாறு விட்டுவிடுவது மிகவும் ஆபத்தானது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் கூறுவதற்காகப் பல தமிழ்த்தேசியக் கட்சிகள் கூட்டுச்சேர்ந்துள்ளன. இக்கட்சிகளின் கூட்டில் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் இப்போது புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. இவை வடக்குக்கிழக்கு இணைப்பை ஒருபோதும் ஆதரித்தவை அல்ல. தொடர்ந்தும் எதிரான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வருகின்றன. இந்நிலையில் முஸ்லிம் கட்சிகளை இணைத்துக் கொண்டமை ஏற்கனவே பலவீனமாகவுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை மேலும் பலவீனப்படுத்துவதற்கான ஒரு நிகழ்ச்சி நிரலோ என்றே எண்ணத்தோன்றுகிறது. அவ்வாறுதான் அது அமையவும் போகின்றது.

கூட்டுக்கட்சிக்குள்ளே கட்சிகளாகவும், கட்சிகளுக்குள்ளே தனித்தனித் தலைவர்களாகவும் பிரிந்து நிற்பது ஈழத் தமிழர்களைக் கையாளுவதற்குச் சர்வதேசத்துக்கு இலகுவானதாக இருக்கும். ஆனால், ஈழத்தமிழ் இனத்துக்கு மிகவும் ஆபத்தானது. இந்நிலையிலேயே தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்டு கட்சிகளை ஒருங்கிணைக்கவும், சர்வதேசங்களைத் தமிழ்த் தரப்புக் கையாளுவதற்கான நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கும் சிவில் சமூகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இச்சிவில் சமூக அமைப்பு கடந்த காலத்தில் கட்டப்பட்ட சிவில் சமூக அமைப்புகளின் தோல்விகளைக் கருத்திற்கொண்டு அரசியல் கட்சிகளின் பினாமிகளாக அல்லாமலும் இவ்வமைப்பின் மூலம் கிடைக்கும் வெளிச்சத்தைப் பயன்படுத்தித் தனிப்பட்ட அரசியல் ஆதாயம் தேடுவனவாக அல்லாமலும் இருக்க வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இராஜதந்திரம் என்று கூறுவதை நாங்கள் தொடர்ச்சியாக ஏற்கப் போகிறோமா?

## தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன்

டிசம்பர் 26, 2021

ஒரு கட்சியிலேயே இருக்கக் கூடிய ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியாமல் என்ன நாங்கள் பேசப் போகின்றோம் என்பது தெரியாமல் போய்விட்டு வந்து இராஜதந்திரம் என்று கூறுவதை நாங்கள் தொடர்ச்சியாக ஏற்றுக் கொண்டு இருக்கப் போகிறோமா என தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் கேள்வியெழுப்பினார்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் உரையரங்கொன்று இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஒரு சிலர் இராஜதந்திரம் என்று கூறுகின்றனர். அவர்கள் நல்லாட்சி அரசின் காலப்பகுதியிலும் அதனையே கூறினர். இன்றும் அதனையே கூறுகின்றனர்.

இராஜதந்திரம் என்பது நாடுகளுக்குரியது. நாடுகள் பல்வேறு வகையான அழுத்தங்களைப் பிரயோகித்து தங்களுக்கு வேண்டியதை சாதித்துக் கொள்வதையே இராஜதந்திரம் என்பர். ஆனால் விடுதலைப் புலிகள் இருந்த காலப்பகுதியில் அவர்கள் அரசுக்கான கட்டமைப்புக்களை கொண்டிருந்ததன் காரணமாக இராஜதந்திர பக்கம் இருந்தது. அன்டன் பாலசிங்கம் அந்த பாத்திரத்தை செய்திருந்தார். இன்று எல்லோருமே விடுதலைப் புலிகளாகவோ விடுதலைப் புலிகளின் தலைவராகவோ அன்டன் பாலசிங்கம் போலவோ ஆகிவிட முடியாது.

ஒரு கட்சியிலேயே இருக்கக் கூடிய ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியாமல் என்ன நாங்கள் பேசப் போகின்றோம் என்பது தெரியாமல் போய்விட்டு வந்து இராஜதந்திரம் என்று கூறுவதை நாங்கள் தொடர்ச்சியாக ஏற்றுக் கொண்டு இருக்கப் போகிறோம் என்ற கேள்வி எழுகின்றது. அரசியல் கட்சிகளின் கூட்டு எதையும் சாதித்து விடப் போவதில்லை. நாளை தேர்தல் நடந்தால் இந்த கட்சிகள் எல்லாம் எதிரும் புதிருமாக இருக்கும்.

13வது திருத்தம் தொடர்பாக கட்சிகள் ஒன்று கூடுகின்ற பொழுதே உள்ளூராட்சி சபை வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அந்த கட்சிகள் ஆளாளுக்கு குழிபறித்து தோற்கடிக்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்களிலேயே இந்த கட்சிகள் இவ்வாறு செயற்பட்டால் நாடாளுமன்றத்திலும் மாகாண சபையிலும் இந்த கூட்டு எந்தளவு தூரத்திற்கு செயற்படப் போகிறது. ஆகவே இந்த இடத்தில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு மற்றும் பிரசன்னமும் அவசியம்.

அவர்களது கை ஓங்கி இருக்கின்ற பொழுது தான் கட்சி சார் அரசியல்வாதிகளை ஓரளவு கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடியும்.

எங்களிடம் கட்சிகள் இருக்கின்றது. தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தேசிய தலைவர் என்று இல்லை. ஆனால் கட்சிகளின் தலைவர்கள் தங்களை தேசிய தலைவர்களாக கற்பிதம் செய்து கொள்வது அபத்த

# தமிழர்களின் கலை, பண்பாடு வரலாற்றில் விடுதலைப் புலிகளின் காலம் பொற்காலம்

டிசம்பர் 25, 2021

தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலம் பொற்காலம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.




25.12.2021 அன்று ஆழிப்பேரலை நினைவாக கலாலயம் வெளியீடு செய்த இசைக்கபி கலையக உருவாக்கத்தில் உருவான "விழுதொலிகள்" இறுவட்டினை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் போர் முடிந்ததன் பின்னரான காலப்பகுதியில் கலைஞர்கள் தங்களின் படைப்புக்களுக்கு உரித்தான அந்தஸ்து கிடைப்பதில்லை என்பதான ஒரு குற்றச்சாட்டு கலைஞர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. உண்மை தான் எம்மவர்கள் இந்த மண்ணில் இருந்தபோது கலைகளையும் கலைஞர்களையும் வளர்க்க விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் என்ற பிரிவு உருவாக்கப்பட்டு அதனூடாக பாரம்பரிய கலைகளையும் பண்பாட்டையும் வளர்த்திருந்தார்கள். தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலமே பொற்காலம் ஆகும்.

கலைஞர்களும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆற்றிய பங்கும் மகத்தானது. தங்களின் கலைப்படைப்புக்களால் போராட்டத்தின் பக்கம் மக்களை எழுச்சி கொள்ள வைத்தவர்கள் என்றால் மிகையில்லை. கலைஞர்களும் இந்த மண்ணில் மீளும் சிறப்பாக உரிய அந்தஸ்த்தோடு வாழும் காலம் உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# ஆழிப்பேரலையால் உயிர்நீத்த உறவுகளின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழீழம் மற்றும் தமிழ்நாடு 26.12.2021








முல்லைத்தீவு – கள்ளப்பாடு



தமிழ் நாடு



உடுத்துறை





பாசிக்குடா



மன்னார் – பேசாலை

# அரசுக்கு துணைபோகாமல், நீதியை நிலைநாட்டுங்கள்! சர்வதேசத்திடம் காணாமல் போனவர்களின் உறவுகள் கோரிக்கை

டிசம்பர் 31, 2021



சர்வதேசசமூகம் இலங்கை அரசுக்கு துணை போகாமல் எமக்கான நீதியினை வழங்கமுன் வரவேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் வவுனியா பழையபேருந்து நிலையத்திற்கு முன்பாக இன்று (வியாழக்கிழ்மை) காலை ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,
“எமக்கான நீதி கிடைக்காத நிலையிலும் 12 வருடங்களாக தொடர்ச்சியாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

பெறுமதிமிக்க எமது உயிர்களை தொலைத்துவிட்டு நாம் வீதியாக வீதியாக போராடிக்கொண்டு சொல்லொணா துன்பங்களையும்,அவலங்களையும் அனுபவித்து வருகின்றோம். வருடங்கள் மாத்திரமே கடந்து செல்கின்றது எமக்கான நீதி மட்டும் கிடைக்கப்பெறவில்லை.

போரிற்கு பின்னர் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட பிள்ளைகளையே நாம் கோரிநிற்கின்றோம். இழப்பீட்டையோ வாழ்வாதாரத்தையோ கேட்டுநாம் போராடவில்லை.

சர்வதேச சமூகம் எமக்கான நீதியினை வழங்காமல் இலங்கை அரசுக்கு துணைபோகின்றதா என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது, எனவே நீங்கள் கண்மூடியிருக்காமல் எமது நிலைகருதி சாட்சிகளான நாங்கள் இருக்கும் போதே எமக்கான நீதி கிடைப்பதற்குரிய பொறிமுறைகளை சர்வதேசசமூகம் ஏற்ப்படுத்த வேண்டும்.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எங்கே எங்கே உறவுகள் எங்கே, ஆணைக்குழுக்களும் வேண்டாம், விசாரணையும் வேண்டாம், பொய்யான அறிக்கையை வழங்கி சர்வதேசத்தையும் தமிழர்களையும் ஏமாற்றாதே, இனப்படுகொலையாளியை காப்பாற்ற நிறைப்பவர்கள் தமிழினத்துரோகிகள், போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

# கனடிய செய்திகள்

## கனடாவிற்கு வெளியே அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்ளவேண்டாம் –கனடா அரசாங்கம்–

டிசம்பர் 16, 2021

கனடாவிற்கு வெளியே அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்ளவேண்டாம் - கனடா அரசாங்கம் எச்சரிக்கை!

ஒமிக்ரோன் பரவல் அச்சம் காரணமாக கிறிஸ்மஸ் விடுமுறைகாலத்தில் தனது மக்களை வெளிநாடுகளிற்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம் என கனடா கேட்டுக் கொண்டுள்ளது.

ஒமிக்ரோன் பரவல் எங்களிற்கு மோசமான அச்சத்தை ஏற்படுத்துகின்றது தொற்று அதிகரிப்பு போக்குவரத்து கட்டுப்பாடுகள் குறித்த அச்சம் ஏற்பட்டுள்ளது என கனடா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பயண ஆலோசனைகளை நான்கு வாரங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்போவதாகத் தெரிவித்துள்ள



அதிகாரிகள் எனினும் பெருந்தொற்று நிலைமை மோசமடைந்தால் கட்டுப்பாடுள் விதிக்கப்படலாம் என தெரிவித்துள்ளனர்.

கனடாவிற்கு வெளியே அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்ளவேண்டாம் என எங்கள் அரசாங்கம் தனது பிரஜைகளைக் கேட்டுக்கொள்கின்றது என சுகாதார அமைச்சர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிற்கு செல்வதற்கு திட்டமிட்டுள்ள பிரஜைகளிற்கு தற்போது பயணம் மேற்கொள்வதற்கான நேரமில்லை என நான் தெளிவாக தெரிவிக்க விரும்புகின்றேன் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் ஒமிக்ரோன் பரவிவருவது எங்களை அச்சப்படவைத்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் கனடா பிரஜைகள் பாதிக்கப்படலாம் அல்லது நாடு திரும்ப முடியாத நிலைக்கு தள்ளப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## காணமல் போன தமிழ் இளைஞனை கண்டுபிடிக்க உதவுமாறு பீல் பிராந்திய காவல்துறையினர் பொதுமக்களிடம் வேண்டுகோள்

டிசம்பர் 10, 2021



காணாமல் போன தமிழ் இளைஞனை கண்டபிடிக்க உதவுமாறு பீல் பிராந்திய காவல்துறையினர் பொது மக்கள உதவியை நாடியுள்ளனர்.

24 வயதான நிவேதன் அழகேஸ்வரன் என்ற இளைஞன் கடந்த 2021 டிசம்பர் 03 ஆம் திகதி முல் காணாமல் போயுள்ளார்

நிவேதன் அழகேஸ்வரனை கண்டுபிப்பதற்கு 21 குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகள் பொதுமக்களிடம் உதவி நாடியுள்ளனர். இவரை கடைசியாக பிரம்ரன் நகரில் Calderstone Road & Lexington Road பகுதியில் காணப்பட்டார். எனவும். இவர் கடைசியாக 2008 ஆம் ஆண்டு சிவப்பு நிற Nissan Roughe SUV யினல் சென்றதாகவும் அறியப்படுகிறன்றார். காவல்துறையினரும் குடும்ப உறவுகளும் அவரது நலனில் அக்கறை கொண்டுள்ளனர்.



பில் பிராந்தியத்தின் 21பிரிவைச் சேர்ந்த குற்றப் புலணாய்வுப்ப அதிகாரிகள் இவர் இருக்கும் இடத்தைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் 905-453-3311, Ext 2133 என்ற எண்ணில் அழைக்குமாறு பொது மக்களிடம் கேட்டுக்கொள்கின்றனர்.

**கார்த்திகைப் பூ நாம் தொடுவதற்கோ, பார்ப்பதற்கோ அச்சம் கொள்ள வேண்டிய பூவல்ல. அது நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு பூ... இறை வழிபாட்டுக்கு உரிய பூவும், மருத்துவச்சொடியுமாகும். தமிழ் நாட்டு தேசிய பூ, தமிழீழ தேசிய பூ...இதை இறைவனுக்கு சாற்றுதல் தவறு இல்லை. இது சங்க காலம் தொட்டு தமிழர்களின் வாழ்வியல் பூ... சிந்தித்து செயல்படுங்கள் கனடா தமிழ் சமூகமே. நன்றி**

# தமிழக செய்திகள்



## தமிழீழத்தில் சீனத்தூதர்: ஈழத்தமிழரை வளைக்கும் சீனா இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து! -ராமதாஸ்

டிசம்பர் 19. 2021

இலங்கைத் தமிழர்களை ஆதரித்து அவர்களை வடக்கு



இலங்கையில் அதிகாரம் பெற்றவர்களாக மாற்ற வேண்டும் என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்குப் பகுதியில் சீனா மேற்கொண்டு வரும் முயற்சிகள் எதிர்காலத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இலங்கைக்கான சீனத் தூதர் கி சென்ஹாங் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார். அங்கு வாழும் ஈழத் தமிழர்களுக்கும், தமிழர் அமைப்புகளுக்கும் அவர் ஏராளமான உதவிகளை வாரி வழங்கியிருக்கிறார். இலங்கைத் தமிழர்களை படுகொலை செய்ய உதவிய சீனா, ஈழத்தமிழர்களுக்கு உதவுவது இயல்பானது அல்ல. இலங்கைக்கான சீனத் தூதராக நியமிக்கப்பட்டுள்ள கி சென்ஹாங், கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய 3 நாட்களும் ஈழத்தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மாகாணத்தில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வேட்டி அணிந்து சென்ற சீனத் தூதர், அங்கு இந்து சமய முறைப்படி வழிபாடு நடத்தியதுடன், கோயிலுக்கு நன்கொடைகளையும் வழங்கியுள்ளார்.

கோயிலுக்கு வெளியில் தமிழர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கினார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தீயால் அழிந்து சீரமைக்கப் பட்ட நூலகத்திற்கு சென்ற சீனத் தூதர், நூலகப் பயன்பாட்டுக்கு மடிகணினி உள்ளிட்ட உதவிகளை வழங்கியதுடன், நூலகத்தை டிஜிட்டல் மயமாக்கவும் சீனா உதவும் என்று அறிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கும் மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள், உணவு தானியங்கள் என ரூ.75 லட்சத்திற்கும் கூடுதலான உதவிகளை சீனத் தூதர் சென்ஹாங் வழங்கியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புப் போருக்கு அனைத்து வகைகளிலும் உதவியது சீன அரசு தான். அப்படிப்பட்ட சீன அரசு இப்போது திடீரென ஈழத் தமிழர்கள் மீது பாசம் காட்டுவதன் பின்னணியில் திட்டமிடப்பட்ட கணக்குகள் உள்ளன. சீனாவையும், சிங்களத்தையும் எதிரியாகப் பார்க்கும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தனக்கு நற்பெயரை ஏற்படுத்திக் கொண்டு, இலங்கையின் வடக்குப் பகுதியிலும் கால் பதிக்க வேண்டும் அதன் மூலம் இந்தியாவுக்கு நெருக்கடி தர வேண்டும் என்பது தான் சீனாவின் நோக்கமாகும். அதன் ஒரு கட்டமாகத் தான் சீனத் தூதர் தமிழராகவே மாறி ஆலய வழிபாடு, மீனவர்களுக்கு உதவி உள்ளிட்ட உதவிகளை வழங்கி, நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதற்கான நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறார்.

சீனாவின் இந்த திடீர் கரிசனத்திற்கு, இந்திய மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கையால் சீனாவுக்கு ஏற்பட்ட பின்னடைவும் ஒரு காரணமாகும். தமிழகத்திற்கு அருகில் உள்ள நெடுந்தீவு, அனலைத் தீவு, நயினாத் தீவு ஆகிய 3 தீவுகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை சீனாவின் சினோசர் ஈ- இடெக்வின் நிறுவனத்திற்கு கடந்த ஜனவரியில் இலங்கை வழங்கியது.

இத்திட்டங்களை செயல்படுத்தும் போர்வையில் தமிழ் நாட்டை சீனா கண்காணிக்கும் ஆபத்து உள்ளதாகவும் இந்தியா இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த பிப்ரவரி 9-ஆம் தேதி அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதன்பின்னர் அத்தீவுகளில் மின்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ரூ.87 கோடியை இந்தியா இலங்கைக்கு இலவசமாகவே கொடுத்ததால், அத்திட்டத்திலிருந்து சீனாவை இலங்கை வெளியேற்றி விட்டது. இந்தியாவின் அழுத்தம் தான் அதற்கான காரணம் என்று மறைமுகமாக குற்றம்சாட்டிய சீனா, இப்போது மாலத்தீவுகளில் கலப்பு மின்திட்டங்களை செயல்படுத்த ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்தியாவை கண்காணிப்பதற்கான முதல் முயற்சி தோல்வியடைந்து விட்ட நிலையில், ஈழத்தமிழர்களின் ஆதரவு இல்லாமல் வடக்கு இலங்கையில் கால்பதிக்க முடியாது என்பதால் தான், இலங்கைத் தமிழர்களை வளைக்கும் முயற்சியை சீனா மேற்கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பயணம் மேற்கொண்ட சீனத் தூதர் சென்ஹாங், பருத்தித்துறைக்கு சென்று அங்குள்ள சிங்கள கடற்படையினரிடம் "இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரம்?" என்று கேட்டறிந்ததும், அங்கிருந்து டிரோன்கள் மூலம் இந்திய எல்லையை கண்காணித்ததும், கடைசியாக தமிழக எல்லைக்கு அருகில் இராமர் பாலத்தின் மூன்றாவது மணற்திட்டு வரை படகில் பயணித்து பார்வையிட்டுச் சென்றுள்ளதும் பொழுதுபோக்குவதற்காக அல்ல் இந்தியாவை கண் காணிப்பதற்கான உத்திகளை வகுப்பதற்காகத் தான் என்பதை அனைவரும் அறிவார்கள்.

இலங்கைத் தமிழர்களை வளைத்து, வடக்கு இலங்கையில் கால் பதித்து விடலாம் அதன்பின் இந்தியாவுக்கு தொல்லை தரலாம் என்று சீனா நினைத்தால், அந்த முயற்சிக்கு இலங்கைத் தமிழர்கள் துணை போக மாட்டார்கள். இலங்கைக்கு ஆதரவாக ஈழத்தமிழர்களுக்கு எதிரான செயல்களை இந்தியா கடந்த காலங்களில் செய்துள்ளது என்றாலும் கூட, இந்தியாவின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எத்தகைய சதித்திட்டத்திற்கும் இலங்கைத் தமிழர்கள் துணைபோக மாட்டார்கள். அதேநேரத்தில் சீனாவுக்கு வழங்கியிருந்த மின் திட்ட ஒப்பந்தத்தை இலங்கை திரும்பப் பெற்று விட்டது என்பதாலேயே இலங்கையை நம்ப முடியாது. நாளையே சீனா இன்னும் பல மடங்கு நிதி அளித்தால் இந்தியாவுக்கு துரோகம் செய்ய இலங்கை தயங்காது.

இலங்கையின் வடக்குப் பகுதியில் சீனா மேற்கொண்டு



வரும் முயற்சிகள் எதிர்காலத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. இதைக் கருத்தில் கொண்டு இந்தியா பாதுகாப்பு உத்திகளிலும், வெளியுறவுக் கொள்கையிலும் மாற்றங்களைச் செய்ய வேண்டும். கச்சத் தீவை மீட்டு இந்தியாவுக்கான கண்காணிப்பு மையமாக மாற்றிக் கொள்வதுடன், இலங்கைத் தமிழர்களை ஆதரித்து அவர்களை வடக்கு இலங்கையில் அதிகாரம் பெற்றவர்களாக மாற்ற வேண்டும்" என்று அதில் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## இராமேசுவரம் மீனவர்கள் 42 பேர் சிறிலங்கா கடற்படையால் சிறை பிடிப்பு

டிசம்பர் 19, 2021



இராமேசுவரத்தில் கடந்த வாரம் சிறிலங்கா சிங்கள கடற்படை மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய நிலையில் தற்போது அவர்கள் 42 பேரை சிறைபிடித்து சென்றிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நெடுந்தீவு பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த இராமேசுவரம் மீனவர்கள் 42 பேரை சிறீலங்கா கடற்படை சிறைபிடித்து சென்றது. மேலும் அவர்களது 6 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்தனர். இதனால் சக மீனவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் இன்று காலை இராமேசுவரம் கரை திரும்பியதும் இதுபற்றி தெரிவித்தனர்.

இதனால் மீனவ கிராமங்களில் பதட்டம் உருவாகி உள்ளது. சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை யாழ்ப்பாணம் துறை முகத்திற்கு சிறீலங்கா கடற்படையினர் கொண்டு சென்றனர். பின்னர் அங்கு படகுகளை நிறுத்தி விட்டு மீனவர்களை மட்டும் தலைமன்னார் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்



# திருப்புல்லாணி அருகே இராஜராஜசோழன் பெயர் பொறித்த ஈழக்காசுகள் கண்டுபிடித்த அரசுப் பள்ளி மாணவி முனீஸ்வரி

டிசம்பர் 14, 2021



மாணவி கண்டெடுத்த முதலாம் ராஜராஜசோழன் பெயர் பொறித்த 3 ஈழக்காசுகளை படத்தில் காணலாம்.

இராமநாதபுரம் மாவட்டம், டிசம்பர் 14 ஆம் திகதி திருப்புல்லாணி அருகே கோரைக்குட்டத்தில் இராஜராஜசோழன் பெயர் பொறித்த ஈழக்காசுகளை பிளஸ் - 2 அரசுப் பள்ளி மாணவி கு. முனீஸ்வரி கண்டெடுத்தார்.

**3 ஈழக்காசுகள் கண்டெடுப்பு**

திருப்புல்லாணி சுரேஷ் சுதா அழகன் நினைவு அரசு மேல்நிலைப்பள்ளியில் தொன்மை பாதுகாப்புமன்ற மாணவர்களுக்கு பழமையான காசுகள், பானை ஓடுகளை அடையாளம் காணவும், கல்வெட்டுகளைப் படிக்கவும், படியெடுக்கவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள பழங்காலப் பொருட்கள், காசுகளை விடுமுறை நாட்களில் ஆர்வத்தோடு தேடி கண்டுபிடித்து வருகின்றனர். சில மாதங்களில் சீனப்பானை ஓடுகளை மாணவர்கள் கண்டெடுத்தனர்.

இந்நிலையில் இப்பள்ளியில் பிளஸ் - 2 படித்து வரும் திருப்புல்லாணியைச் சேர்ந்த முனீஸ்வரி என்ற மாணவி முதலாம் இராஜாராஜசோழன் பெயர் பொறித்த 3 ஈழக்காசுகளை கண்டெடுத்துள்ளார். இதனை பள்ளியின் தொன்மைப் பாதுகாப்பு மன்றச் செயலரும், தொல்லியல் ஆய்வாளருமான வே. ராஜகுரு பாராட்டினார். இது குறிந்து அவர் கூறியதாவது :-

**போர் வெற்றியை கொண்டாட**

"வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வில் காசுகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. மன்னர்கள் தங்களின் போர் வெற்றியைக் கொண்டாட சிறப்பு நாணயங்களை வெளியிட்டு வந்துள்ளார்கள். அவ்வாறு போர் மூலம் இலங்கையை முதலாம் இராஜராஜ சோழன் வெற்றி கொண்டதன் பின்னணியில் ஈழக்காசுகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை முதலாம் இராஜராஜ சோழன் முதல் முதலாம் குலோத்துங்க சோழன் காலம்வரை பயன்பாட்டில் இருந்துள்ளன. பொன், வெள்ளி, செம்புகளில் இக்காசுகள் வெளியிடப்பட்டுள்ளன. செம்பால் ஆன ஈழக்காசு, ஈழக் கருங்காசு எனப்படுகிறது.

இங்கு கண்டெடுக்கப்பட்ட 3 காசுகளும் செம்பால் ஆன ஈழக்கருங்காசுகள் ஆகும். இக்காசுகளின் ஒருபக்கம் கையில் மலரை ஏந்தியவாறு ஒருவர் நிற்க, அவரது இடப்பக்கம் நான்கு வட்டங்கள் உள்ளன. அவற்றின் மேலே பிறையும் கீழே மலரும் உள்ளன. வலது பக்கம் திரி சூலம், விளக்கு உள்து. மறுபக்கம் கையில் சங்கு ஏந்தி ஒருவர் அமர்ந்திருக்கிறார். அவரின் இடதுகை அருகே தேவநாகரி எழுத்துகளில் ஸ்ரீராஜராஜ" என மூன்று வரிகளில் எழுதப்பட்டுள்ளது. இக்காசில் உள்ள மனிதன் இலங்கை காசுகளில் உள்ள உருவத்தை ஒத்திருக்கிறான். ஈழக்காசுகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரியபட்டினம், தொண்டி, களிமன்குண்டு, ஆழகன்குளம் உள்ளிட்ட பல கடற்கரை ஊர்களில் கிடைத்துள்ளன.

**பழக்கம்**

இலங்கையின் பயன் பாட்டுக் காக அச்சடிக்கப்பட்ட இவை சோழர்களின் ஆளுகையின் கீழ் இருந்தபாண்டிய நாட்டுப் பகுதிகளிலும் புழக்கத்தில் இருந்துள்ளது. ஏற் கனவே இப்பள்ளி மாணவர்கள் பஞ்சந்தாங்கி, தாதனேந் தலில் சோழர்களின் ஈழக்காசுகள், பால்கரையில் டச்சுக் காரர்களின் துட்டு, திருபுல்லாணியில் கச்சி வழங்கும் பெருமாள் எனும் பாண்டியர் காசு, ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை, மலேயா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் புழக்கத்தில் இருந்த காசுகளையும் கண்டெடுத்துள்ளனர்.



முனீஸ்வரி

இவ்வாறு அவர் கூறினார்.

# "இது தமிழக வரலாற்றில் ஒரு மைல்கல்"... முதல்வர் ஸ்டாலினுக்கு அன்பு கலந்த நன்றி கூறிய அற்புதம்மாள்!

டிசம்பர் 24, 2021

நன்னடத்தை அடிப்படையில் ஆயுள் தண்டனை கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்வது பற்றி ஓய்வு பெற்ற நீதிபதி ஆதிநாதன் தலைமையில் 6 பேர் கொண்ட குழு அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று உத்தரவிட்டார்

அதாவது தமிழக சிறைகளில் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் தண்டனை முடித்தும், இதன்கீழ் பயன்பெற முடியாத ஆயுள் தண்டனை சிறைவாசிகள் மற்றும் வயது முதிர்ந்த சிறைவாசிகள். பல்வேறு இணை நோய்கள் உள்ள உடல் நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள் மற்றும் மாற்றுத் திறனாளி சிறைவாசிகள் (விடுதலைக்காக அவர்களால் உருவாக்கப்பட்டதல்ல) ஆகியோர்களின் நிலையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில் கொண்டு தமிழக அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

இது குறித்தான மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் இது தொடர்பாகத் தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் இவர்களின் நிகழ்வுகளை ஆராய்ந்தும், அவர்களின் முன் விடுதலைக்கு உரியப் பரிந்துரை வழங்க ஏதுவாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் என். ஆதிநாதன் தலைமையின் கீழ் ஆறு பேர் அடங்கிய



ஒரு குழு அமைக்கத் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக அரசின் இந்த அறிவிப்புக்கு பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்ட அவர் கூறுகையில், சிறை என்பது தவறிழைத்த மனிதனை நல்வழிப்படுத்தி சமுகத்தில் கலக்க தகுதியானவனாக மாற்றுவதற்கே என்பது நாகரீக சமூகம் ஏற்கொண்ட கருத்தியல் ஆகும். அதிலும் குற்றமற்றவர்கள் கூட சில நேரங்களில் நீதிப்பிழையால் சிறை தண்டனை அடைந்து விடும் நேர்வுகளை இந்த உலகம் கண்டிருக்கிறது என்பதால் சிறைகள் ஒருபோதும் பழிவாங்கும் இடமாக இருக்க கூடாது என்பதே நியதி.

"Hate Crimes: Not Criminals" என்பது மகாத்மா காந்தியடிகளின் புகழ்பெற்ற மேற்கோள். ஒரு மனிதனை 8 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் வைத்திருப்பதே அதிகப்படியானது எனறார் மறைந்த நீதியரசர் வி.ஆர். கிருட்டிணய்யர். ஒரு நாடு நாகரீகமடைந்து விட்டது என்பதை சிறைவாசிகளை அவ்வரசு எவ்வாறு கையாள்கிறது என்பதில்தான் அடங்கியிருக்கிறது என சொல்லப்படுகிறது.

***தமிழக வரலாற்றில் மைல்கல்***

ஆயுள் சிறை என்பது அரசின் தண்டனை குறைப்பு அதிகாரத்துக்கு உட்பட்டதே என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் பல்வேறு தீர்ப்புகளில் தெளிவுபடுத்தி விட்டது. சிறை விதிகளின்படி இவ்வதிகாரத்தை பயன்படுத்தி முன்விடுதலை பெற தகுதி பெற்றும் சிறை சீர்திருத்தங்கள் குறித்து புரிதலற்ற அதிகாரிகள் கடந்த காலங்களில் விடுதலைக்கு தடையாக இருந்தனர். இதனையெல்லாம் உணர்ந்தவராக ஆயுள் சிறைவாசிகள் முன் விடுதலை தொடர்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு தமிழக வரலாற்றில் ஒரு மைல்கல் என்று அற்புதம்மாள் கூறியுள்ளார்.

# ராஜீவ்காந்தி கொலை வழக்கு: நளினிக்கு ஒரு மாதம் பரோல் வழங்க முடிவு

டிசம்பர் 23, 2021

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் சிறையிலுள்ள நளினிக்கு ஒரு மாதம் பரோல் வழங்க முடிவு செய்திருப்பதாக தமிழக அரசு தெரிவித்திருக்கிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் கைதான நளினிக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையிலிருக்கிறார். இந்நிலையில் அவருடைய தாயார் பத்மா தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும், தனது மகளுக்கு பரோல் வழங்க வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அதில் தனது மகளுக்கு பரோல் வழங்க அரசுக்கு உத்தரவிடவேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார். அந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது பரிசீலணையில் இருப்பதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் அரசிடம் விளக்கம் கேட்டிருந்தனர். இதற்கிடையில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் நளினியின் தாயார் மனு ஒன்றை அளித்திருந்தார்.



இந்நிலையில் இன்று அந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஜின்னா ஆஜராகி நளினியின் தாயாரின் மனு பரிசீலிக்கப்பட்டு 30 நாட்கள் பரோல் வழங்க முடிவெடுக்கப் பட்டுள்ளதாகவும், இதற்கான உத்தரவு நேற்று பிறப்பிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஜின்னாவின் விளக்கத்தையேற்று நளினியின் தாயார் வழக்கு இன்று முடித்து வைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பேரறிவாளனுக்கு பரோல் வழங்கப்பட்டிருந்த நிலையில் தற்போது நளினிக்கும் 30 நாட்கள் பரோல் வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

**மதுரை மாவட்டம்
உச்சப்பட்டி
இலங்கைத் தமிழர்கள்
மறு
வாழ்வு முகாமில்
வசிக்கும்
செல்வி P.லோகலட்சுமி
கடந்த மாதம் (28-11-2021)
நடைபெற்ற
ஒற்றை சிலம்பம்
சுற்றிக்கொண்டே 5 K.M
தொலைவு
நடந்துச் சென்று
உலகசாதனை
படைத்துள்ளார்.**






# "விடை கொடு எங்கள் நாடே கடல் வாசல் தெளிக்கும் வீடே..." பாடலை பாடிய மணிக்க விநாயகம் (78) ஐயா அவர்கள் 26.12.2021உடல் நலக்குறைவால் காலமானார்

டிசம்பர் 26, 2021



விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்போமா

உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும்
ஊர்வலம் போகின்றோம்ஓஹோ

விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்போமா

உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும்
ஊர்வலம் போகின்றோம்..ஓஹோ..

கந்தல் ஆனாலும் தாய் மடி போல்
ஒரு சுகம் வருமா வருமா
கந்தல் ஆனாலும் தாய் மடி போல்
ஒரு சுகம் வருமா வருமா

சொர்க்கம் சென்றாலும் சொந்த ஊர் போல்
ஒரு சுதந்திரம் வருமா வருமா
கண் திறந்த தேசம் அங்கே
கண் மூடும் தேசம் எங்கே..
கண் திறந்த தேசம் அங்கே
கண் மூடும் தேசம் எங்கே

பிரிவோம் நதிகளே
பிழைத்தால் வருகிறோம்
மீண்டும் தாயகம் அழைத்தால் வருகிறோம்
கண்ணீர் திரையில் பிறந்த மண்ணை

கடைசியாக பார்க்கின்றோம்

விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்போமா

உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும்
ஊர்வலம் போகின்றோம்ஓஹோ.

எங்கள் சங்கீதம் பிள்ளையின்
அழுகையிலே தொலைத்தோம்
எங்கள் இளந்திங்கள் வெடி குண்டு
புகையிலே புதைத்தோம்

முன்னிரவில் மலரில் கிடந்தோம்
பின்னிரவில் முள்ளில் கிழிந்தோம்
கடல் நீர் பறவைகள்
இருந்தால் சந்திப்போம்
வானமே மலைகளே
வாழ்ந்தால் சந்திப்போம்
தலையில் கொஞ்சம் நெஞ்சில் அதிகம்
சுமைகள் சுமந்து போகின்றோம்

விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்போமா

உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும்
ஊர்வலம் போகின்றோம்ஓஹோ.

# இனியொரு தடவை கடற்கோள் சூழ்ந்தால் இறப்பு எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருக்கும் கடற்கோள் நினைவுதினச் செய்தியில் ஐங்கரநேசன் எச்சரிக்கை

டிசம்பர் 25, 2021



பதினேழு வருடங்களுக்கு முன்னால், 2004 டிசம்பர் 26ஆம் திகதி இந்து சமுத்திரக் கரையோர நாடுகளைக் கடற்கோள் சூழ்ந்ததில் இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருந்தனர். இலங்கையில் மட்டும் முப்பத்திஜயாயிரம் பேர் வரையில் கொல்லப் பட்டிருந்தனர். இனியொரு தடவை கடற்கோள் சூழ்ந் தால் இறப்பு எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருக்கும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

கடற்கோள் நினைவுநாளை முன்னிட்டு அவர் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கைப் பேரிடரான கடற்கோளைத் தடுக்க முடியாது போனாலும் அதனால் ஏற்படும் பாதிப்புகளைத் தணிவிக்க முடியும். இலங்கையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கண்டல் மரங்கள் அடர்ந்திருந்த கப்பு ஹென்வல கிராமத்தில் கடற்கோளால் இரண்டே இரண்டு உயிர்களை மட்டுமே பறிக்க முடிந்திருந்தது. ஆனால், அதே மாவட்டத்தில் கண்டல்கள் அழிக்கப் பட்ட வாண்டுறுப்பா கிராமத்தில் ஆழிப்பேரலை ஆறாயிரம் உயிர்களை வாரிச் சென்றுள்ளது. கடல் அலைகளின் சீற்றத்தை 90 விழுக்காடு குறைத்து விடும் வல்லமை கண்டற் காடுகளுக்கு உண்டு. ஆனால், கடற்கோள் "இயற்கையை நீ அழித்தால் இயற் கையால் நீ அழிவாய்" என்று உலகு அதிரப் போதித்த பின்பும் பட்டும் திருந்தாத பாவிகளாக இயற்கையை நாம் தொடர்ந்தும் சூறையாடி வருகிறோம்.

கடலோரக் கண்டற்காடுகளை நாம் மென்மேலும் கபளீகரம் செய்துவருகிறோம். கடற்கரையோர மணல் மலைகள் தினம் தினம் கொள்ளை போகின்றன. சுண் ணக் கற்பாறைகள் அகல பாதாளத்துக்குத் தோண்டப் படுகின்றன. கடலருகே இறாற் பண்ணைகள் அமைக் கப்படுகின்றன. கடல் முருகைக் கற்பாறைகள் அழிக்கப் படுகின்றன. இழுவைப் படகுகள் கடலடி வளங்களை இடையறாது துவம்சம் செய்து வருகின்றன. இப்படி, தலைமுறை தலைமுறையாக வளமூட்ட வேண்டிய கடலையும் கடல் சார்ந்த வளங்களையும் தொடர்ந்தும் சூறையாடி வருகின்றோம். இவற்றுக்கும் மேலாக நாம் வளியில் குவித்துக்கொண்டிருக்கும் கரிக்காற்று பூமி யைச் சூடுபடுத்துவதால் கடல் மட்டம் உயர்ந்து வரு கிறது.

மிகப்பெரும் மனிதப் பேரழிவை நிகழ்த்திவிட்டு எது வுமே நடவாதது போல உறங்கிக்கிடக்கும் கடல் இன் னொரு முறை பொங்கிச் சீறமாட்டாது என்பதற்கு உத் தரவாதம் எதுவுமில்லை. இன்னுமொரு தடவை கடற் கோள் சூழ்ந்தால் அது ஏற்படுத்தும் அழிவு முன்பைவிட பன்மடங்கானோரைப் பலியெடுக்கும் பேரழிவாகவே அமையும். எனவே, கடற்கோளின் படிப்பினைகளை ஏற்று இயற்கையோடு இசைவுற வாழ்ந்து, இயற்கை வளங்களைப் பாதுகாத்து, அளவோடு நுகர்ந்து வள மோடு வாழ்வோமெனக் கடற்கோள் நினைவுநாளில் உறுதியேற்போம். இதுவே கடற்கோளில் மாண்ட நம் உறவுகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ் சலியாக அமையும்.

# உலக செய்திகள்

## பிலிப்பைன்ஸ் நாட்டை சூறாவளி புயல் தாக்கியதில் 18 பேர் பலி

டிசம்பர் 18, 2021

பிலிப்பைன்ஸ் நாட்டை சூறாவளி புயல் கடுமையாக தாக்கி சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறது. 'ராய்' என்று பெயரிடப்பட்ட சூறாவளிப் புயல் பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளைத் தாக்கியது.

அந்தப் புயல் சியார் கோவில் உள்ள ஒரு தீவில் கரையைக் கடந்தது. அப்போது அதிகபட்சமாக 195 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது. அதே போல் மின்டனார் மாகாணத்தையும் புயல் தாக்கியது. அங்கும் கடும் சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் ஏராளமான வீடுகளின் மேற்கூரைகள் காற்றில் பறந்து சென்றன.

பலத்த காற்று காரணமாக மரங்கள், மின் கம்பங்கள் சரிந்து விழுந்தன. மேலும் பலத்த மழை கொட்டியதால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

சியார்கோ, சூரிகாவோ ஆகிய பகுதிகளில் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அங்கு மின்சாரம் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. சூறாவளி புயல், வெள்ளத்தில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர். 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து தவிப்புக்குள்ளாகி உள்ளனர்.

மீட்புப் பணியில் இராணுவம், காவல்துறை, தீயணைப்பு துறை, கடலோர காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்த 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்று தங்க வைத்துள்ளனர்.

இது குறித்து துணை ஆளுநர் நிலோ டெமெரி கூறும்



போது, சூறாவளி புயல் சியோர்கோவுக்கு அருகில் உள்ள தீவை தாக்கி அழித்துள்ளது. அங்கு 6 பேர் இறந்துள்ளனர். ஒட்டுமொத்த பலி எண்ணிக்கை 18 ஆக உயர்ந்து இருக்கிறது' என்றார்.

## வடகொரியாவில் மக்கள் சிரிப்பதற்கும், அழுவதற்கும் சில நாட்களுக்கு தடை வடகொரியா உத்தரவு

டிசம்பர் 17, 2021

வடகொரியாவின் முன்னாள் அதிபர் கிம் ஜொங்-இல் மறைந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

இதையடுத்து அந்நாட்டில் 11 நாட்களுக்கு துக்கம் அனுஷ்டிக்க அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜொங்- உன் முடிவு செய்துள்ளார். இதனால் 11 நாட்களுக்கு அந்நாட்டு மக்கள் யாரும் சிரிக்கவும், மது அருந்தவும், கடைகளில் மளிகைப் பொருட்கள் வாங்கவும் கூடாது என அந்நாட்டு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் அனைவரும் எந்தவித கேளிக்கை, கொண்டாட்டங்களிலும் ஈடுபடக் கூடாது. வீடுகளில் யாராவது இறந்தாலும் கூட சத்தம் போட்டு அழக்கூடாது. இந்த உத்தரவை மீறுபவர்கள் குற்றவாளிகளாக கருதப்பட்டு உடனே கைது செய்யப்படுவர் எனத் தெரிவித்துள்ளது.



## வங்கசேசத்தில் பயணிகள் படகில் ஏற்பட்ட தீ விபத்தில் 36 பேருக்கு மேல் பலி

டிசம்பர் 25, 2021



வங்கதேசத்தில் ஆற்றில் சென்று கொண்டிருந்த படகு திடீரென தீப்பற்றி எரிந்ததில் அதில் பயணம் செய்த 36 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் டாகாவில் இருந்து 250 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஜகாகாதி பகுதியில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எம்வி அபிஜான் 10 என பெயரிடப்பட்ட மூன்று அடுக்குகள் கொண்ட படகு 100க்கும் அதிகமான பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்றுள்ளது.

நடு ஆற்றில் சென்று கொண்டிருந்தபோது இன்ஜினில் தீப்பற்றி படகு முழுவதும் பரவியுள்ளது.

அப்போது தீயில் இருந்து தப்பிக்க பலர் ஆற்றில் குதித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுவரை 36 பேரின் உடல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் உயிரிழப்புகள் அதிகரிக்கலாம் என்றும் ஜகாகாதி காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.



## மியான்மர் சுரங்கத்தில் நிலச்சரிவு: 70 பேரின் நிலை என்ன?

டிசம்பர் 22, 2021



மியான்மர் நாட்டில் பச்சை மாணிக்க கற்களை வெட்டியெடுக்கும் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 70 பேர் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மியான்மர் நாட்டில் பகந்த் என்ற இடத்தில் பச்சை மாணிக்கக் கற்களை வெட்டியெடுக்கும் சுரங்கத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் அங்கு வேலைசெய்த 70பேரை காணவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது. சட்ட



விரோதமாக சுரங்கப்பணிகள் நடைபெற்றதால் அங்கு எவ்வளவு பேர் பணிபுரிந்தனர் என்ற விவரம் சரியாக தெரிய வில்லை.

அருகிலிருந்த ஏரியிலிருந்து அடித்துவந்த தண்ணீர் சுரங்கப் பகுதியில் இருந்த கழிவுகளுடன் கலந்து அதில் சிக்கியிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. காலை 7 மணிமுதல் அந்த இடத்தில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதாகவும் தகவல் வெளியாகியிருக்கிறது.

பகந்த் என்ற இடத்திலுள்ள சுரங்கத்தில் ஏற்கெனவே 2020-இல் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி சுமார் 200 பேர் இறந்தனர். தற்போது விபத்து ஏற்பட்ட சுரங்கமே, உலகளவில் பச்சை மாணிக்க கற்கள் அதிகமாக வெட்டியெடுக்கப்படும் இடமாகும்.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private 1st Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4



Allstate. You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும் தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



**Raji Linghan**
Ajax Agency
15 Westney Road, N
**(416) 817 5060**
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316






BOROS CANADIAN PAPER CONVERTING INC.




**Alan Maniam**
Director

**647 299 2450**

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

# பிறமொழிச் சொல் நீங்கிய தமிழ் மொழி

திராவிட மொழிக் குடும்பத்திலே தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளே இலக்கிய வளங்கொண்டன. இவற்றுள் தமிழ் மொழியிலேயே கி.மு. 300 தொடக்கமாக இயற்றப்பட்ட இலங்கியங்கள் உள்ளன. ஏனைய மூன்று மொழிகளுக்கும் பிற்பட்ட காலத்திலேயே இலக்கிய வரலாறு தொடங்குகின்றது. (கல்வெட்டுச் சான்றுகளின்படி, கன்னட மொழியிலே கி.பி. 450 அளவில் காலத்தால் முந்திய இலக்கியப் புனைவு தொடங்கியதெனலாம். தமிழ் மொழியினை விட ஏனைய மூன்று மொழிகளும் பெருமளவிலே வடமொழிச் செல்வாக்குக்கு உட்பட்டன. தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளின் ஒலியமைப்பு, வரிவடிவ அமைப்பு, சொல்லமைப்பு, இலக்கண அமைப்பு ஆகியன வடமொழியின் பாதிப்புக்குட்பட்டன. இந்த வகையில், தமிழ் மொழியில் வடமொழிச் செல்வாக்கு மிகக் குறைந்த அளவிலேயே ஏற்பட்டது. எனிலும், இன்றைய தமிழ் மொழியினை எடுத்து நோக்கும்பொழுது அம்மொழியிலே பெருந்தொகையான பிறமொழிச் சொற்கள் பயின்று வருவதைக் காண்கிறோம். பிறமொழிச் சொற்கள் தமிழிலே வந்துசேர்ந்த வரலாற்றை முதலிலே நோக்குவோம்.

***தமிழில் பிறமொழிச் சொற்கள் வந்த வரலாறு***

எமது பண்டைய தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியமும் சங்க இலக்கியப் பாடல்களும் தோன்றிய காலத்திலே, ஆரியருடைய பண்பாடு தமிழகத்திலே பெருமளவு பரவில்லை. இதனால் இந்நூல்களிலே வடமொழியாகிய சமஸ்கிருதத்தின் சொற்கள் பெருந்தொகையாகக் கலக்கவில்லை. எனினும், இந்நூல்களிலே சில வடசொற்கள் காணப்படுகின்றன. கி.மு. 200 அளவில் தமிழ்நாட்டுக்கும் கிரேக்க உரோமப் பேரரசுக்குமடையே நடைபெற்ற வணிகத்தின் பயனாகச் சில கிரேக்கச் சொற்கள் தமிழிலும், சில தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியிலும் கலக்கலாயின். கி.பி. 300க்குப் பின்னர் எழுந்த தமிழ் நூல்களிலே, படிப்படியாக வடமொழிச் சொற்களின் சேர்க்கை பெருகத் தொடங்கியது. புத்த, சமண சமய கோட்பாடுகளையும், மறைநூற் கோட்பாடுகளையும் உள்வாங்கத் தொடங்கிய தமிழ்ச் சமூகம், அவற்றிற்குரிய சொற்களையும் கடன்வாங்குவது இன்றியமையாத தாயிற்று. கி.பி. 600 அளவில் தமிழ் நாட்டில் ஆட்சி தொடங்கிய பல்லவ மன்னர்கள், வடமொழியை அரச மொழியாகப் பயன்படுத்தினர். கி.பி. 10ம் நூற்றாண்டில் பேரரசு ஒன்றை நிலைநிறுத்திய சோழப் பெருமன்னர்கள் வடமொழிக்கு ஆதரவு நல்கியது மட்டுமன்றித் தங்கள் பெயர்களையும் வடமொழியிலேயே அமைத்துக் கொண்டனர். அரசியல், பண்பாடு ஆகியவற்றின் விளைவாலே பெருந்தொகையான உடசொற்கள் தமிழிலே சேரலாயின.

வடமொழி தவிர்ந்த வேறு சில பிறமொழிகளிலிருந்தும் தமிழிலே சொற்கள் வந்து சேர்ந்தன. திராவிட மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிச் சொற்கள் தமிழிலேு பயின்று வந்தன. இஸ்லாமியருடைய தமிழகப் படையெடுப்புகளின் விளைவாகச் சில உருது, அரபுச் சொற்களும் வந்துசோந்தன. கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியருடைய வரகையால், போர்த்துக்கேய, டச்சு, ஆங்கில, பிரெஞ்சு, ஜெர்மன் சொற்களும் தமிழிலே கலக்கத் தொடங்கின. வடமொழிச் செல்வாக்கு தமிழ் மொழியிலே பெரிய அளவிலே பதிந்ததுபோல் ஆங்கில மொழிச் செல்வாக்கும் பதியலாயிற்று.

பிறமொழிச் சொற்களைத் தன்மொழிப் பாங்காக்கும் போக்கு எல்லா மொழிகளிலுமே காணப்படுகின்றது. தமிழ் மொழியின் அணைக்கட்டு என்னுஞ் சொல்லினையும் மிளகுதண்ணீர் என்னுஞ் சொல்லினையும் ஆங்கிலமொழி முறையே, Anicut என்றும் Mulligatawny என்றும் தன்மொழிப் பாங்காக்கியுள்ளது. இதேபோல் Table என்னும் ஆங்கில மொழிச் சொல்லினை தேபுரு என்றும் India என்னும் சொல்லினை இந்தோ என்றும் யப்பானிய மொழி மாற்றியமைத்துள்ளது. ஒவ்வொரு மொழி பேசுவோரும் தம் மொழியின் ஒலியமைப்புக்கேற்ப, தாம் ஒலிக்கின்ற பாங்கிற்கேற்பவே பிறமொழிச் சொற்களை அமைத்துக்கொள்ளவர். தமிழ் மொழி பேசுவோரும் இதற்கு இயைபுடையவரே. இதனாலேதான் Verandah என்னும் சொல்லை விறாந்தை என்றும், Vassa என்னும் பாளி மொழிச் சொல்லை வசி என்றும் அமைத்துக் கொண்டனர். படிப்பறிவற்ற தமிழ் மக்கள் பறிமொழிச் சொற்களைப் பயன்படுத்தினால், அவற்றைத் தமிழ் மொழி ஒலிக்கேற்பவே கிளர்ந்தனர்.

படித்த தமிழ் மக்கள்தான் வடமொழிச் சொற்களை அம்மொழி ஒலிகளுடனும், ஆங்கில மொழிச் சொற்களை அம்மொழி ஒலிகளுடனும் கிளர்ந்து வந்துள்ளனர். இவர்களுடைய இந்த நிலைப்பாட்டினாலேயே பிறமொழிச் சொல்லாதிக்கம் எம்மொழியிலேற்பட்டுள்ளது. இந்நிலை நீக்கப்படவேண்டும் என்ற கருத்து தற்போது முனைப்புப் பெற்று வருகின்றது.

***தனித் தமிழ் உணர்வின் தோற்றமும் வரலாறும்***

தமிழ் மொழியின் தனித்தும் பற்றிக் குறைவாகக் கூறும் எதிர்த்தூண்டல்களின் விளைவாகவே, தனித்தமிழ் உணர்வு வளர்ச்சியடைந்தது. இவ்வெதிர்த்தூண்டல்களின் உச்ச நிலையாக அமைந்தது. 18ம் நூற்றாண்டில், பிரயோகவிவேகம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியர் சுப்பிரமணியதீட்சிதரின் முயற்சியாகும். இவர் தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே எனச் சாதித்தார். அத்துடன் தமிழ் என்னுஞ் சொல்லையே திரமிள என்னும் வட சொல்லினின்றும் தோன்றியதாகக் கூறினார். 19ம் நூற்றாண்டில் தமிழ் மொழியைக் கற்றறிந்த மேலைப்புல அறிஞரும், எங்கள் நாட்டு அறிஞரும் தமிழ் மொழியின் தனிச் சிறப்பியல்புகளைத் திராவிட மொழிக்கும்பப் பின்னணியிலே ஆராய்ந்து கூற முற்பட்டனர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை (1856) வெளியிட்ட ஆயர் ரொபர்ட் கோல்ட்வெல், வின்சுலோ போன்ற மேலைத்தேய அறிஞர்கள் குறிப்பிடப்பட்ட வேண்டியவர்கள். கோல்ட்வெல் அவர்களே முதன் முதலாக திராவிட மொழிக் குடும்பம் ஒன்றினை இனங்கண்ட, அதில் சிறப்புத் தன்மை வாய்ந்தது தமிழ் மொழி எனக்கொண்டு. அம்மொழி வட மொழியினின்றும் பிறக்கவில்லை; அதற்கெனத் தனித்துவமான பல சிறப்புப் பண்புகள் உண்டு என்பதையும் விளக்கிக் கூறினார். தனித்தமிழ் உணர்வினைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையினுடைய மனோன்மணியம் நாடகத்தில் அமைந்துள்ள தமிழ் வாழ்த்து புலப்படுத்துகின்றது.

> “கன்னடமும் களிதெலுங்கும்
> கவின்மலையாளமும் துளுவும்
> உன்னுதரத் துதித்தெழுந்தே
> ஒன்றுபல ஆயிடினும்
> ஆரியம் போல் உலகவழக்கு
> அழிந்தொழிந்து சிதையா உன்
> சீரிளமைத் திறம்வியந்து
> செயல்மறந்து வாழ்த்துதுமே”

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர். தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

என்று சுந்தரம்பிள்ளை பாடிய தமிழ்த் தெய்வ வணக்கம் தமிழ் உணர்வின் வெளிப்பாடாயமைந்தது. சோமசுந்தர நாயகர், பரிதிமாற் கலைஞர், பாம்பன் குமரகுருபர சுவாமிகள், மறைமலையடிகள், நீலாம்பிகை அம்மையார், தேவ நேயப் பாவாணர் போன்றோர் தனித்தமிழ் உணர்வினைத் தம் எழுத்துக்களாலும் இயக்கம் ஊடாகவும் வளர்த்தவர்கள். மறைமலையடிகள் தொடங்கி தனித்மிழ் இயக்கத்துக்கு ஓர் சமூக, பண்பாட்டு, அரசியற் பின்னணி இருந்தது. அதுபற்றி இங்கு நோக்க வேண்டிய தேவை இல்லை. மொழியில் அடிப்படையிலே இவ்வியக்கத்தினை நோக்குமிடத்து, அது சிறப்பாக தமிழிலே இருந்து வந்துள்ள வடமொழிச் செல்வாக்குக்கும் பொதுவாக பிறமொழித் தாக்கத்திற்கும் எதிராகச் செயற்பட்டு, தனித்தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தி நாள் வேலைகளை நலமுடன் செய்வதற்கு ஊக்கம் அளித்த இயக்கமெனக் கொள்ளலாம்.

***தமிழில் மக்கட் பெயர்***

பண்டைக் காலத் தமிழ்மக்கள் தமிழிலேயே தம் பெயர்களை வைத்துக்கொண்டனர். நெடுஞ்செழியன், சேரலாதன், செலவக் கடுங்கோ, பாரி, கரிகாலன், போப்பெருஞ்சோழன் என்றெல்லாம் மன்னர் பெயர்கள் அமைந்தன. கணியன் பூங்குன்றன், பரணர், பொத்தியார், நச்செள்ளை, நெட்டிமை, பேயன் என்னும் பெயர்கள் கொண்ட புலவர்கள் வாழ்ந்துள்ளனர். எம்முடைய பண்டைத் தமிழ் இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்களிலே பெயர் தெரியாத புலவர்கள் பலர், பாடல்கள் பாடியுள்ளனர். சங்கப்பாடல்களை தொகுத்த பிற்கால ஆசிரியர்கள், அத்தகைய புலவர்களுக்குப் பெயர் வழங்குவதற்கு ஓர் பதிய வழியினைக் கையாண்டனர். அப்புலவர்கள் தங்கள் பாடலகளிலே கையாண்ட கருத்து நயமுள்ள தொடர்களை அல்லது உவமைகளை அவர்களுக்குப் பெயர்களாக இட்டனர். குறந்தொகை 41 ஆவது பாடலிலே தலைகனைப் பரிந்திருக்கும் தலைவியுடைய மனநிலையைப் பலபப்டுத்த “அணிலாடு முன்றில்” போல என்னும் உவமை ஆளப்பட்டுள்ளது. மக்கள் நடமாட்டம் இல்லாத வெறும் வீட்டின் முற்றத்திலேதான் அணில்கள் விளையாடுவதை நாம் காணலாம். தலைவியுடைய மனம் அணில் விளையாடும் வீட்டு முற்றத்தைப் போலுள்ளது எனப் புலவர் உவமை கூறுவதன் மூலம், தலைவியுடைய தனிமையினையும் அவள் மனத்து வெறுமையையும் வெளிப்படத்துகின்றார். இதனால் இப்புலவர் அணிலாடு முன்றிலார். என்னும் பெயரைப் பெற்றார். காதல் கொண்ட இரு நெஞ்சங்கள் இரண்டறப் பரிக்க முடியாதவாறு கலந்தன என்னும் கருத்து நகழ்வைத் “செம்புலப் பெயல் நீர்போல்” என்னும் உவமையைக் கையாண்டு செம்மண் நிலத்திலே பெய்த மழைநீர் போல அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையை அடைவது போல என்னும் விளக்கத்தாலே காட்சி நிகழ்வாகக் காட்டுந்திறனை நோக்கி இப்புலவருக்கு செம்புலப் பெயல் நீரார் என்னும் பெயர் வழங்கப்பட்டது. இவ்வாறு வெள்ளிவீதியார், மீனெறி தூண்டிலார், தேய்புரிப் பழங் கயிற்றினார், ஓரிற் பிச்சையார், கங்குல் வெள்ளத்தார் எனப் பல பெயர்கள் புலவர்களுக்கு வழங்கப்பட்டன. எல்லாப் பெயர்களுமே தனித் தமிழ்ப் பெயர்கள். இப்பெயர்களை இன்று கேட்போருக்கு இவை வேடிக்கையானவையாய் அமையலாம். ஆனால், பிறமொழிகளிலே அமைந்துளள் சில பெயர்களை அறியின், இத்தமிழ்ப் பெயர்கள் வேடிக்கையானவையாக தோன்றமாட்டா. Wood House – “மரவீடு”, Goldwater – “பொன்னீர்”, Bush – “பற்றை”, Riverbank –“ஆற்றங்கரை” என்னும் ஆங்கிலப் பெயர்களையும், Oyama – “பெருமலை”, Nakamura – “நடுஊர்”, Haruko – “வேனில் மகள”. Mori – “பெருங்காடு” என்னும் ஜப்பானியப் பெயர்களையும் கேட்பவர்கள், அவை வேடிக்கையானவை என்றுதான் கூறுவார்கள்.

எங்களுக்கு எங்களுடைய பெயர்களையே பிறமொழிச் சொற்களிலே பூணும் அளவுக்குப் பிறமொழி ஆதிக்கம் பெற்றுவிட்டது. எந்த மொழியிலும் (அதாவது இந்தியத் துணைக்கண்டத்துக்கு அப்பாற்பட்ட நாடுகளிலே பேசப்படும் மொழிகளில்) இந்நிலை ஏற்பட்டதில்லை. மக்கட்பெயர்களை பிறமொழிகளிலே இடுவதால் வரும் இடர்பாடுகள் வேண்டும். நல்ல பொன்னிற மேனியுடைய பெண்பிள்ளைக்குப் பொன்னி என்னும் பெயருக்குப் பதிலாக சியாமளா (கறுப்பி) பெயர் வைத்தால் எப்படி இருக்கும். தமிழர் மண்ணின் இயற்கைப் பின்னணியிலே மக்கட் பெயர்கள் அமைவதற்குப் பதிலாக கடவுட் பெயர்கள் சூட்ட வேண்டும் என்னும் நிலைப்பாடு எம் சமூகத்திலே உருவாகியதனால், பல வடமொழிப் பெயர்களும் பரவலாக இடம் பெற்த்தொடங்கின. தமிழர்கள் என்று எம்மைத் தனித்துவமாக இனங்காட்டிக் கொள்வதற்கு நாமும் எம் முன்னோரும் விட்ட பிழையை வருங்கால இளைய தலைமுறையினர் திருத்தித் தம் பிள்ளைகளுக்கு இனிய தமிழ்ப்பெயர்களை இடுவதன் மூலமும், நாம் எல்லோரும் இயன்றளவு தமிழ்ச் சொற்களையே நடைமுறைப் பயன்பாட்டுக்கு ஆளுவதன் மூலமும், பிறமொழிச் செல்வாக்கினைக் குறைத்துக் கொள்ளலாம். அண்மையிலே வெளிவந்த மக்கட்பெயர் அகர வரிசை என்னும் நூலிலே 453 மகளிர் பெயர்களும், 587 ஆடவர் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. எல்லாம் தமிழ்ச் சொற்களினாலே ஆன பெயர்களாகும். மக்களை பெறும் புதுமணத்தவர்க்கு இந்நூல் பெரிதும் பயனுடையதாக அமையும்.

நாம் ஒவ்வொரு நாளும் பயன்படுத்தும் எத்தனையோ பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்கள் எம்மொழியிலேயே இருக்கின்றன. அவற்றை வழங்கத் தொடங்கினால் கால ஓட்டத்தில் அவை நிலைபெற்ற வழக்கினைப் பெற்றுவிடும். நாம் நாடோறும் பெரும்பாலும் பயன்படடுத்தும் சில சொற்களையும், அவற்றுக்கு நிகரான தமிழ்ச்சொற்களையும் எடுத்துக் காட்டுகளாக கீழே தருகிறோம்.

அங்குலம் – விரற்கிடை,
அஞ்சலி — வணக்கம்,
அந்தரம் – பரபரப்பு,
அநியாயம் – மறையின்மை,
அநுதினம் – நாளாந்தம், நாடோறும்,
அநேகம் –பல,
இலகு — எளிது,
உத்தியோகம் – தொழில்,
காரியம் – செயல்,
மசோதா — சட்டமூலம்,

சில சொற்களைக் கேட்டவுடன் இவை பிறமொழிச் சொற்களா எனப் பலர் வியப்படைவதுண்டு. அந்தளவுக்கு “தேவர் யார் கயவர் யார்“ என்று வேறுபாடு காணமுடியாத படி பிறமொழிச் சொற்கள் எம்மொழியிலே கலந்துவிட்டன. அச்சொற்கள் உணர்த்தும் பொருளை உணர்த்தக்கூடிய தமிழ்ச் சொற்கள் இருப்பின் அவற்றைப் பயன்படுத்துவதே சாலச்சிறந்ததாகும். இது தொடர்பாக ஒரு சிறப்பான நிலைப்பாட்டினை நாம் நெஞ்சிருந்த வேண்டும். அதாவது, தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தவேண்டும் என்ற நோக்கினால் மக்கள் விளங்கமுடியாத

கரடுமுரடான கடுஞ்சொற்களை எழுதுவதிலோ, பேசுவதிலோ பயனேதும் இல்லாமல் போய்விடும். ஆனால், நாடோறும் நாம் பயன்படுத்தும் ஒரு பொருளை தமிழ் மொழியிலே அழைக்க வேண்டுமெனில், அதற்கு எளிதான தமிழச்சொல் வாய்க்கா விட்டாலும், அறிமுகப்படுத்தப்படும் எச்சொல்லும் நாளடைவில் மக்கள் வாயிலே வந்து சேர்ந்துவிடும். இன்று யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் வாயிலே தவழும் அங்காடி, குளிரோடை, சுவையருவி போன்ற சொற்களை எடுத்துக் காட்டுகளாக காட்டலாம்.

ஒவ்வொருவரும் எம்மால் இயன்றவரையில் பிறமொழிச் சொற் களுக்குப் பதிலாக தமிழ்ச் சொற்களை பயன்படுத்தவதனை ஓரளவு நினைவுறுதியுடன் முயற்சிப்பின், தனித்தமிழ்ப் பயன்பாடு பரவலாகிவிடும். புதுப்புதுக் கருதுகோள்களும், கொள்கைகளும், பொருட்களும் எம்மிடையே வந்து சேரும் போது, அவற்றுக்கான புதுப் புதுத் தமிழச் சொற்களை நாம் ஆக்கும்போது, எம்முடைய மொழியும் வளர்ச்சியடையும். பெருந்தொகையான புதிய சொற்கள் சொற்களஞ்சியத்திலே இடம்பெறம், உலக வளர்ச்சிகளையெல்லாம் எதிர் கொள் ளத்தக்க வகையிலே தனித் தமிழ் பயன்பாட்டை செம்மை செய்ய வேண்டியவர்களாக நாம் முயற்சிக்கவேண்டியது இன்றி யமையாததாகும்.

நன்றி — எரிமலை, டிசம்பர் 1993









TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE

- Affordable and Reliable Services
- Experienced Accountants
- Presonal & Corporate Tax
- Tax Planning / Audit Appeal
- HST/GST/WSIB
- Bookkeeping & Payroll
- UBER/LYFT Tax Filling

CRB/CERB HELP



OFFICE
416-898-8879

CALL FOR APPOINTMENT
416-838-2826

105Consumers Drive.
Whitby ON L1N 1C4

115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6

www.taxanalyst.ca
taxmatters@kannantax.com





சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com



HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES

ALL MAKES & MODEL Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer

up to $5000 REBATE

0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty



WHY UPGRADE TO TANKLESS?

Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos

KD Navien
The Leader in Condensing Tankless Technology

FREE ESTIMATE
Sales, Service & Repair

S.Kumar
416-993-8001
geansam@yahoo.com

FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000



PEEL TAE KWON DO
Family Martial Arts

Trusted Local Taekwon - Do
Training School



* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
* Top Quality Training for Kids, Teens and Adults

2016 READERS' CHOICE AWARDS



Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571

Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268






# ஆனையிறவு – பரந்தன் ‘அழித்தொழிப்புத் தாக்குதல்’ ஓர் உயர் பரிமாண கெரில்லா நடவடிக்கை

**கெரில்லாப் போர் முறையின் உயர் பரிமாண தாக்குதல் வடிவத்தில், விடுதலைப் புலிகளின் படையமைப்பு கண்டுள்ள இன்னொரு படிநிலை வளர்ச்சியின் வெளிப்பாடு இது**




குடாநாட்டிற்கும் - வன்னி நிலப்பரப்பிற்கும் இடையிலிருந்த ஆனையிறவு, மற்றும் பரந்தன், படைத்தளங்களின் கூட்டு வலயம் மீது 1997 ஜனவரி 09 ஆம் நாள் புலிகள் நிகழ்த்திய பெரும் அதிரடித் தாக்குதலானது –

எதிரியின் பாரிய (படைக்கல + வெடிப்பொருள்) சுடுசக்தியை அழித்தொழிப்பதற்காக மட்டுமல்லாமல், அடுத்த படையெடுப்பு ஒன்றிற்கான பெருமெடுப்பிலான தயார்ப்படுத்தலில் முழுமையாக ஈடுபட்டிருந்த எதிரியின் முன் முனைவை முறியடிப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு வரையறுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

நுட்பமான திட்டம் வரைந்து, சரியான காலத்தைத் தேர்வு செய்து படையணிகளை நகர்த்திய தலைவர் பிரபாகரன் அவர்களின் கண்காணிப்பின் கீழ், தளபதிகளால் வழிநடத்தப்பட்ட புலி வீரர்கள், கணிக்கப்பட்டதற்கும் குறைவான நேர எல்லைக்குள் இலக்குகளை வீழ்த்தி, தாக்குதலின் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்தபின்னர், களத்திலிருந்து வெளியேறினர்.

கடத்தல்காரர்களைப் பிடிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் சோதனை நிலையம், 1983-ற்குப் பின் இராணுவ தடைமுகாமாகி, 1990-ற்குப் பின்னான ஆறு வருட காலத்தில் வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு - இயக்கச்சி - பரந்தன் - கிளிநொச்சி எனப் படிப்படியாக விரிவாகி, பெரும் பல் கூட்டப் படைத்தளத் தொகுதியாக (Military Companion) உருப்பெற்றது.

தமிழீழப் போரின் எல்லாக் காலங்களிலுமே, வட போரரங்கின் களநிலவரத்தைத் தீர்மானிக்கும், தவிர்க்கமுடியாத சக்தியாகவும் குறிப்பிடத்தக்க அரசியற் தாக்கங்கள் நிகழ்வதற்கு வல்லமை பொருந்திய காரணியாகவும், ஆனையிறவை மையமாகக் கொண்ட படைத் தளத் தொகுதி விளங்கிவருகின்றது.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியைக் குறுக்கறுக்கும் தனியொரு நிலவழிப் பாதையை மட்டுமேயுடைய குடாநாட்டின் அமைவிடம் தான், அத்தகைய முதன்மைப் பாத்திரத்தை அதற்குக் கொடுத்திருக்கிறது.

கடந்த 13 வருட யுத்தத்தில் வட போரரங்கில் இருவேறு பரிமாணப் பட்ட, இருவேறு பணிகளை, இருவேறு காலகட்டங்களில் ஆனையிறவுத் தளம் ஆற்றியது; ஆற்றிவருகின்றது.

முன்னையதை - முற்றுகைக்கான முதன்மைத் தடைத்தளம் எனலாம்; பின்னையதை - நடவடிக்கைக்கான முன்னரங்கத் தாக்குதற்தளம் எனலாம்.

குடாநாட்டில் புலிகள் நிலக்கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த முற்காலத்தில், சிங்களத் தலைமை கையாண்ட குடாநாட்டை முற்றுகையிட்டுப் பணிய வைக்கும் தந்திரோபாயத்தின் பிரதான செயலாக்கக் களமாக, குடாநாட்டின் வாயிற் தடுப்பாக, ஆனையிறவுத்தளம் இருந்தது. பெருப்பித்து, பலப்படுத்தி, வெற்றிலைக்கேணிக் கடல்வரை வரிவாக்கி, கொம்படி, ஊரியான் வழிப் பாதையையும் மறித்து, குடாநாட்டுக்கான தரைப்பாதைகளை இறுக மூடும் ஒரு தடைமுகாமாகவே ஆனையிறவை எதிரி வைத்திருந்தான். வெளியிலிருந்து உள்ளுக்கும், உள்ளிருந்து வெளியிற்கும், புலிகளின் நகர்வுகளை நிறுத்துவது மட்டுமே அதன் பணி. “யாழ்தேவி“ நடவடிக்கையைத் தவிர வேறெந்தப் படையெடுப்புத் தாக்குதல் முயற்சிகளையும் எதிரி ஆனையிறவிலிருந்து எடுக்கவில்லை. அப்போது, வடக்குப் போரரங்கின் பிரதான படையெடுப்பு முன்னரங்கக் களமாகப் பலாலிப் படைத்தளத் தொகுதியே திகழ்ந்தது.



குடாநாட்டிலிருந்து பின்வாங்கிய புலிகள், வன்னி நிலப் பெரும் பரப்பின் நிலக்கட்டுப்பாட்டைத் தொடர்ந்தும் கொண்டிருந்த பிற்காலத்தில், முற்றுகைத் தடைத்தளம் என்ற தனது முன்னைய பாணியிலிருந்த, யுத்தத்தின் முன்னரங்கத் தாக்குதற் தளமாக ஆனையிறவு மாற்றப்பட்டது. அதாவது, குடாநாட்டிலிருந்து தமது செயற்பாட்டு மையத்தையும், பெரும் பேரணிகளையும் புலிகள் வன்னிக்கு நகர்த்தியதன் பின்பு - நிர்வாக ஆதிக்கத்தைச் செலுத்தித் தமது மையச் செயற்பாட்டுத்தளப் பிராந்தியமாகப் புலிகள் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் நிலப் பகுதிகளை மீளவும் ஆக்கிரமிப்பதற்கான சிங்களத்தின் பிரதான படையெடுப்பு பொருதுகளம், பலாலியிலிருந்து ஆனையிறவுக்கு மாறியது. பீரங்கிக் கவச வண்டிகள் (Main Battle Tanks), கவசத் துருப்புக் காவிகள் (Armoured Personnel Carriers), “ஆட்டிலறி றெஜிமென்டி“ன் பிரிவுகள் (Batteries of Artillery Regiment) , பல பத்தாயிரம் எறிகணைகள் மற்றும் வெடிப்பொருட்களைக் கொண்ட களஞ்சியங்கள் (Caches of Ammunition Dumps) என, பாரிய சமர்க்களங்களுக்குத் தேவையான போர்த்தளபாடங்கள் ஆனையிறவில் குவிக்கப்பட்டன. அனைத்து வளங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, முன்கள - பின்கள ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு, மூர்க்கமான மரபுமுறைச் சமர் அரங்குகளைத் திறக்கத் தயாரான உச்சப் பலமுடையதாக ஆனையிறவுத் தளம் உருவெடுத்தது.

ஆனையிறவிலிருந்து 3 கட்டங்களாக “சத்ஜய“வில் படையை நகர்த்தி, கிளிநொச்சியைக் கைப்பற்றி, தன் துருப்புக்களைப் பலமாக நிலைகொள்ள வைத்த சிங்களத்தின் படைத்துறைத் தலைமை ஆனையிறவிலிருந்தான அடுத்த - முக்கிய பெரும் படையெடுப்பு ஒன்றிற்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே, புலிகளின் “அழித்தொழிப்புத் தாக்குதல்“ நிகழ்த்தப்பட்டது. ஆனையிறவுப்படைத் தளத் தொகுதியின் தென்பகுதியும், கிளிநொச்சிப் படைத்தளத் தொகுதியின் வடபகுதியுமே புலிகளின் தாக்குதல் வலயமாகும்.

7ஆவது பிரிகேட் நிறுத்தப்பட்டுள்ள ஆனையிறவுத் தளத்தையும், 19 ஆவது பிறிகேட் நிறுத்தப்பட்டுள்ள வெற்றிலைக்கேணித் தளத்தையும் உடைய ஆனையிறவுப் படைத்தளத் தொகுதி, மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகராவின் கட்டளைப் பணிப்பின் கீழ், தடைமுகாமிலுள்ள “2ஆவது சிறப்புப் பணிப் படைப்பிரிவு (Task Force – 2) மையச் செயலகத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்றது.

10ஆவது பிரிகேட் நிறுத்தப்பட்டுள்ள பரந்தன் தளத்தையும், 541 ஆவது, 542 ஆவது, 543 ஆவது பிரிகேட்கள் நிறுத்தப்பட்டுள்ள கிளிநொச்சியைச் சூழவுள்ள பகுதித் தளங்களையும் கொண்ட கிளிநொச்சிப் படைத் தளத்தொகுதி, பிரிகேடியர் வசந்த பெரேராவின் கட்டளைப் பணிப்பின் கீழ், கிளிநொச்சியிலுள்ள 54ஆவது டிவிசன் (54Division) மையச் செயலகத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்றது.

புவியில் ரீதியாக, யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் இருபறங்களிலும் – குடாநாட்டு நிலப்பரப்பையும் வன்னி நிலப்பரப்பையும்



உள்ளடக்கியதாக - அமைவிடத்தைச் கொண்டுள்ள ஆனையிறவுத் தளத்தின் வன்னி நிலப்பகுதி மீதும் -

அதன் தொடராகப் பரந்தன் சந்தி வரை நீளும் பரந்தன் தளத்தின் மீதுமே, புலிகளின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதல் வலயத்திற்குள் விஜயபாகு றெஜிமென்ரின் 2 அல்லது 3 பற்றாலியன்களும், சிங் றெஜிமென்ரின் 1 பற்றாலியனும் நிலைகொண்டிருந்தன. இவற்றில், விஜயபாகு றெஜிமென்ற் ஒரு பற்றாலியனாலும், சிங்க ஜெறிமென்ரின் ஒரு பற்றாலியனாலும் பாதுகாக்கப்பட்ட மிகப் பின் பகுதிகள் - ஆனையிறவுத் தளத்தில் - “ஆட்டிலறி“ றெஜிமென்றின் சுடுகலப் பிரிவுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனையிறவு சந்தையடி முகாமே “ஆட்டிலறி“ சுடுதளமாகும். உயர்ந்த பெரும் மண் அணை அரணுக்கு உள்ளே 122 மில்லி மீற்றர் “ஆட்டிலறி“கள் 8 ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன. தென் மேற்கு திசை நோக்கி இரண்டும், தெற்குத் திசை நோக்கி மூன்றும், தென் கிழக்குத் திசை நோக்கி மூன்றுமாக அவை நின்றன. அவைக்குப் பின்னால், வேறாக, 180 மில்லி மீற்றர் “ஆட்டிலறி“கள் இரண்டும், 122 மில்லி மீற்றர் “ஆட்டிலறி“ ஒன்றும் என மேலும் மூன்று - எந்தத் திசை நோக்கி தாக்கவும் தயாரான வாய்ப்புக்களுடன் - தென் திசை நோக்கியதாக நிறுத்தப்பட்டிருந்தன. அத்தோடு, சுடுவதற்கு தயார் செய்யப்பட்ட நிலையிலும் தயார் செய்வதற்கு ஆயத்தமான நிலையிலும் ஆயிரக்கணக்கான எறிகணைகள் சுடுதளத்தில் வைக்கப்பட்டிருந்தன.

**“நிவிரச” படையெடுப்பிற்கு முன்னர் பலாலித் தளத்திலிருந்த அதே பலம், அல்லது அதைவிடவும் கூடுதல் பலம், ஆனையிறவில் குவிக்கப்பட்டிருந்தது எனப்துவே, அந்தத் தளத்தின் பிரமாண்டமான தோற்றப்பாட்டைக் கற்பனையிலேயே கணித்துக்கொள்ளப்போதுமானது.**

இதற்கு அடுத்திருந்த பாடசாலை முகாம், “ஆட்டிலறி“ சுடதளத்திற்கான முழுமையான விநியோகத்தைச் செய்யும் வெடிப்பொருட் களஞ்சியமாகும். கிளிநொச்சிப் பகுதி மீது நிகழ்த்தக்கூடிய எதிரியின் தாக்குதலொன்றை எதிர்கொள்ளப் போதுமான அளவுக்கும், திட்டமிடலிலிருந்த அடுத்த பெரும் படையெடுப்பிற்குத் தேவையான அளவுக்கும் அங்கு எறிகணைகள் சேமிக்கப்பட்டிருந்தன. அவை பல பத்தாயிரக் கணக்கானவை என நம்பமுடிகின்றது.

மண் அணைகள், முட்கப்பி வேலிகள் எனத் தம்மைச் சுற்றி வழமையான பாதுகாப்பு அம்சங்களுடனிருக்க அந்தச் சுடுதள, களஞ்சிய முகாம்களுக்குப் பாதுகாப்பளித்து...

பெரிய உப்பள, சுற்றுலா விடுதி முகாம்களிலும், மேற்கே நீரேரி வழியாக வரக்கூடிய தாக்குதலை முறியடிக்க சின்ன உப்பள முகாமிலும், கிழக்கே நிலப்பகுதியூடாக வரக்கூடிய தாக்குதலை முறியடிக்க தட்டுவான்கொட்டி அம்மன் கோவிலடியில் இரண்டு மினி முகாம்களிலும், மேற்கில் ஒரு கிலோ மிற்றருக்கப்பாலும், கிழக்கில் இரண்டு கிலோ மீற்றருக்கப்பாலுமுள்ள முன்னணி வரிசைக் காப்பரண்களிலுமாக ஆயிரத்துக்கும் குறையாத துருப்புக்கள் நீறுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக, ஆழமான - பிரமாண்டமான - இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் துவம்சம் செய்து நுழைந்த புலிவீரர்கள், பீரங்கிச் சுடுதளத்தையும், வெடிப்பொருட் களஞ்சியத்தையும் கைப்பற்றி முழுமையாக நிர்மூலம் செய்தனர். தாக்கப்பட்டவர்களுக்குத் துணையாகத் தடைமுகாமிலிருந்து விரைந்தவர்களைத் தாக்கி ஒரு “டாங்க்“கையும் அழித்தனர்.

இதற்கிடையே - கிளிநொச்சிப் பகுதி இராணுவ நிலைகளை நோக்கியும் 'TF-2' , தலைமையகமான தடை முகாம் மீதும், கைப்பற்றிய எதிரியின் “ஆட்டிலறி“களாலேயே தாக்கி —

தடைமுகாமிலிருந்த பிரதான வெடிபொருட் களஞ்சியத்தை வெடித்து எரியச்செய்து அழித்தனர். இந்த “ஆட்டிலறி“த் தாக்குதலின்போது, அங்கு தரித்திருந்த 7 இற்கும் குறையாத யுத்த “டாங்க்“ குகளும் தகர்த்தழிந்ததாக நம்பகமாக அறியக்கிடைக்கின்றது. இந்த தொகை 18 இற்கும் அதிகமென படைவட்டாரங்களை மேற்கோள் காட்டி “வீரகேசரி“ (12.01.1997) கூறியது.

மறுபுறத்தே, ஆனையிறவுத் தளப்பகுதி எதிரிக்குக் கிளிநொச்சியி லிருந்து உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காக —

உமையாள்புரம், இரசாயனத்தொழிற்சாலை, குமாரபுரம் முகாம்களையும், பிரதான வீதிக்கு மேற்கில் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலும், கிழக்கில் இரண்டு கிலோமீற்றர் தூரத்திலுமுள்ள முன்னணி வரிசைக் காப்பரண்களையும் கொண்டதாக, ஆயிரத்திற்கும் குறையாத துருப்புக்களுடனுமிருந்த பரந்தன் தளத்தையும் தாக்கிய புலிகள் -

பரந்தன் சந்திப் பகுதியில் ஒரு “டாங்க“ கையும், Buffle ஒரு கவச வண்டியையும் தாக்கியழித்ததுடன், 10 ஆவது பிரிகேட் மையச் செயலக உமையாள்புரம் முகாமிலிருந்து 120 மில்லி மீற்றர் மோட்டார்கள் மூன்றை முழுமையாகவும், மேலும் இரண்டை சேதப்பட்ட நிலையிலும் கைப்பற்றினர்.



ஒட்டுமொத்தமான இந்த நடவடிக்கையில் புலிகளின் 150 வீரர்கள் களப்பலியாகினர். படையினர் தரப்பில் 300 பேர் வரையானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான ஆயதங்களையும், கணிசமான தொகை வெடி பொருட்களையும் புலிகள் கையகப்படுத்தினர்.

தமிழீழப் போரில், இந்தத் தாக்குதலின் போரியல் கன பரிமாணம் புதியது; இது ஒரு துணிகரமான முயற்சி.

1991 ஆம் ஆண்டு தாக்க முற்பட்டுத் தோல்வியடைந்த அதே தளத்தை, ஐந்தாண்டுகளின் பின்பு, பலம் பொருந்திய நிலையில் இருந்தபோதும் பெற்றிகரமாககத் தாக்க முடிந்தது என்பது, எதிர்காலத்தின் எதிர்வுகூறல்.

கெரில்லாப் போர் முறையின் உயர் பரிமாண தாக்குதல் வடிவத்தில், விடுதலைப் புலிகளின் படையமைப்பு கண்டுள்ள இன்னொரு படிநிலை வளர்ச்சியின் வெளிப்பாடு இது.

“றிவிரச“ படையெடுப்பிற்கு முன்னர் பலாலித் தளத்திலிருந்த அதே பலம், அல்லது அதைவிடவும் கூடுதல் பலம், ஆனையிறவில் குவிக்கப்பட்டிருந்துது என்பதுவே, அந்தத் தளத்தின் பிரமாண்டமான தோற்றப்பாட்டைக் கற்பனையிலேயே கணித்துக்கொள்ளப்போதுமானது.

ஒருபுறம் கிளிநொச்சியில் 22 சதுர கிலோ மீற்றர் வரையான பகுதியில் நிறுத்தப்படடிருந்த 4000 வரையான துருப்புக்கள், மற்றும் ஆனையிறவிலிருந்து வெற்றிலைக்கேணிக் கடல் வரை நீளும் பெரும் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த இன்னும் சில ஆயிரம் படையினர் என —

முழுமையான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட ஒரே தொடராக நீளும் பாரிய பல்கூட்டுப் படைத்தளத்தொகுதியினுள் 2000 வரையான துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருந்த 25 சதுர கிலோ மீற்றர் வரையான நடுப்பகுதி வலயத்தை மட்டும் தேர்வு செய்து, ஊடுருவி துண்டறுத்துத்தாக்கி பெரும் அழிவைக் கொடுத்ததென்பது, புலிகளால் ஈட்டப்பட்ட ஒரு மாபெரும் இராணுவ சாதனையேதான்.

எனவேதான், “சண்டே ரைம்ஸ்“ இதழின் போர்த்துறை ஆய்வாளர் இக் பால் அத்தாஸ் அவர்கள் “அகன்ற பெரும் பரப்பில் அமைக்கப்பட்டிருந்த இந்த தொடர் படைத்தளங்களின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல், 13 வருட யுத்தத்தில் சிங்களப்படைக்கு ஏற்பட்ட ஒரு வடு” எனச் சொல்கின்றார்.

அழிக்கப்பட்ட பீரங்கிகளும் வெடி பொருட்களும் மீட்டெடுக்கப்பட்டிருந்தால், தமிழர் போராட்டத்தில் அற்புதங்கள் நிகழ்ந்திருக்கும். அவை தமக்குக் கிடைக்கவில்லை என்பது எம் மக்களின் ஆறாத ஆதங்கம்.

ஆனால், புவியில், மற்றும் இராணுவக் காரணங்களால் அவற்றைக் கொண்டுவரமுடியாமல் போகலாம் என்பது திட்டமிடலின் போதே உணரப்பட்டதால்தான், அழித்தொழிக்கும் வழிவகையும் செய்யப்பட்டது.

அத்தோடு — ஆனையிறவிலிருந்து எதிரி ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்த பெரும் படையெடுப்பு ஒன்றைத் தடுப்பதற்காக, அவனது மிகப்பெரும் சுடு சக்தி அவனிடமிருந்து இல்லாமற் செய்யப்பட வேண்டும் என்பதே புலிகளின் அவசர இலக்காகவும் இருந்தது.

அதற்காக, ஆனையிறவிலிருந்து, அல்லது வேறெங்குமிருந்து எதிரி இனி மேல் படை நகர்வையும் எடுக்கமாட்டான் என்பதல்ல.



இப்போது - எந்த முனையிலிருந்தும். எந்த நேரத்திலும் இன்னொரு படையெடுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது எதிர்பார்க்கப்படுகின்றது.

புலிகளின் படையணிகள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வேளையில் தான், ஆனையிறவு - பரந்தன தாக்குதலானது, எமது மக்களுக்கு ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையையும், எதிரிகளுக்கு ஒரு சந்தேக மற்ற எச்சரிக்கையையும் கொடுத்துள்ளது.

ஆனையிறவைப் பின்தளமாகக் கொண்டு நகர்த்தப்பட்ட படையெடுப்பின் மூலமாக, ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் பரந்தன் பகுதி கைப்பற்றப்பட்டது என்பதால் -

புலிகளின் பகுதிகளுக்குள் படைகளை நீள நகர்த்தி அகன்று பரவி நிலைகொள்ள வைக்கும் மூலோபாயம் எதிர்காலத்தில் தோல்வியிலேயே முடியும் என்பது எதிரிகளுக்கான எச்சரிக்கை! இவ்வாறாக, எதிரிகளின் ஆக்கிரமிப்பு நிலைகள் மீது ஆற்றல் மிகு தாக்குதல்களை நிகழ்த்தும் புலிகள், எதிர்காலத்தில், சிங்கள ஆக்கிரமிப்பை நிரந்தரமாகவே முறியடிப்பார் என்பது எமுது மக்களுக்கான உறுதியான திடமான நம்பிக்கை.

நன்றி: எரிமலை எப்ரல் 1997

# இந்தியாவைச் சீண்டுவதற்கு சீனா இலங்கையைப் பாவிக்கக்கூடாது!

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன்!

23.12.2021




இலங்கைக்கான சீனத் தூதுவர் அண்மையில் வடக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டு யாழ். கடற்பகுதிகளையும், மன்னார் சென்று இராமேஸ்வரத்துக்கு அருகில் உள்ள எட்டாவது மணல்திட்டையும் பார்வையிட்டுள்ளார். சீனத் தூதுவரின் இந்த விஜயம் குறித்து சுரேஷ் க.பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

"தமிழ் மக்கள் அல்லலுறும் போதும் நியாயத்துக்காகப் போராடியபோதும் உதவ முன்வராத சீனா இப்போது கரிசனை காட்டுவதுபோல் நடிப்பது பலத்த சந்தேகங்களை



எழுப்புகின்றது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

> ***"கலாசார ரீதியாக, மொழி ரீதியாக, சமய ரீதியாக பல ஆயிரம் ஆண்டுகள் தொடர்புடையவர்கள் இலங்கை, இந்திய மக்கள். குறிப்பாக எமக்கு மிகவும் அண்மித்த பிரதேசமான தமிழகத்தில் எட்டுக் கோடி தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆகவே, இந்தியாவுக்கு எதிராக வடக்கு மாகாண மண்ணை சீனா போன்ற நாடுகள் பாவிப்பதற்கு எந்தவிதத்திலும் அனுமதி அளிக்க முடியாது."***

"உலகத்தின் பொலிஸ்காரனாகத் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதில் சீனா முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. அதற்காக ஒரே பாதை ஒரே பட்டி, பட்டுப் பாதை போன்ற திட்டங்களை மிகப் பெரும் முதலீட்டில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தென்சீனக் கடற்பகுதியில் இருக்கும் மண் திட்டுக்களை தனது இராணுவ, விமானப்படை தளங்களாகவும் மாற்றி வருகின்றது. இதன் காரணமாக பல்வேறு நாடுகளுடன் முரண்பாடுகளையும் ஏற்படுத்திக்கொண்டுள்ளது.

அதைப்போலவே இந்துசமுத்திர பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளவும் ஒரே பாதை, ஒரேபட்டி திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொள்ளவும் இந்து சமுத்திர பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையையும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் நடந்த காலகட்டத்தில் நாங்கள் சீனாவுடன் பேசியபோது, "நாங்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகளை வைத்துக்கொள்வோமே தவிர, உள்நாட்டு விவகாரங்களில் தலையிட மாட்டோம்" என்று கூறினார்கள். அதுமாத்திரமல்லாமல், தமிழ் மக்கள் யுத்த குற்றங்களுக்கும் இனப் படுகொலைக்கும் எதிராக உலக நாடுகளிடம் நீதி கேட்டு சர்வதேச மன்றங்களை அணுகிய போது, அங்கும் தமிழ் மக்களுக்கு எதிராகவும் அவர்களது கோரிக்கைகளுக்கு எதிராகவும் செயற்பட்டு இலங்கை அரசைக் காப்பாற்றி வந்தார்கள்.

இப்போது, தமிழ் மக்கள் மேல் பரிவுகொண்டவர்கள் போல் நடித்து, மீனவர்களுக்கு உதவி செய்கின்ற போர்வையில், ஒரு தொகுதி வலைகளையும் உலர் உணவுகளையும் கொடுத்த நாடகத்தையும் நாங்கள் அண்மையில் பார்த்தோம்.

வடக்கு மாகாணத்தில் அவர்களது பிரசன்னம் என்பது இந்தியாவைச் சீண்டுவதைத் தவிர வேறெதுவும் இல்லை என்பதை நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம்.

போர்க்காலத்தில் மிக அதிகளவிலான இராணுவ தளபாடங்களையும் விமானங்களையும் கொடுத்து இலங்கையை தனது பெருங்கடன்கார நாடாக்கிய பெருமை சீனாவையே சாரும்.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்றவற்றை நிர்மாணிப்பதற்கு அதிக அளவு முதலீடுகளைச் செய்து, தானே முன்னின்று கட்டுமானப் பணிகளையும் சீனா மேற்கொண்டது. வர்த்தக ரீதியில் எத்தகைய இலாபமுமற்ற இந்த முதலீடுகளால் இலங்கையை மேலும் மேலும் கடனாளியாக்கிவிட்டு, சீனா அத்துறைமுகத்தை தனதாக்கிக்கொண்டுள்ளது. இதனைப் போலவே மத்தள விமான நிலையம், கொழும்பு துறைமுக நகரம், கொழும்பு துறைமுகம் போன்றவற்றில் செய்யப்பட்ட முதலீடுகளினாலும் சீனாவே அதிகளவில் பயனடைகின்றது.

இவ்வாறு இலங்கைக்கு பல பில்லியன் ரூபாக்களைக் கடனாகக் கொடுத்து அதை கடனாளியாக்கிவிட்டு முழு இலங்கையையுமே கபளீகரம் செய்யும் நடவடிக்கைகளில் சீனா இறங்கியிருக்கின்றது. இலங்கையில் பல்லாயிரக் கணக்கான சீனத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

சீன உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தன்னை இறைமை மிக்க நாடு என்று கூறிக்கொள்ளும் இலங்கை, இப்படி சீனாவின் சகல நடவடிக்கைகளுக்கும் முகம்சுழிக்காமல் ஆதரவு தெரிவித்து வருகின்றது. இத்துடன் நிற்காமல், வடக்கு மாகாணத்தை தனது டிராகன் பிடிக்குள் கொண்டுவரும் நோக்குடன், நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு போன்ற இடங்களில் மாற்று மின்சக்தி நிலையங்களை உருவாக்குவதற்கும் சீனா ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. இத்துடன் கடல்சார்துறைகளிலும் தனது நாட்டு நிறுவனங்களை முதலீடு செய்ய ஊக்குவிக்கின்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்பது இந்தியாவுக்குக் கூப்பிடு தொலைவிலுள்ள ஒரு பிரதேசம். இங்கு சீனர்களின் பிரசன்னம் என்பதோ, முதலீடுகள் என்பதோ இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகங்களை ஏற்படுத்தும் என்பது சாதாரண ஓர் அரசியல் மாணவனும் புரிந்துகொள்ளக்கூடிய விடயம்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், வடக்கு மாகாணத்தில் ஏற்படுத்தப்படும் முதலீடுகளுக்கு இலங்கை சீனாவுக்கு இடமளிப்பதென்பது அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

கலாசார ரீதியக, மொழி ரீதியாக, சமய ரீதியாக பல ஆயிரம் ஆண்டுகள் தொடர்புடையவர்கள் இலங்கை, இந்திய மக்கள். குறிப்பாக எமக்கு மிகவும் அண்மித்த பிரதேசமான தமிழகத்தில் எட்டுக் கோடி தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆகவே, இந்தியாவுக்கு எதிராக வடக்கு மாகாண மண்ணை சீனா போன்ற நாடுகள் பாவிப்பதற்கு எந்த விதத்திலும் அனுமதி அளிக்க முடியாது.

சீனாவின் இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால், வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையிலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையிலும் உற்பத்திசார் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு இந்தியா முதலீடுகளையும் வழிகாட்டுதல்களையும் மேற்கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்லாமல், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தேவையான மின்சாரம், குடிதண்ணீர், வடிகால் அமைப்பு போன்ற விடயங்களில் தன்னிறைவடைவதற்கும் இந்தியா உதவ முன்வரவேண்டும்.

பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள சீனாவை இலங்கைக்குள் உள்நுழைய விட்டு எதிர்காலத்தில் தேவையற்ற சச்சரவுகளை அண்டை நாடுகளுடன் ஏற்படுத்திக்கொள்ளாமல், இலங்கையில் ஏற்படுகின்ற எத்தகைய அனர்த்தங்களிலும் உடனடியாக உதவுகின்ற, எமக்கு அருகில் உள்ள விஞ்ஞான தொழிநுட்ப மற்றும் அறிவுசார் துறைகளில் பாண்டித்தியம் பெற்ற இந்தியாவுடன் உறவுகளை மேம்படுத்திக்கொள்வதே இந்த நாட்டின் நலன்களுக்கு சிறப்பானதாகும் என்பதையும் இலங்கை அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

உலக நாடுகளின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை நிராகரித்துக்கொண்டு, தனது நாட்டில் வாழுகின்ற இஸ்லாமிய சமூகத்தினரின் மனித உரிமைகள் அனைத்தும் மறுதலிக்கப்பட்டு அடிமைகளைவிடவும் கேவலமாக நடத்திக்கொண்டும் வறுமைப்பட்ட நாடுகளைக் கடனாளிகளாக்கி தமது கைப்பிடிக்குள் கொண்டு வரும் கேவலமான கொள்கையையும் கைவிட்டு அதன் பிறகு ஏனைய நாட்டு மக்கள் மீது அக்கறை செலுத்துவது குறித்து சீனா சிந்திக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்" - என்றுள்ளது.

# 13.வது திருத்தச் சட்டம் அகற்றப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கை சர்வாதிகார ஆட்சிமுறைமைக்குள் கொண்டு செல்லப்படும் – ஜனநாயகப் போராளிகள் கட்சி

டிசம்பர் 27, 2021

13வது திருத்தச் சட்டம் அகற்றப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கை சர்வாதிகார ஆட்சிமுறைமைக்குள் கொண்டு செல்லப்படும். 13வது திருத்தச் சட்டத்தினூடாக மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட்டு மக்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தையாவது தக்க வைத்துக் கொள்ளுகின்ற நிலைமையை இங்கு உருவாக்க வேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

13வது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நிலைப்பாடு சம்மந்தமான அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,
1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் அரசியல் யாப்பின் ஊடாகக் கொண்டு வரப்பட்ட 13வது திருத்தச் சட்டம் தொடர்பாக அரசியற் கட்சிகளின் தலைவர்கள் சமூக ஆர்வலர்கள் பலர் கருத்துகளை முன்வைத்து வருகின்றார்கள். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கருத்தரங்கிலும் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதே போன்று 13வது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என் தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும் மற்றும் மலையகம், முஸ்லீம் கட்சிகள் இணைந்து பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்துரையாடி இருக்கின்றார்கள்.

இந்த 13வது திருத்தச் சட்டம் இலங்கையில் நடைமுறைக்குகக் கொண்டு வரப்பட வேண்டும் என தற்போது அனைவராலும் பேசப்பட்டு வருகின்றது. இது புதிய விடயம் அல்ல. இருப்பினும் தற்போதைய சூழலில் அது பார்க்கப்படுகின்ற விடயமாக இருக்கின்றது. அந்த விடயங்கள் தொடர்பாக கட்சிகள் கூடி ஆராய்ந்து வருகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு, 13வது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கான தீர்வின் ஆரம்ப விடயம் என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இதில் 13வது திருத்தச் சட்டம் என்பது என்ன? அதனை நடைமுறைப்படுத்துகின்ற போது அதிலுள்ள சாதக பாதக விடயங்கள் என்ன? என்பதோடு இந்த விடயத்தில் எல்லோருடைய கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது தொடர்பிலும் நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம்.

உண்மையில் 13வது திருத்தச் சட்டம் என்பது இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஒரு ஆணிவேராகவே பார்க்கப்படுகின்றது. இது இந்தியாவினால் இலங்கை மீது போட்டிருக்கும் ஒரு கடிவாளமாகவே இருக்கின்றது. 13வது திருத்தச் சட்டம் இலங்கையின் அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்டு இன்றுவரை நடைமுறையில் இருந்தாலும் நிர்வாக அலகுகளுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

தமிழர்களைப் பொருத்தவரையில் ஆயுத போராட்ட காலத்திலும் சரி தற்போதும் சரி நாங்கள் எமது உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பில் ஆயுத ரீதியாகவும், தற்போது அரசியல் ரீதியாகவும் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றோம். நோர்வே ஒஸ்லோவில் இடம்பெற்ற தீர்மானம். திம்புவில் இடம்பெற்ற தீர்மானம் இவை இரண்டும் எமது ஆயுத போராட்ட காலத்தில இடம்பெற்றது. இவை இரண்டுமே பரஸ்பரம் நம்பிக்கையிழந்து செயழிழந்து நிற்கின்றது.

நாங்கள் ஒவ்வொரு முயற்சிகளும் எடுக்கின்ற போது அக்காலத்தில் இதனால் எத்தகு விளைவுகள் எற்படும் என்பதனை ஆராய்ந்து அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கேற்றவாறு எமது திட்டங்களை வகுத்து நாம் செயற்பட்டே வந்தோம்.

உண்மையில் ஒஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையில் ஒரு தீர்வினைப் பெறுவதற்கான முயற்சி நடைபெற்றது அது இடைநடுவில் கைவிடப்பட்டது. சுமார் ஐந்து ஆண்டுகளாக உலக வல்லமை மிக்க நாடுகளின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அந்தப் பேச்சுவார்தைக் காலங்களில் எல்லாம் தமிழர்களுக்கு சுயநிர்ணய அடிப்படையில் உரிமை வழங்கப்பட வேண்டும். தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதை அங்கீகரித்துக் காட்டக்கூடியவாறான செயற்பாடுகள் பெரிய அளவில் இடம்பெறவில்லை.

உலக நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு இவ்வாறாக அழுத்தம் கொடுக்கவில்லை. இலங்கையின் ஏமாற்று வித்தைகளை உலகம் நம்பி அந்த வழியில் பயணித்தமையால் அந்தப் பேச்சவார்த்தை அவ்வாறே கைநழுவிச் சென்றது.

அதேபோன்று, டோக்கியோ மாநாட்டிலே நாங்கள் பங்குபற்றினால் என்ன விளைவுகள் ஏற்படும் பங்குபற்றாமல் விட்டால் என்ன வளைவுகள் எற்படும் என்பதையும் நாங்கள் முற்கூட்டியே எமது தலைவர்கள் அறிந்திருந்தார்கள். அந்த நிலையிலே டோக்கியோ மாநாட்டிலே விடுதலைப் புலிகளின் சார்பில் யாரும் பங்கேற்காமல் போனதும் ஆயுத போராட்டத்தின் பின்னடைவிற்கு ஒரு காரணமாக அமைந்தது.

அதேபோன்று இன்றைய சூழலில் தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மிகத் தெளிவாக விளங்கிச் செயற்பட வேண்டும். ஒவ்வொரு கால கட்டத்திலும் நாங்கள் நம்பிக்கையோடும், உலகத்தின் அனுசரணையுடனும் பேச்சகளிலே ஈடுபட்டோம். தற்போது இந்த 13வது திருத்தச் சட்டத்தை இந்தியாவின் அனுசரரணையுடன் முழுமையாகச் செயற்படுததுவதற்கு தமிழக் கட்சிகள் முன்வந்து செயற்படுகின்றார்கள்.

தற்போது நாட்டில் ஆட்சியில் இருக்கின்ற இந்த அசாங்கம் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிப்பது அல்லது அதனைச் செயலிழக்க வைப்பது போன்ற நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருகின்றது. அதற்காகத் தான் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு புதிய அரசியலமைப்பின் ஊடாக 13வது திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கை அரசாங்கம் எமது சுயநிர்ணயக் கொள்கை, தமிழர்களின் தேசியம் அனைத்தையும் மிக வேகமாக அழித்து இங்கே தமிழ் மக்களுக்கான தேசிய இனப்பிரச்சினை இல்லை என்பதை உலகத்திற்குக் காட்டி தமிழர் தாயத்தினை ஆக்கிரமித்து தனிச் சிங்கள பௌத்த நாடாக மாற்றவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்த விடயங்களில் நாங்கள் மிக நிதானமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். 13வது திருத்தச் சட்டம் முற்றுமுழுதாக பிடுங்கி எறியப்படுமாக இருந்தால் இலங்கை சீனாவின் பக்கம் முழுமையாகச் சாய்ந்து விடும். இந்தியாவின் உதவியைக் கோரி நிற்கும் தமிழர் தரப்பு நிச்சயமாகத் தோல்வி அடைவதற்கான வாய்ப்புகளே அதிகமாக இருக்கின்றது. 13வது திருத்தச் சட்டத்தைத் தாண்டி எம்மால் போக முடியாத நிலை இருந்தாலும். அதன் கீழ் போகாமல் 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டி தேவையும் எமக்கு இருக்கின்றது.

இந்தத்திருத்தச் சட்டம் முழுமையாக அமைய வேண்டுமாக இருந்தால் அதற்குப் பிரதான பங்காளியாக இருக்க வேண்டியது இந்தியா. இந்தியாவின் நலன் சார்ந்த விடயங்களில் ஈழத்தமிழர்கள் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் நிச்சயமாக இந்தியா ஈழத் தமிழர்களின் நலனிலே மிகவும் அவதானமாகவும், நம்பிக்கையைப் பேணும் வகையிலும் செயற்பட வேண்டும். அவ்வாறான ஒரு நிலை ஏற்படுமாக இருந்தால் நிச்சயமாக 13வது திருத்தச் சட்டத்தின் ஊடாக இருக்கின்ற எமது அதிகாரங்களையென்றாலும் தமிழர் தரப்பு கைப்பற்றக் கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றது. அந்த வகையில் தற்போதைய நிலையில் 13வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமையே இங்கு இருக்கின்றது.

13ஐ நாங்கள் நிராகரிக்க முயற்சி செய்வோமாக இருந்தால் இந்தியாவினால் இலங்கை மீது போடப்பட்டிருக்கின்ற கடிவாளம் அறுத்தெறியப்படும். அதன் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் நில ஆக்கரமிப்புகள், பௌத்த மயமாக்கல் திட்டங்கள் போன்ற அனைத்து விடயங்களும் மிக இலகுவாக இலங்கை அரசாங்கத்தினால மேற்கொள்ளப்படும்.

13ஐத் தாண்டி எமது மக்களுக்கான உரிமைகளை வழங்குவதாக இலங்கையில் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கூறிய கருத்து இந்த விடயங்களுக்குள் உள்வாங்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனெனில் வடக்கு கிழக்கு பகுதியில் சிங்களக் குடியேற்றம் முழுமையாக நிறைவேற்றப்படுமாக இருந்தால் வடக்கு கிழக்கில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறையும், சிங்களப் பிரதிநிதிகள் அதிகமாகத் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பு உருவாகும். அந்த நிலைமை தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் எவ்வகையான அதிகாரங்கள் வடக்கு கிழக்கிற்கு பகிரப்பட்டாலும் அது எமக்குத் தேவையற்றதாகவே அமையும்.

இன்று வடக்க கிழக்கில் சீனாவின் பிரவேசம், ஆதிக்கம், அபிவிருத்தி என்ற போர்வையில் சீனாவினால் ஆக்கிரமிக்கப்படும் நிலங்கள் போன்றன தொடர்பிலும் நாம் சிந்திக்க வேண்டும். இலங்கையில் தன்நிறைவுப் பொருளாதாரம் அமைவதற்கு சீனா ஒருபோதும் அனுமதிக்காது. விலை கொடுத்து இலங்கை நாட்டை வாங்கிக் கொள்வதற்காகவே சீனா முயற்சி செய்கின்றது. அந்த முயற்சியில் சீனா ஈடுபடுகையில் சீனாவைப் பயன்படுத்தி தமிழர்களுக்கெதிராக தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற சிங்கள தேசம் அறிவிலித்தனமாக செயற்படுகின்றது.

உண்மையில் தமிழ் மக்களுக்கான தீர்வாக வடக்கு கிழக்கு இணைந்த தம்மைத் தாமே ஆளக்கூடிய ஒரு அலகை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் எக்காலத்திலும் முயற்சி செய்ததும் இல்லை, முயற்சி செய்யப் போவதும் இல்லை. தமிழர்களுக்கு இவ்வாறானதொரு தீர்வுத் திட்டத்தைத்தான் வழங்கப் போகின்றோம் என்று சொல்லி தமிழர் தரப்பினை பேச்சுக்கு அழைத்ததும் இல்லை. நாங்கள் எங்கள் கொள்கைக்கு அமைய இலங்கை அரசாங்கத்தோடு வலுக்கட்டாயமாகவே பேச்சுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

நீண்ட காலம் கிடப்பிலே கிடந்த இந்த 13வது திருத்தச் சட்டத்தை நாங்கள் இன்று கதைத்துக் கொண்டிருக்கின்றோம். 13வது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தமிழர்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து ஒரு நேரிய பாதையிலே பயணித்தால் மாத்திரமே அதனை நடைமுறைப்படுத்தலாம் என்ற விடயம் உணரப்பட்டு இன்று சில முன்னெடுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆனால், மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெடுப்புகளும் மக்களை ஒரு குழப்பகரமான நிலைமைக்கு இட்டுச் செல்லுகின்றதே தவிர ஒருமித்து ஒரு கொள்கையின் அடிப்படையில் எமது மக்களைப் பயணிக்ககக் கூடியவாறான முன்னெடுப்புகளாக அமையவில்லை. நாங்கள் பல கூட்டங்களைக் கூடி கதைப்பதற்கு முன்னர் நாங்கள் எங்களை மாற்றிக் கொண்டு சரியான முடிவுகளை எடுக்கக் கூடிய நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது.

தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு தமிழ்த் தேசித்திற்கு வெளியில் நின்று செயற்படுகின்ற கட்சிகளும், 13வது திருத்தச் சட்டம் தேவையற்ற விடயம் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஒருசாராரும் இருக்கின்றார்கள். 13வது திருத்தச் சட்டம் ஈழத் தமிழர் நலன்சார்ந்த விடயங்களுக்கு மட்டும் கொண்டுவரப்பட்ட விடயம் அல்ல என்பதைத் தெளிவாக நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

13வது திருத்தச் சட்டம் அகற்றப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கைக சர்வாதிகார ஆட்சிமுறைமைக்குள் கொண்டு செல்லப்படும். பெரும்பானன்மை சமூகம் என்று சொல்லப்படுகின்ற சிங்கள தரப்புகளால் ஒருமித்த ஒரு ஆட்சியைக் கொண்டு வரலாம்.

பிரிக்கப்பட்ட மாகாணங்களில் காணி பொலிஸ் அதிகாரங்களை நிலை நிறுத்தியவாறு ஒரு அரசியலமைப்பில் சட்டமொன்று கொண்டு வரப்பட்டுள்ளது என்று சொன்னால் தற்போதைய நிலைமையில் அதனை நாங்கள் ஏற்று முன்கொண்டு செல்ல வேண்டி நிலைமை தான் இருக்கின்றது. அது தமிழ் மக்கள் சார்ந்து தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் ஒவ்வொரு அரசியற் தலைவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தற்பொது எங்களுக்கு இருக்கின்ற பலம் என்று சொல்லப்படுகின்ற அந்த விடயத்தை நாங்கள் எவ்வாறு கையாளமுடியும் என்று பார்க்க வேண்டும். அதனைக் கொண்டு வந்து விட்டால் போதுமென்று இருக்காமல் அதனை எவ்வாறு எமக்குச் சாதமாக பலம்மிக்க நிருவாக அலகாக மாற்ற முடியும் என்பது பற்றிக் கலந்தாலோசித்து இந்திய அரசாங்கத்தோடு பேச்சவார்த்தைகளில் ஈடுபட்டு 13வது திருத்தச் சட்டத்தினூடாக மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட்டு மக்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தையாவது தக்க வைத்துக் கொள்ளுகின்ற நிலைமையை இங்கு உருவாக்க வேண்டும்.

எந்தப் பலமும் இல்லாமல் நாங்கள் ஒரு விடயத்திற்குள் பயணிக்க நினைப்பது நிச்சயமாக எதிர்காலத்தில் மீண்டும் ஒரு அழிவினையே எற்படுத்தும். வரலாற்று ரீதியில் நாங்கள் தமிழ் மக்களின் விடுதலை தொடர்பான விடயங்களில் அவதானித்துக் கொண்டே வருகின்றோம். எமது கருத்துகளும் செயற்பாடுகளும் ஒருமித்த பாதையில் ஒரே கொள்கையில் உண்மையாகவும் நேர்மையாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

ஜனநாயக போராளிகள் கட்சி
தலைமைச் செயலகம்
Crusaders for Democracy Party




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை 10.01.1974

1974ஆம் ஆண்டு சனவரி மூன்றாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரை தமிழ் மக்கள் தமது மொழி, பண்பாடு என்பனவற்றை உள்ளடக்கி நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் மாநகர மேஜர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது. மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது.

இவைகள் எவ்வாறு இருந்தாலும், மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மன வெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட அரசாங்கம் சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.

மாநாட்டுக் குழுத்தலைவர் நீதியாளர் தம்பையா மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து விலகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதிவரை யாழ். முற்றவெளி திறநத் வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் யாழ். நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. அன்றைய தினம் குடாநாடு விழாக் கோலம் பூண்டிருந்தது.

1974ஆம் ஆண்டு சனவரி பத்தாம் திகதி இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள். மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதியாகத் தமிழகப் பேராசிரியர் "நைனா முகமது" பேசிக் கொண்டிருக்கும் போது யாழ். உதவிக்கு காவற்துறைமா அதிபர் சந்திரசேகரா தலைமையிலான காவற்துறை மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டார்கள். இச் சம்பவத்தில் ஒன்பது பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். அரங்குகள் சேதமடைந்தன. இம்மாநாட்டினைக் குழப்பிய யாழ் உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் காவற்றுறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

***10.01.1974 அன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் விபரம்:***

1. வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 – மாணவன்)
2. பரம்சோதி சரவணபவன் (வயது 26)
3. வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32)
4. ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 – ஆசிரியர்)
5. புலேந்திரன் அருளப்பு (வயது 53)
6. இராசதுரை சிவானந்தம் (வயது 21 – மாணவன்)
7. இராஜன் தேவரட்ணம் (வயது 26)
8. சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 – ஆயுள்வேத வைத்தியர்)
9. சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 – மாணவன்)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.







10.01.1974
தமிழ்மீது காதல்கொண்டனர்
கொலை வெறிக்காளாகி மாண்டனர்.

சி. நந்தகுமார் | வே. கேசவராசன் | ப. சரவணபவன்
இ. சிவானந்தம் | வ. யோகநாதன் | இ. தேவரட்னம்
பி. சிக்மா றிலிங்கம் | சி. ஆறுமுகம் | சி. பொன்னுத்துரை

இலங்கையில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று, சிங்கள அரசின் காவற் படையினரின் காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலியான ஒன்பது தமிழர்கள்.

## 4 வது உலகத் தமிழாராச்சி மாநாடு 03-09 தை 1974




நன்றி: 'ஒளியில் எழுதி' அமிர்தலிங்கத்துகான இலண்டன் வெளியீட்டிலிருந்து...

# சுன்னாகம் காவல்துறை நிலையப் படுகொலை 08.01.1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச எல்லைக்குள் சுன்னாகம் அமைந்துள்ளது. யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை செல்லும் கே.கே.எஸ் வீதியில் பத்து கி.மீ தூரத்திலுள்ள சந்திக்குத் தெற்குப் புறமாக இருநூற்றைம்பது மீற்றர் தூரத்தில் சுன்னாகம் காவல்துறை நிலையம் அமைந்திருந்தது.

1984ஆம் ஆண்டு தை மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்ட சுன்னாகப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சுன்னாகக் காவல்துறை நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

1984ம் ஆண்டு தை மாதம் எட்டாம் நாள் காவல்துறை மீது போராளிகளின் எதிர்ப்புக்கள் பரவலடைய சுன்னாகக் காவற்றுறையினர், இளைஞர்களைத் தடுத்து வைத்திருந்த அறையில் நேரக்கணிப்பு குண்டினை பொருத்திவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினார்கள். காவல்துறையினர் பொருத்திய குண்டு வெடித்ததில் காவல்துறை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களை காப்பாற்றச் சென்ற சஞ்சீவன் உட்பட பத்தொன்பது இளைஞர்கள் உயிரிழந்தனர்.

***08.01.1984 அன்று சுன்னாகம் காவற்றுறை நிலையப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. செல்லர் சிவலிங்கம் (வயது 22 – மாணவன்)
02. வைத்திலிங்கம் நிகேதனன் (வயது 21 – மாணவன்)
03. கந்தையா பாலன் (வயது 25 – கமம்)
05. அப்பையா நாகராசா (வயது 38 – வியாபாரம்)
06. ஆசீர்வாதம் விஜிற்விமலராஜா ( வயது 20 – மின்சாரசபை ஊழியர்)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்களின் படுகொலை 06.01.1984




வங்காலைக் கிராமம் மன்னர் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. புனித அருள் ஆலயம் இங்குள்ள மக்களின் வணக்கத்தலமாக உள்ளது.

1985 ஆம் ஆண்டு தை மாதம் ஆறாம் திகதி பூரணை தினத்தன்று பி.ப. 12:30 மணியளவில் வங்காலைக் கிராமத்தினை இராணுவத்தினர் சுற்றி வளைத்துக்கொண்டனர். நள்ளிரவு தொடக்கம் மறுநாள் காலை 10:00 மணிவரை வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

மேரி பஸ்ரியன் குருவின் வதிவிடத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டு இராணுவத்தினர் சென்றனர். குருவானவர் தனது மேலங்கியையும் அணிந்து கொண்டு செபமாலையுடன் வெளியே வந்து கைகளை மேலுயர்த்தியவாறு ஆங்கிலத்தில் "பிளீஸ்" எனக் கெஞ்சும் பொழுது அவரை நோக்கி இராணுவத்தினர் சுட்டனர் பங்குத்தந்தையுடன் நின்ற இரண்டு இளைஞர்களும் உயிரிழந்தார்கள். வெடிச்சத்தத்திற்கு பயந்து ஓடிய சிலரும் பலியாகினர். சிலர் கோயிலின் மேல் மாடியில் ஏறி பதுங்கியிருந்தார்கள. இராணுவத்தினர் பங்குத்தந்தையின் உடலை இழுத்து வந்து கன்னியர்மட வாசலிற் கிடத்திப் புகைப்படங்கள் எடுத்தனர். இவற்றைக் கோயிலின் மேல்மாடியில் ஒளித்திருந்த பொதுமக்கள் பார்த்தார்கள்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த பின் இராணுவத்தினர் ஒரே பாட்டும் கூத்துமாக இருந்தனர். பின்னர் இராணுவத்தினர் இறந்தவர்களை ஏற்றிக்கொண்ட சென்றுவிட்டனர். இதன் பின்னர் மக்கள் திரண்டு சென்று பார்த்தபோது மேரி பஸ்ரியனின் இருப்பிடம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டுது.

இறந்த மேரி பஸ்ரியனின் உடலைத் தரவி மற்ற எட்டுப் பேரின் உடல்களை மன்னார் வைத்தியசாலையிற் கொடுத்துவிட்டு, மேரி பஸ்ரியனின் உடலைத் தள்ளாடி இராணுவ முகாமிற்குக் கொண்ட சென்றுவிட்டனர். அவ்வேளையில் இந்த முகாமிலிருந்து எழும்பிய வழமைக்கு மாறான புகைமண்டலத்திலிருந்து அவரது உடல் எரிக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

இச்சம்பவத்தில் மேலும் பல இளைஞர்கள் வெடிபட்ட காயங்களுடன் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டு இரகசியமான முறையில் வைத்தியம் செய்யப்பட்டனர். இறந்தவர்களின் உடல்கள் வங்காலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

***06.01.1985 அன்று வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்கள் படுகொலையில் கொல்லப்பட்டபோர் விபரம்***

1. மரியதல்மைடா தாசன் (26)
2. சூசையப்பு மேன்பீரிஸ் (20)
3. ஞானசேகரம் றூபன்குரூய் (24)
4. சவிரியான் அந்தோனி (23)
5. மனியப்பன் நீலமேகம் (28)
6. சந்தியா அலெக்சாண்டர் முறாவிலி (33)
7. வணபிதா மேரி பஸ்ரியன் (-)
8. லூயிசம்மா பிராண்டா (60)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# திருகோணமலை தமிழ் மாணவர் படுகொலை – 02.01.2006




திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்குச் அருகாமையாக மாலைப் பொழுதில் தனிமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் இந்த இஞைர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டு கோட்டைப் பக்கமாகச் சென்றனர்.




கைக்குண்டு வெடித்தில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூஞ்குழலோன் என்பவர் காயமடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்க சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து



கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர். இத்தகைய காட்டுமிராண்டித் தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

***02.01.2006 அன்று திருகோணமலையில் கொல்லப்பட்டடோர் மாணவர் விபரம்***

1. லோகிதராசா றொகான் (20)
2. சண்முகராஜா சஜீந்திரன் (19)
3. மனோகரன் வஜீகர் (21)
4. தங்கத்துரை சிவானந்தன் (20)
5. யோகராஜா கேமச்சந்திரன் (22)

இச்சம்பவத்திற் காயமடைந்தவர்கள் விபரம்

1. பரராஜசிங்கம் கோகிலராஜா (21)
2. யோகராஜா பூங்குழலோன் (20)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



















# மன்னார் படகுத்துறைப் படுகொலை – 02.01.2007



02.01.2007 SLAF Bombardment on Padahuthurai

இலங்கையின் வடக்கே மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகருக்கு வடகிழக்கே சுமார் 20 மைல்களுக்கு அப்பாலுள்ள படகுத்துறைக் கிராமம். 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மீது சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கை காரணமாக யாழ்.நவாந்துறைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துவந்து 35 வரையான குடும்பங்கள் இக்கிராமத்தில் குடியேறி வாழ்ந்துவந்தனர். இவர்கள் கடற்றொழிலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டமையால் இக்கரையோரக்கிராமம் இவர்களது தொழில் நடவடிக்கைக்கு ஏற்புடையதாக இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தினைச் சேர்ந்தவர்கள். இக்கிராமத்தில் கத்தோலிக்க தேவலாயம் ஒன்று உள்ளது தேவாலயச் சுற்றாடல் பார்ப்பதற்கு மிகவும் இழகாக இருக்கின்றது. இம்மக்கள் மிகவும் சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்துவந்தனர்.

2007 ஜனவரி இரண்டாம் நாள் காலை இக்கிராமத்திற்கு மேலாக சிறீலங்கா சிங்கள வான்படையின் வேவு பார்க்கும் விமானம் ஒன்று பறந்துகொண்டிருந்தது. சரியாக 9:30 மணியளவில் இவ்வான்பரப்பில் நுழைந்த சிறீலங்கா சிங்கள வான்படையின் மூன்று கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன். கிராம மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்ந்ததனாலும் விமானங்களிலிலிருந்து ஏவப்பட்ட குண்டுகள் அனைத்தும் குடியிருப்புப் பகுதி மீதே வீழ்ந்து வெடித்ததாலும் அவர்களது வீடுகள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் முழுமையாக அழிவடைந்தன பெண்கள் சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 37 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலின் மொத்தப் பாதிப்பும் பொதுமக்களுக்கே ஏற்பட்டுள்ளது என்பதை மதத் தலைவர்களும் அப்பகுதி மக்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். பாதிப்படைந்த மக்களை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சென்று பார்வையிட்டுள்ளது. சிறீலங்கா விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலை நடவடிக்கையானது அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித நேயமற்ற ஒரு கொடுரத்தையே வெளிப்படுத்துகின்றது.

***02.01.2006 அன்று மன்னார் படகுத்துறைப் கொல்லப்பட்டடோர் மாணவர் விபரம்***

1. அ. ஆனந்தி (32)
2. அ. விதுசன் (04)
3. அ. இராஜகுமாரி (57)
4. அ. சக்தியப்பிள்ளை (26)
5. அ. குகன் (36)
6. கு. தயாழன் (02)

கு. வலஸ்தீனா (30)

8. ப. ஜமேசன் (12)
9. ச. மதுசன் (01)
10. உதயகுமார் (55)
11. உ. மாலினி (27)
12. உ. தர்சிகா (01)
13. வி. வினோயன் (04)
14. வி. தர்சினி (08)
15. வி. விஜிதா (35)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.


























# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை



இலங்கையின் இனப்பிரச்சினையில் 1974 ஆம் ஆண்டு ஒரு முக்கிய திருப்பம். ஆயுதப் போராட்டத்துக்கு நேரடியாக உந்தப் படுவதற்கான உடனடிக் காரணிகள் உருவான ஆண்டு அது. தமிழாராய்ச்சி மாநாட்டு குழப்பங்கள் அதிரடியாக ஆயுத முனைப்புக்கு தள்ளியது.

1974 ஆம் ஆண்டு தை மாதம் 3 இலிருந்து தை மாதம் 10 ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.



தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் – 1974

தமிழாராய்ச்சிகளுக்கு ஊக்கமளிக்கும் நோக்குடன் வண பிதா சேவியர் தனிநாயகம் அடிகளால் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு 1966இல் மலேசியாவின் கோலாலம்பூரில் இடம்பெற்றது. அன்றைய மலேசியப் பிரதமர் துங்க்கு அப்துல் ரஹ்மான் ஆரம்பித்து வைத்த மாநாட்டுக்கு பல நாடுகளிலிருந்தும் தமிழ் ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் கலந்துகொண்டனர். இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1968ஆம் ஆண்டு ஜனவரியில் மெட்ராசில் (சென்னை), இந்தியாவில் நிகழ்ந்தது. அன்றைய இந்திய குடியரசுத் தலைவர் ஸாகிர் /ஹுசைனினால் அது ஆரம்பித்து வைக்கப்பட்டது. மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1970இல் பிரான்சின் தலைநகர் பாரிஸ் நகரத்தில் இடம்பெற்றது. அதனை யுனெஸ்கோவின் தலைவர் டாக்டர் மல்கம் ஆதிசேஷையா ஆரம்பித்து வைத்தார்.



தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் தனிநாயகம் அடிகளார் – 1974

*குழப்ப முயற்சி*

இந்தப் பின்னணியில் இலங்கையில் நிகழவிருந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகள் பற்றிய கூட்டமொன்று கொழும்பில் நடத்தப்பட்டது. சிறிமா அரசாங்கத்தின் ஒரேயொரு தமிழ் அமைச்சரான அமைச்சர் குமாரசூரியரின் ஆதரவாளர்கள் முதல் மூன்று மாநாட்டிலும் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை இலங்கை மாநாட்டிலும் கடைபிடிக்க வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினர். அதாவது இலங்கையின் தலைநகர் கொழும்பில், பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கவின் அங்குரார்ப்பணத்துடன் அது நிகழவேண்டும் என்றனர். பிரதமர் சிறிமாவோ தமிழ் மக்கள் மத்தியில் இழந்துவந்த செல்வாக்கை சரிசெய்ய இதனைப் பயன்படுத்திக்கொள்ள முயன்றார். மாநாட்டுக்காக கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க சரவதேச மாநாட்டு மண்டபத்தை இலவசமாக வழங்கவும், மாநாட்டுக்கான ஒத்தாசைகளை வழங்கவும் தயாரென்று ஏற்பாட்டுக் குழுவுக்கு அறிவித்திருந்தார்.

**“1974 ஜனவரி 10ம் தேதிச்சோகம் தமிழ்த்தேசிய தீவிரவாதத்தினை மீளமுடியாத எல்லைக்கு இட்டுச் சென்றது. அப்பொழுது இளைஞர் உரையாடுவதும் உடன்படிக்கையும் சிங்கள பௌத்தமயமான அரசுகளுடன் வீண் என்றும் பயன் எதுவும் அளிக்கப்போவதில்லை என்றும் உணர்ந்தார்கள்.” என்றார் பேராசிரியர் ஏ. ஜே. வில்சன்**

ஆனால் அந்தக் கூட்டத்தில் சமூகமளித்திருந்த பெரும்பாலானோர் விரும்பவில்லை. தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பையும் அதிருப்தியையும் எதிர்கொண்டிருக்கும் பிரதமர் சிறிமா கலந்துகொள்வதன் மூலம் அரசியல் சாயம் பூசப்பட்டுவிடும் என்றும் தமிழ் மக்கள் செய்வாக உள்ள யாப்பாணத்தில் நடத்துமாறும் கோரினர். இதனால் கோபம்கொண்ட எச்.டபிள்யு தம்பையா மாநாட்டு ஏற்பாட்டு தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார்.

அரசாங்கத்துக்கு ஆதரவான பலரும் அதிலிருந்து வெளியேறினர். அந்த வெற்றிடங்களை நிரப்பியவர்கள் பலர் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களாகத் தான் இருந்தனர். அக்கூட்டத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைவராகவும், ரி.துரைராஜா செயலாளராகவும், கோபாலப்பிள்ளை மகாதேவா பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஏனைய மாநாடுகள் தலைநகர்களில் நடந்ததாக இருந்தால் இந்த மாநாடும் தமிழர் தலைநகராக அதுவரை பேசப்பட்ட திருகோணமலையில் நடத்தியிருக்க வேண்டும் என்கிற மாநாடு நடைபெறாது எனும் ஐயப்பாட்டையே தோற்றுவிக்கத் தலைப்பட்டன.

உத்தியோகபூர்வமான அனுமதி கிடைக்கப்பட்டதன் பின்னர் தான் வேகமாக ஏற்பாடுகள் நடந்தன. யாழ் நகரையே விழாக்கோலம் பூணும்வகையில் ஒழுங்குகளை மக்கள் முன்னின்று அழகுபடுத்தினார்கள். அரசாங்கத்தின் எந்த உதவியும், ஆதரவுமின்றி வெற்றிகரமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஒரு வகையில் இந்த மாநாட்டுக்கு கொடுக்கப்பட்ட நெருக்கடிகள் தமிழ் உணர்வாளர்களின் ஓர்மத்தை சீண்டிப்பார்ப்பதாவே அமைந்தது. இதனை வெற்றிகரமாக நடத்தி முடிக்க அவர்கள் பெரும் சிரத்தை எடுத்துக்கொண்டார்கள்.

*எழுச்சிமிக்க உணர்வுபூர்வமான மாநாடு*

முன்னைய மாநாடுகளில் கடைபிடிக்கப்பட்டதைப் போல இதன் அங்குரார்ப்பனத்திற்கும் பிரதமரை அழைத்திருக்கலாம். ஆனால் அந்த அழைப்புக்கு முன்னரே பிரதமர் பாதுகாப்பு காரணங்களைக் காட்டி மறுத்துவிட்டார். இப்படியான சந்தர்ப்



*வீரசிங்கம் மண்டபமும் கொல்லப்பட்டவர்களின் எதிரில் நினைவுத் தூபி*

குரலும் எழாமலில்லை.

குமாரசூரியரும் அவரின் ஆதரவாளர்களும் அந்த மாநாடு தமிழரசுக் கட்சியின் விழா என்று பிரச்சாரம் செய்தனர். அது அரரசாங்க விரோத சக்திகளின் நடவடிக்கை என்றும் கூறினர். இதற்கு எந்தெந்த வகையில் முட்டுக்கட்டை போடலாமோ அந்தளவு இடையூறுகளை செய்துகொண்டிருந்தனர். மாநாடு பற்றி பொது மக்களுக்கு அறிவிப்பதற்காக ஒலிபெருக்கி பாவனைக்கான அனுமதியை கொடுக்க பொலிசாரும் மறுத்தனர்.

மகாநாட்டுக்கு வரவிருந்த பல வெளிநாட்டு பேராளர்களின் விசா மறுக்கப்பட்டன. விசாவின்றி வந்தார்கள் என்கிற குற்றச்சாட்டில் வந்து இறங்கிய நான்கு பேராளர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நாடு கடத்தப்பட்டார்கள். அவர்கள் தத்தமது நாடுகளில் அந்த அநீதி குறித்து ஊடகங்களுக்கு விளக்கினார்கள். அமைப்பாளர் குழுவில் இருந்த கொ.கமாதேவா, மறவன்புலவு க.சச்சிதானந்தம் ஆகியோர் அரசாங்கத்தினரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியபின்னர் தான், அதுவும் சிலருக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விசா வழங்கியிருந்தது.

மாநாட்டை நடத்துவதற்காக வீரசிங்கம் மண்டபமும், திறந்த வெளி அரங்கத்தையும் உபயோகிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோதும் குமாரசூரியரின் தலையீட்டால் அதற்கான அனுமதி வழங்கப்படுவது இழுத்தடிக்கப்பட்டு வந்தது. மாநாட்டுக்கு மூன்று நாட்களுக்கு முன்பு தான் அந்த அனுமதி கிடைத்தது. தொடர்பு ஊடகங்களான பத்திரிகைகளும், வானொலியும் பங்களில் அந்த பகுதி மேயர் அந்த தகுதியைப் பெறுவார். யாழ்ப்பாணத்தில் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பாவும் ஆளுங்கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்ததால் அவரை அழைப்பதையும் தவிர்த்தனர். அவரை சம்பிரதாயத்துக்குக் கூட அழைப்பதை தவிர்த்தனர். அதற்குப் பதிலாக வன பிதா தனிநாயகம் அடிகளாரே 1974 ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார். எழுச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் தொடங்கியது.

ஜனவரி மாதம் 10ஆம் திகதி வெளிநாடுகளில் இருந்து கலந்துகொண்ட அறிஞர்களை வழியனுப்பும் நிகழ்வாக ஒழுங்கு செய்யப்பட்டது. பெருமளவானோர் பேச எற்பாடாகியிருந்ததால் வீரசிங்கம் மண்டபம் அதற்கு போதவில்லை. எனவே அந்த நிகழ்வினை, வீரசிங்கம் மண்டபத்துக்கு வெளியில், திறந்தவெளி நிகழ்வாக நடத்தினர். இதற்கான அனுமதியை பொலிசார் வழங்கியிருந்தபோதும் சட்ட விரோதமாக வந்த ஜனார்த்தனன் நிகழ்வில் பேசமுடியாது என்ற நிபந்தனை இருந்தது.

ஆனால் அன்றைய தினம் மைதானம் திறந்திருந்த போதும் புறப்படலைகள் பூட்டப்பட்டிருந்தன. மாநகர முதல்வரிடமிருந்து கடிதம் வாங்கி வந்தால் மாத்திரமே அதனை திறக்க முடியும் என்று வெளியரங்க காப்பாளர் திறக்க மறுத்துவிட்டார். மாநகர முதல்வர் அல்பிரட் துறையாப்பாவை கண்டுடிக்கவும் முடியவில்லை. எனவே வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் ஒரு திடீர் மேடை போடப்பட்டது.

விழா ஆரம்பமாகியது ஏறத்தாழ 50,000 பேரளவில் வீதி



# உயிர் விட்டுத் தமிழ் வளர்த்த ஒன்பது செல்வங்கள்!

யெங்கும் அமர்ந்து இருந்தனர். அப்போது போக்குவரத்து கட்டுப்பாட்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர் சேனாதிராஜா தன் மோட்டார் சைக்கிளில் கூட்டத்துக்கும் மேடைக்கும் நடுவில் போக முயன்ற போது ஏற்பாட்டுத் தொண்டர்கள் அதனை மறித்து அது பண்பல்ல என்று சுட்டிக்காட்டியதும் அவர் வேறு வழியில் சென்று விட்டார். ஆனால் சற்று நேரத்தில் இன்னொரு பொலிஸ் அதிகாரி அதுபோலவே அவரிடம் பேசி அனுப்பினர். அவர் போலீசுக்குத் திரும்பி இன்ஸ்பெக்டர் நாணயக்காரவிடம் வீதியை இடைமறித்து கூட்டம் நடத்துவதாக ஊதிப்பெருப்பித்துக் கூறினார். இரவு 8.30 மணியளவில் உதவி பொலிஸ் சுப்பிரின்ரண்டன் சந்திரசேகரவின் தலைமையில் கழகம் அடக்கும் பொலிசாரை ஏற்றிக் கொண்டு ஒரு ட்ரக்கில் வந்து சேர்ந்தார். இந்த மாநாட்டு பாதுகாப்புக்கென்று ஏற்கனவே தென்னிலங்கையில் இருந்து வருவிக்கப்பட்டிருந்த பொலிசாருக்கு வேலை காத்திருந்தது.

ஜனார்த்தனன் திடீரென்று மேடையில் தோன்றினார். அங்கே அது சலசலப்பை ஏற்படுத்தியது. போலீசாருக்கும் இது வாய்ப்பாக அமைந்தது. மேடையில் இருந்த டொக்டர் மகாதேவா, பேராசிரியர் வித்தியானந்தன், துரைராஜா, அமிர்தலிங்கம் போன்றோரும் மாறி மாறி அவரை கீழே இறங்கக் கோரினர். பொலிசார் எந்த நேரத்திலும் குறுக்கிட்டு தலையிடலாம் என்கிற நிலையும் இருந்தது. அப்போது நெய்னார் முகமது பேசிக் கொண்டிருந்தார்.

### *விபத்தல்ல படுகொலை*

ட்ரக்கை முன்னோக்கி செலுத்தியபடி பின்னால் இருந்து கலகப் பொலிசார் நடந்து சென்றனர். கலைந்து செல்லுமாறு ஒலி பெருக்கியில் மக்களுக்கு உத்தரவிட்டபடி முன் சென்ற போது தொண்டர்கள் ஓடிப்போய் கூட்டத்தைக் குழப்ப வேண்டாம் என்று கோரினார்கள்.

சனத்திரளின் மீது பொலிசார் தாக்குதலை ஆரம்பித்தார்கள். கலவரத் தடுப்புப் பொலிஸாரினால் கலவரம் உருவாக்கப்பட்டது. மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். மக்கள் சிதறி ஓடினர். கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. தடியடிகள் நடத்தப்பட்டன. வான் நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. பெண்களும் பிள்ளைகளும் நெரிசலில் மிதிபட்டுக் காயமடைய நேரிட்டதுடன் அநேகர் உடுத்த உடைகளையும் இழக்க நேரிட்டது.

அப்படி வான் நோய்க்கி பாய்ந்த ஒரு தோட்டா வீதியோர மின்சார கம்பியில் பாய்ந்ததில் கம்பி அறுந்தது. மின்சாரம் தடைப்பட்டதில் இருளும் சேர்ந்துகொண்டது. சிதறியோடிய மக்கள் கூட்டத்தினரில் ஒன்பது பேர் அந்த மின்சாரக் கம்பி தாக்கி 7 பேர் ஸ்தலத்திலேயே துடிதுடிக்க உயிரிழந்தார்கள். இருவர் பின்னர் ஆஸ்பத்திரியில் இறந்தார்கள்.

இந்த அராஜகங்களை வெளிநாடுகளில் இருந்து கலந்து கொண்ட அறிஞர்களும் நேரடியாக கண்ணுற்றார்கள். இந்த சம்பவம் நாடு முழுவதும் ஒரு அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. சிறிமாவோ அரசாங்கம் உண்மையைக் கண்டறிய ஆர்வம் காட்டவில்லை. தமிழர் ஐக்கிய முன்னணியினர் (தமிழர் விடுதலைக் கூட்டணி) இந்த கலவரத்துக்குக் காரணம் அல்பிரட் துரையப்பா என்று குற்றம்சாட்டினர். ஒரு வகையில் இந்த நிலைமைகளுக்கும் அவருக்கும் தொடர்பிருப்பதற்கான நேரடி ஆதாரங்கள் எதுவும் இருக்கவில்லை.

அன்றைய இரவு, யாழ்ப்பாணம் பிரதான வீதியிலிருந்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது. அல்பிரட் துரையப்பா சிறிமாவோ அரசாங்கத்தைச் சேர்ந்தவர் என்பது அவர் மீது இந்தப் பழி விழ காரணமானது. துரையப்பா மாநாட்டுக்கு அழைக்கபடாத்தால் அவர்தான் இந்த வன்முறையை கட்டவிழ்த்துவிட்டார் என்கிற பிரச்சாரம் வேகமாக பரப்பப்பட்டிருந்தது.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் டாக்டர் ஜனார்த்தனனைக் கைது செய்வதற்கு ஏற்பாடுகள் நடந்தன அவர் ஒரு கிறீஸ்தவ மதகுருவின் உடையில் மாறுவேடம் பூண்டு ஜனார்த்தனன் கொழும்பு சென்றடைய இந்திய தூதரகம் மூலம் பாதுகாப்பாக அவர் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மேயரையும், போலிசையும் எதிர்த்து ஹர்த்தால் போராட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்தன தமிழ் கட்சிகளும் அமைப்புகளும்.

### *தமிழாராய்ச்சி மாநாட்டு சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள்*

பெயர் - ஊர் - தொழில் - வயது

1. வேலுப்பிள்ளை கேசவராஜன், தொல்புரம், மாணவன், 15
2. பரம்சோதி சரவணபவன், பருத்தித்துறை, -, 26
3. வைத்தியநாதன் யோகநாதன், பளை, - , 32
4. ஜோன்பிடளிஸ் சிக்மறிங்கம், யாழ்ப்பாணம், ஆசிரியர், 52
5. புலேந்திரன் அருளப்பு, -, தொழிலாளி, 53
6. இராசதுரை சிவானந்தம்,நாச்சிமார்கோயிலடி-மாணவன், 21
7. இராஜன் தேவரட்னம், நாயன்மார்கட்டை, - , 26
8. சின்னத்துரை பொன்னுத்துரை, கோப்பாய், ஆயுர்வேத வைத்தியர், 56
9, சின்னத்தம்பி நந்தகுமார், சுழிபுரம், மாணவன், 14

### *குற்றவாளிகளுக்கு பதவியுயர்வு*

ஒரு நீதியான விசாரணையை சிறிமாவோ அரசாங்கம் நடந்தி உண்மையைக் கண்டறிந்து இருக்கலாம், ஆனால், சிறிமாவோ அரசாங்கமோ இந்த விடயத்தை உதாசீனம் செய்தது. குற்றமிழைத்த பொலிசார் தண்டனை பெறுவதற்குப் பதிலாக பதவியுயர்வு பெற்றனர். பிரதான காரணமாக இருந்த யாழ் உதவிக் காவற்துறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்கவால் காவற்துறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

இந்தப் போக்கு தமிழ் மக்கள் மீது பழி தீர்க்கும் வடிவங்களாகவே தமிழ் மக்கள் பார்த்தார்கள். ஏற்கெனவே பிரிவினையையும் ஆயுத வன்முறையையும் வேண்டிய தமிழ் இளைஞர்களுக்கும் மேலும் சினத்தை உருவாக்கியிருந்தது. மறுபுறம் தமிழ் இளைஞர்கள் மத்தியில் அல்பிரட் துரையப்பா மீது கடும் வெறுப்பு தலைதூக்கியது. அல்பிரட் துரையப்பாவை தீர்த்துக்கட்டும் முடிவுக்கு இந்த உணர்ச்சி நிலை வலுப்பட்டது. தமிழ் அரசியல் வன்முறை வடிவத்துக்குள் பிரவேசிக்கதோதான சூழ்நிலை உருவாகத் தொடங்கிற்று.

அடுத்து வரும் வருடங்களில் தமிழ் மக்கள் நிறைய கலவரங்களைச் சந்திக்கவும் நிறைய அடிகளை வாங்கவும் நிறைய இழப்புகளுக்கு ஆளாவதற்கும், இதுவோர் ஆரம்பமாக இருந்தது.

இந்த சம்பவத்தை விசாரணை செய்ய உத்தரவிடும்படி கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அன்றைய சிறிமா அரசாகங்கத்தால் அது திமிர்த்தனமாக நிராகரிக்கப்பட்டது.

மாநாட்டுக் கலவரம் தொடர்பாக, உண்மை நிலையை ஆராய அரசு சார்பற்ற நிறுவனமான 'யாழ்ப்பாண பிரஜைகள் குழு' ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்தது. இதன் தலைவராக ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஓ.எல்.டி.கிரைஸ்டர் நியமிக்கப்பட்டார். இந்த விசாரணைக்குழு தனது அறிக்கையை 1974-ம் ஆண்டு பிப்ரவரி 18-ந்தேதி அளித்தது. அதில், "எந்த வித ஆத்திரமூட்டலும் இன்றி போலீசார் கண்ணீர் புகை பிரயோகம் செய்தனர். தேவையில்லாமல் மக்கள் மீது தாக்குதல் நடத்தியதற்கு போலீசாரே பொறுப்பு" என்று கூறப்பட்டிருந்தது. இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதன் முடிவை அரசு ஏற்கவில்லை..

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்த ஒன்பது பேரின் ஞாபகார்த்தமாக வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது. ஒன்பது நினைவுத்தூண்களைச் சூழ அந்த தூபி அமைக்கப்பட்டுள்ளது. அரச படையினரால் பலமுறை இடித்து வீழ்த்தப்பட்ட தூபி பல தடவைகள் திருத்தப்பட்டு இன்றும் வருடாந்தம் ஜனவரி 10ஆம் திகதி தமிழர்களால் வணக்கம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் ஒரு எதேச்சையான சம்பவமாக தோற்றம் தந்தாலும். இந்த சமவத்துக்கான பின்புல நீட்சி என்பது ஒரு அரசியல் ஒடுக்குமுறையின் வழிவந்த விளைவு என்பதை நாம் உணர முடியும். எனவே இது தான் இந்த சம்பவத்தை விபத்தென எவரும் கொள்வதில்லை. அதுவரையான அரசியல் கள நிலைமையின் விளைவு இது என்றால் அதன் பின்னர் நிகழப் போகும் மோசமான அரசியல் விளைவுகளுக்கு இது ஒரு முத்தாய்ப்பை திறந்து விட்டது.







நன்றி: தினக்குரல் 04. 06. 2017, என். சரவணன்



*With Best Wishes From*

# KENNEDY LAW OFFICE

உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்.....

## கெனடி சட்ட அலுவலகம்

- ☑ REAL ESTATE LAW — காணி, வீடுகள் – வாங்கல், விற்றல், அடமானம்
- ☑ BUSINESS LAW — வணிகச் சட்டம்
- ☑ CRIMINAL LAW — குற்றவியல் சட்டம்
- ☑ FAMILY LAW — குடும்பச் சட்டம்
- ☑ IMMIGRATION LAW — குடிவரவுச் சட்டம்
- ☑ ODSP APPEALS
- ☑ SMALL CLAIMS
- ☑ WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
- ☑ NOTARIZING & COMMISSIONING





**W.KENNEDY BERNADIUS, LL.B**
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC

**Tel: 416 613 4900**
Fax: 416 613 4904
E: williamkennedylaw@gmail.com

2390 Eglinton Ave., East, Suite# 250, Scarborough, ON M1K 2P5 (Kenndy & Eglinton)

# WEXFORD
WELLNESS CARE INC.







**We treat all car accident injuries!**

- ✶ Massage Therapy
- ✶ Physiotherapy
- ✶ Orthopaedic
- ✶ Acupuncture
- ✶ Chiropractic
- ✶ Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

**Tel: 647-349-5120**
**Fax: 647-349-5121**

Serve Two Location

Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

# சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர் பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203




# நம் தாயகம்

வாங்குவீர்... வாழ்வு தருவீர்!

**பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்**
**போரில் அவயங்களை இழந்தோருக்கான**
**தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்**

முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைப் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி

*முள்ளிவாய்க்காலில் இருந்து...*



"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"



**Tel: 416-558-2111**
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)

# முகம் அறியாத உறவிற்கு ஒரு கடிதம்

எனக்காகத் தீக்குளித்த உடன்பிறப்பே, இனத்திற்காய் உயிர் துறந்த உறவே, உன் பெயர் அறியேன், உன் முகம் அறியேன், சரியான உன் முகவரி அதுதானும் இறியேன், ஆயினும் இதை எழுதுகிறேன். இக் கடிதம் உனக்கு வந்துசேராது என்பதுவும் எனக்குத் தெரியும். ஆனாலும் உன் அர்ப்பணிப்பைக் கூறாமல் இருக்க முடியவில்லை. எம் தேசத்தின் இளம் தலைமுறை இன்று புதிய விதத்தில் சிந்திக்கத் தொடங்க வேண்டும் என்பதற்காய் எழுதுகின்றேன்.




நீ தீக்குளித்த செய்தி அறிந்து திகைத்தேன். வேதனையோடு வெட்கத்துள் முகம் புதைத்து அழுதேன். உனக்காக மட்டுமல்ல, என்னையும் எண்ணித்தான். பேர் அறியா உறவே என்னை உனக்குத் தெரியாது. ஆனால் இன்று எனக்கு மட்டுமல்ல உலகத்திற்கே உன்னைத் தெரிந்துவிட்டது. என மனக் கண்ணில் நீ நடாத்திய யாகம் தெரிகிறது. நீ எழுதிய இறுதி வரிகளும் தெரிகிறது. நீ எரிகிறாய், நெய்யாய் உருகிறாய், புழுவாய் நெளிந்து விழுகிறாய். ஐயனே நீ படும் வேதனையை என்னால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. ஏன் இந்த வேதனை? யாருக்காக இந்தத்தியாகம்? எனக்காகத்தானே, என் எறவுக்காகத்தானே, என் அம்மாவிற்காக, என் அப்பா விற்காக, அக்காவிற்காக, தம்பி தங்கைக்காக, என் குடும்பத் திற்காக, எங்கிருந்தோ நீ உன்னை வருத்தி உயிரை விட்டாய். ஆனால் நான் மட்டும் இங்கே. என் உறவிற்காக உயிர் நீத்த உத்தமனே, ஏன் இப்படிச் செத்தாயோ? எனக்குப் புரிகிறது. உனக்கும் ஒரு சொந்த நாடு இருந்திருக்குமானால் நீ இப்படி யாசித்து மாண்டிருக்க மாட்டாய். படைதிரட்டி வந்து தமிழன் யார் என்பதைக் காட்டியிருப்பாய். என்ன செய்வது? உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழனுக்கு ஒரு நாடு இல்லை. சுதந் திரமாய் குந்தி இருக்க ஒரு கூடு இல்லை. தமிழனாகப் பிறந் ததற்காக நிம்மதியான ஒரு வாழ்வு இல்லை. இந்த அவல நிலைமையை மாற்றப்போவது தமிழீழம் தான் என்பதை நீ சரியாகப் புரிந்து கொண்டாய். தமிழன் என்றாலும் உணர்வால் ஒன்று பட்டவன் என்ற தத்துவதற்திற்கு புத்துயிர் ஊட்டிவிட்டாய். என் இனத்தின் இரத்தமே, உன் தேசத்தில் நீ மூட்டிய நெருப்பு உன்னை மட்டும் எரிக்கவில்லை. தமிழ் உருவத்தில் எதிரிக்கு கொள்ளி கொடுக்கும் கோடரிக் காம்புகளின் போலி முகத் தோலையும் எரித்துவிட்டது. எம் தேசத்தின் இளைஞர், யுவதி களின் நெஞ்சத்திலே புதிய வேகத்தை ஊட்டிவிட்டது. இனியும் எம் இளம் தலைமுறை உறங்காது. வழித்து எழும். எம்பகை வேருடன் விழும். உன் நினைவு எம் நெஞ்சத்தில் நீங்காது வாழும்.

இப்படிக்கு
தமிழீழத்தின் உடன்பிறப்பு




## அப்துல் றவூப்

தமிழர்களின்
விடுதலைக்காக
முதன் முதலில்
தன் உடலில்
தீயிட்டு உயிர்துறந்த
ஈகையர்
15.12.1995

## தமிழினத் ஈகையர் அப்துல் ரவு:.ப்வுக்கு தலைசாய்த்து வணங்கின்றோம்.




நெஞ்சம் கனக்க, முகம் தெரியாத அந்த தியாகியின் உயிர்த்துடிப்பை எம்முள் நிறைத்துக கொண்டோம். போராளிக்குரிய உறுதி. தியாகத்தின் எல்லையைத் தொட்டு உலுப்பும் கரும்புலிகளை ஒத்த தற்கொடை. தான், தன்வீடு, தன்தேசம் என்ற எல்லை கடந்து அயலில் அழுது துடிக்கும் தன் இனத்துக்காக நெஞ்சு துடித்தவர். ஈழத்தமிழருக்காய் உயிர் கொடுத்த மானத்தமிழன் அப்துல் ரவுஃப். இன்று அவரது பெயர் ஈழத்தமிழர்களின் உள்ளங்களில் உச்சரிக்கப்படுகின்றது. தமிழீழமே திரண்டு அவர் தியாகத்திற்காய் கண்ணீர் வடித்ததே. போராளிகளை அஞ்சலிக்கும் எம் மண்ணில் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்த் தியாகி அப்துல் ரவுஃப்புக்கு வணக்கம் செலுத்த எம் தேசம் திரண்டதே. ஒரு போராளியாய் அந்தத் தூய தமிழ்த்தியாகி எம்முடன் வாழ்வார்.




அவரது இந்த உறுதியான தடம், உணர்வுள்ள தமிழர்களுக்கு பாதையாய் அமையட்டும். நெருப்பில் வெந்து துடிக்கும் உதட்டுக்குள்ளால் “ஈழத்தமிழரைக் காப்பாற்றுங்கள்” என்ற வார்த்தை மட்டுமே வந்ததாம். கேட்டதில் நெஞ்சம் கனதியானோம். மலர்வளையம் வைத்து வணங்குவதிலும் பார்க்க உள்ளக் கமலத்தில் உட்கார வைத்துள்ளோம். தமிழீழத் தமிழ ரையும், ஈழத்தமிழரையும் பிரித்து வைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கும் அக்கிரமக் காரர்களின் தலைகளில் ஆயிரம் அப்துல் ரவுஃப்கள் இடியாய் விழுவார்கள்.

வரலாற்றைப் பிரித்துப் போடப் பார்க்கிறார்கள். தொப்புள்கொடி உறவை துண்டாடிவிடப் பார்க்கிறார்கள். தாயிருக்க சேயின் உயிர் பறிக்கத் துடிக்கிறார்கள். கலந்திருக்கும் எங்கள் சுவாசக் காற்றில் நஞ்சைத் தூவக்காத்திருக்கிறார்கள். ஆனால் யாவும் சத்தின்றி சருகாகிப் போகும் என்பதைத்தான் அப்துல் ரவுஃப்பின் தியாகம் எடுத்துரைக்கின்றது. தமிழக மக்களின் உணர்வின் வெளிப்பாடாய், எழுச்சியின் குறியீடாய்த்தான் அவரது தியாக மரணத்தைக் கருதமுடிகிறது. தாய் சேய் உறவைப் பிரித்துப் போடத் துடிக்கும் நாச சக்திகளுக்கு தன்னைக் கொடுத்து ஒரு பாடத்தைப் புகட்டியிருக்கிறார் அப்துல் ரவுஃப். இந்த உலகத்தை விட்டுப்போகும் இறுதித் தறுவாயில் இவர் உரைத்த கடைசி வார்த்தை “இன்று நான் நாளை தமிழகம்”

“வாழ்க அப்துல் ரவுஃப் புகழ்”

# வீட்டுக்கு வேலி அல்ல... நாட்டுக்கு எல்லை வேண்டும்!

ஒவ்வொரு மனிதனின் பிறப்புக்கும்
அர்த்தம் இருக்கிறது.
பிறப்புக்கும் இறப்புக்குமான இடைவெளிக்குள்
எல்லோருமே பூமியில் தாம் பிறப்பெடுத்ததை
அழியாத பதிவாக்கிவிட்டுப் போகமுடியும்.
ஆனால்... அதிகமானவர்கள் முயற்சிப்பதில்லை.
சோம்பற் கதிரைகள் எம்மை எழும்பவிடுவதில்லை.
விறகாகும் மரங்களைப் போல
காய்ந்து, எரிந்து, சாம்பலாகி விடுகின்றோம்.
பூமிப் பந்தெங்கும் தெரிந்தவர்களாக...
ஒரு சிலரே உயர்ந்து நிற்கின்றனர்
ஒரு தந்தை தந்தைக்குரிய கடமையை,
ஒரு தாய் தாயக்குரிய பொறுப்பை,
ஒரு கணவன் கணவனுக்குரிய பணியை,
ஒரு மனைவி மனைவிக்குரிய கடமையை,
விரும்பி ஏற்றுச்செய்து முடிப்பது போல
ஒரு மனிதன் தன் மண்ணுக்குரிய கடமையை,
ஒரு தமிழன் தன் தாயகத்துக்குரிய பணியை
விரும்பி ஏற்றுச் செய்வது வெகுகுறைவு.
அன்னதான மண்டபத்தில...
முதற்பந்திக்கு முன்னேறத் துடிக்கும் தமிழன்
இரத்ததானமென்றால் மட்டும்
தன்னை ஒட்டியுலர்ந்தவனாக
உருவகித்துக் கொள்ளுகின்றான்.
தாய் மண்ணுக்கு எல்லையிட வாருங்கள்
என்றால்
எழுந்து வராத தமிழன்
தான் குடியிருக்கும் வளவுக்கு மட்டும்
ஐந்து வேலியும்
பன்னிரண்டு படலையும் போட்டு
இருபத்துநான்கு பூட்டும் பூட்டிவிட்டு
திறப்பை இடுப்பிலேயே வைத்திருக்கின்றான்.
இன்று தேவைப்படுவதெல்லாம்
நாட்டுக்கு எல்லையே தவிர
வீட்டுக்கு வேலியும், பூட்டுமல்ல...
தேவை ஏற்படும் போது மட்டும்
தேசம் எங்களை அழைத்துக் கொள்கிறது.
இன்று அன்னை பூமி அழைப்பு
விடுத்துள்ளாள்.
இந்தக் “காலத்தின் குரல்” காற்றிலே பரவி
பிறவிச் செவிடர்களுக்கு கூட
அதிர்வுகளை ஏற்படுத்துகின்றது.
தாய்நிலத்தின் வாழ்வும், தாழ்வும்
சேய்களாகிய எங்களுக்கே சேரும்.
எத்தனை காலத்துக்கு எங்கள் தேசம்
சிறைப்பட்டிருப்பது?
இன்னும் எத்தனை வருடங்களுக்கு
அன்னைமண் அழுதுகொண்டிருப்பது?
நாங்கள் பாதம்பட ஏறிமிதிக்கும் போது
மேனி சிலிர்த்துக்கொள்ளும் தாயகம்
எதிரி முத்தமிட்டாலும் ஏற்றுக்கொள்வதில்லை.
தன் பிள்ளைகள் சிறுநீர் கழித்தால்...
தீர்த்தத் திருவிழாவாகவும்
மலம்கழித்தால்...சந்தனக் காப்பாகவும்
மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும் தாயகம்
பகைவன் பன்னீர் தெளித்தாலும்
ஏற்றுக் கொள்வதில்லை.
ஏன் தெரியுமா?
எங்களை தன்மடிதவழும் மழலைகளாகக்
கருதுகின்றது.
எதிரி கட்டியணைத்தாலும் காறித்துப்புகின்றது.
ஏன் தெரியுமா?
ஆக்கிரமிப்பாளர்களை எந்த மண்ணும்
அங்கீகரிப்பதில்லை...
எங்கள் தாய்நிலத்தில்
மஞ்சள் நிறமாகப் பூத்துக் கிடக்கும்
ஆவரசம் பூவிற்கூட ஒரு இழகிருக்கிறது
கத்தரிப்பூ வர்ணத்தில்
நாகதாளி பளுத்திருக்கும் போது எத்தனை எழில்
அருவி வெட்டிய வயல்களில்...
முள்ளி பூத்திருக்கும்
அது கூட நெஞ்சத்தைக் கிள்ளி எடுக்கும்.
கள்ளிச் செடிகளுக்கு அழகில்லையா?
ஏனில்லை,
எங்கள் மண்ணில் எதுதான் அழகில்லை.
இத்தனை வடிவையும் எப்படி இழப்பது?
எதிரியிடம் கொடுத்துவிட்டு எப்படிக் கிடப்பது?

பெற்றதாயை மற்றொருவன் எட்டி
உதைக்கும்போது
சுமந்துபெற்ற பிள்ளை சும்மா இருப்பானாகில்
அவன் பிள்ளையல்ல... பிறவிக்குருடன்.
கட்டிய மனைவிக்கு இன்னொருவன்
கைநீட்டும்போது
புருஷன் பார்த்துக்கொண்டு பேசாமல்
இருப்பானாகில்
அவன் புருஷனல்ல... கோழை.
தாய்நிலத்தை பகைவன் தணலிலிடும்போது
பாய்சுருட்டி வைக்காதவன் மனிதனல்ல...
வந்த எதிரியை வாசலில் வரவேற்று
சந்தனம் கொடுப்பவன் தமிழனல்ல.
காலத்தின்குரல் காதுகளில் கேட்கும்போது
நாளரம்புகள் துடிக்க வேண்டும்.
உலகமெங்கும் நிலவு ஒன்றுதான்
“அரியாலைக்கு” மேலேறிவரும் நிலவுதான்
ஆபிரிக்க் கண்டத்திலும் தெரிகிறது.
“கதிரவெளியில்” பாற்குடம் சரிக்கும் நிலவுதான்
கனடாவிலும் காலித்து வருகிறது.
ஆனாலும்... அரியாலையில் பார்க்கும் நிலவும்
கதிரவெளியில் தரிசிக்கும் அதே நலவும்தான்
எமக்கு அழகாகவும் குறிர்ச்சியாகவம் இருக்கிறது.
ஏன் தெரியுமா?
இது எங்கள் சொந்த மண்ணில் ஏறிவரும்
நிலவு...

இந்த உணர்போடுதானே
எங்கள் “பிள்ளைகள்” உயிர்கொடுக்கின்றனர்.
“புலிகள்” “பூநகரி”க்குள் புகுந்தபோது
அவர்களின் அடிமனதில் ஆர்ப்பரித்த
உணர்வு என்ன?
இது எம் தாய் நிலம்.
இது எம் அன்னை மடி,
இது எம்மைப் பெற்ற மண்.
இதில் எதிரி எப்படி ஏறி இருக்கமுடியும்?
என்ற கேள்வியே அவர்கள் மூட்டிய வேள்வி.
“பூநகரி”
தமிழ்க்குறுநில மன்னர்களின் தலைநகரம்.
தன்னளவிலாவது தனியரசாக இருந்தபூமி.
சின்னவிரலாயினும்
வைரமோதிரம் அணிந்தவிரல்.
“நாகதேவன்துறை”
தமிழரின் சின்னப்படகுத்துறை
பெரிய கப்பல்கள் வந்துபோகவில்லைத்தான்
என்றாலும்
அச்சமில்லாது தானியமாவது ஏற்றிய துறை.
“இந்த இடங்களை எப்படி எதிரியிடம் விடுவது?”
என்படிதான் புலிகள் ஏறிப் பாய்ந்தார்கள்.
இந்த உணர்வு... நெஞ்செல்லாம் பூத்து
எல்லோருக்கும் என்று வருமோ
அன்று தமிழீழம்!

உலைக்களம், விசாகன் ... எரிமலை — தை 1994

# சத்தமின்றி அபகரிப்பு செய்யப்படும் தமிழர் பூர்வீகம்

நடேசன் குகதர்சன்

டிசம்பர் 16, 2021

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் பிரிவுக்கும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவுக்கும் இடப்பரப்பு கோரி அண்மையில் பாராளுமன்றத்தில் பெரும் வாக்குவாதங்கள் முஸ்லிம் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. சட்ட அங்கீகார வர்த்தமானி பிரசுரம் மூலம் பிரகடனப்படுத்தப்படாத ஒரு பிரதேச செயலகமாகவுள்ள இந்த கோறளைப்பற்று மத்தி பிரிவிற்கு அடிப்படை நியாயமே அற்ற நிலையில் கோசமிட்டது உண்மையில் நகைப்பாகவுள்ளது என செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்தர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.



கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பரப்பு 80 சதுர கிலோ மீற்றர் என்றும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலக பிரிவின் பரப்பு 16 சதுர கிலோமீற்றர் என்றும் தமக்கான தனித்தனி முஸ்லிம் பிரதேச செயலக பிரிவுகளை கோறளைப்பற்று வாழைச்சேனை மற்றும் கோறளைப்பற்று தெற்கு கிரான் பகுதிகளிலிருந்து பிரித்தெடுத்து மிக மிக சிறிய பரப்பு தமக்கு போதுமானதென அவ்வேளையில் விளம்பரம் செய்து தமிழர் பகுதிகளிலிருந்து முற்றிலும் வேறுபடுத்தி கபடத்தனமாக பிரித்து பெற்றுக்கொண்டு இன்று அதனை மேலும் மேலும் விசாலமாக்கும் முனைப்பில் நிற்கின்றனர்.

1999/2000களில் உள்நாட்டு போராட்டம் உச்சம் பெற்றிருந்த காலப்பகுதிகளில் அரசின் செல்வாக்கினை தம்பக்கம் வைத்துக் கொண்டு சத்தமின்றி மிகமிக அவசரமாகவும் தந்திரமாகவும் ஏறாவூர் நகர் பிரதேச செயலக பிரிவுக்கு ஏறாவூர்பற்று செங்கலடி தமிழ் கிராமங்களையும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவுக்கு கோறளைப்பற்று வடக்கு வாகரைக்கு சொந்தமான தமிழர் பூர்வீக காணிப்பகுதிகளையும் இணைப்பதற்கான திட்டத்தை தீட்டியுள்ளனர்.2011/12 காலப்பகுதிகளில் சகல தமிழர் தரப்பு போராட்டங்களையும் அடக்கி ஒடுக்கி புறந்தள்ளப்பட்ட காலப்பகுதிகளில் தமது தந்திரமான இரண்டாவது நாடகத்தை அரங்கேற்றுவதற்காக அன்றைய அரசின் உதவியுடன் முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் அமிர் அலி உள்ளடங்கிய ஒரு ஆணைக் குழுவை உருவாக்கி நிர்க்கதியாக இருந்த தமிழர் தரப்பு அரச அதிகாரிகளை கொழும்புக்கு அழைத்து ஆணைக் குழு எனும் பெயரில் அமிர் அலி சமர்பித்த மேற்குறிப்பிட்ட தமிழர் கிராமங்களின் இணைப்பு தொடர்பான தீர்மானத்தை உடன் செயற்படுத்த வேண்டும் என திணிக்கப் பட்டபோதும் அன்றைய அரச அதிகாரிகளால் முற்றிலும் மறுக்கப்பட்டது. ஆனாலும் தமது அரசியல் பலத்தை பிரயோதித்து ஒருபக்க தீர்மானமாக நிறைவேற்றியதாக கூறப்படும் விடயத்தையே அண்மையில் நடந்த பாராளுமன்ற உரையில் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் போல் நாடகமாடி அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்று பாராளுமன்றத்தில் ஆர்ப்பரித்து கொண்டிருக்கின்றனர்.

பூர்வீகமான தமிழர் பகுதிகள் மிக நீண்டகால கபடமான திட்டங்களின் மூலம் பறித்து கொள்ள முஸ்லிம் தரப்பு முயற்சிக்கும் வேளையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டுமே பாராளுமன்றில் இதற்கெதிராக குரல் கொடுத்துள்ளார். இது தொடர்பாக உள்ள அனைத்து நியாயங்களையும் முன்னிலைபடுத்த ஏனைய தமிழர் பாராளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுக்க வேண்டுமென்பது தமிழ் மக்களின் கட்டளையாகின்றது..

இதில் கவனிக்கபட்ட வேண்டியதென்னவென்றால் போர்க்கால சூழலில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் அல்லது போர் நிலவும் பகுதிகளுக்குள் பயணிக்க இயலாத நிலையில் மக்களின் நன்மை கருதி மக்கள் சேவைக்கான நிர்வாக கடமைகளை தற்காலிகமாக மட்டும் ஜெயந்தியாய ரிதிதென்ன போன்ற கிராமங்கள் கோறளைப்பற்று மத்திக்கு நிலத்தொடர்பற்ற வகையில் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்தமையை சாதகமாக பயன்படுத்தி கொண்டு இன்று அதனை தமது நிருவாக கட்டமைப்புக்குள் நிரந்தரமாக கொண்டு வருவதற்கான சூழ்ச்சிகளை செய்து அதனையும் அதனோடிணைந்த கிராமங்களான புணானை கிழக்கு, மாங்கேணி தெற்கு, காரமுனை, வட்டவான், பாலமன்கேணி, ஆலங்குளம்,குகநேசபுரம், ஓமடியாமடு போன்ற தமிழர் பூர்வீக நிலங்களையும் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலக பிரிவின் கீழான மாவடிச்சேனை செம்மண்ணோடை போன்ற தமிழர் கிராமங்களையும் தம்மோடு இணைத்து கொள்ள பகீரத பிரயத்தனங்களை செய்து வருகின்றனர்.

ஆனாலும் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச சபை மற்றும் வாகரை சுகாதார வைத்தியர் பிரிவும் ஜெயந்தியாய ரிதிதென்ன போன்ற கிராமங்கள் உள்ளடங்களாக அனைத்து வாகரை கிராமங்களுக்கும் சேவைகளை இன்றுவரை வழங்கி வருகின்றனர்.

அது மட்டுமல்லாது ஏறாவூர் பிரதேச செயலக பிரிவில் தற்காலிக நிர்வாகத்திற்காக இணைக்கப்பட்ட கிராமங்களுக்கான சுகாதார சேவைகளையும் செங்கலடி சுகாதார பிரிவினரே மேற்கொள்கின்றனர்.

மேலும் வாகரை காரமுனை கிராமமானது வர்த்தமானி மூலம் அடர்ந்த வனப்பகுதியாக பிரகடனப் படுத்தப் பட்டிருந்தும் இன்று பாதிக்கும் மேலாக காடுகள் முற்று முழுதாக அழிக்கப்பட்டு அடாத்தாக முஸ்லிங்களால் அபகரிக்கப்பட்டு எந்தவிதமான ஆவணங்களும் இல்லாத நிலையில் அரச அதிகாரிகளை அச்சுறுத்துவது மட்டுமன்றி அது தனி முஸ்லிம் கிராமம் என்று அறிவிக்கும்அளவிற்கு இன்று தமிழர் பூர்வீகங்கள் அழிக்கப்பட்டு மட்டக்களப்பின் நிலை மிக மோசமடைந்து வருகின்றது.

இத்தகைய மோசமான நிலைக்கு சில அரச அதிகாரிகளும் காரணமாகியுள்ளனர். தாம் தமிழர்களாக இருந்தும் தமிழர் பக்கம் நியாயம் இருந்தும் அவற்றை கருத்திற் கொள்ளாது பணத்திற்கு அடிமையாகி தமிழர் நிலங்களை மாற்றானுக்கு தாரை வார்த்தார்கள் இதற்கு சிறந்த உதாரணமாக வாகரை பிரதேச செயலகத்தில் முன்னால் பிரதேச செயலாளராக இருந்த சுப்பிரமணியம் கரன் மற்றும் செங்கலடி பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம் அவர்கள் மற்றும் வாகரை பிரதேச செயலகமுன்னாள் காணி வெளிக்கள போதனாசிரியர் வேலாயுதம் வேந்தன் அவர்களை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட முடியும் இத்தகைய ஊழல் பெருச்சாளிகளின் மோசடிகள் அம்பலமானதால் பிரதேச செயலக பிரிவிலிருந்தம் பொறுப்புக்களிலிருந்தும் வெளியேற்றப்பட்ட கரன் (முன்னாள் வாகரை பிரதேச செயலாளர்) மற்றும் செங்கலடி பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம் விசாரணைக்காக கொழும்புக்கும் வேலாயுதம் வேந்தன் ( காணி வெளிக்கள போதனாசிரியர்) ஏறாவூர் நகர பிரதேச செயலக பிரிவுக்கும் சபைக்கும் அழைக்கப்பட்டமையை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

மேலும் அண்மையில் புணானை பிரதேசத்தில் மீள் குடியேற வந்த பெரும்பான்மை சிங்கள மக்களுக்கெதிராக தமிழ் அரசியல் வாதிகளையும் தமிழ் மக்களையும் தூண்டிவிட்டதுமல்லாமல் சிங்களவர்களுக்கெதிராக தமிழ் மக்கள் உள்ளார்கள் எனும் விம்பத்தை உருவாக்கி தமது காணி அத்துமீறல்களை மூடி மறைத்து அதனை தமக்கு சாதகமாக மாற்றி அதில் பெரும் வெற்றியும் கண்டுள்ளார்கள். இன்னும் நாவலடி பொலநறுவை கொழும்பு வீதிகளை அண்டி முஸ்லிம் தரப்பால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பெரும்பாலான அரச காணிகள் வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி முஸ்லிம் செல்வந்த வியாபாரிகளின் கட்டுப்பாட்டில் காணப்படுவதுடன் (ஆனால் வெளியில் கூறுவது, காணி இல்லாதவர்களுக்காக தான் ஆக்கிரமிப்பு செய்யப்படுகின்றது என்று) இதனை வைத்துக்கொண்டு தமது பண பலத்தால் சட்டத்தையும் நீதியையும் மதிக்காது மோசடியாக ஆவணங்களை தயார் செய்து தமது பூர்வீக நிலம் என பாடங்கற்பிக்கின்றனர். அத்துடன் நாளாந்தம் அத்துமீறப்படும் அரசகாணிகளுக்கு எவ்வித ஆவணமுமின்றி தமது சொந்த நிலம் என வாதிடுவது மட்டுமல்லாது அவை அனைத்தையும் இன்று தமது நிருவாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கான முஸ்லிம் தரப்பின் சூழ்ச்சியென்பது தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரிப்பதன் உச்சம் என்பதை தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவினை தரமுயர்த்தினால் தமிழ் முஸ்லிம்உறவு பாதிக்கப்படும் என்று தம்பட்டம் அடிக்கும் அதே ஹரீஸ் பாராளுமன்ற உறுப்பினர் கோறளைப்பற்று வடக்கு வாகரை மற்றும் கோறளைப்பற்று வாழைச்சேனை தமிழர்களின் காணிகளை அபகரித்து கோறளைப்பற்று மத்தியுடனும் செங்கலடியிலிருந்து பிரிக்க எத்தணிக்கும் தமிழ் கிராமங்களை ஏறாவூர் நகர பிரதேச செயலக பிரிவுடனும் இணைக்க முயலும் செயற்பாடானது தமிழ் முஸ்லிம் உறவை வளர்க்கும் என்பது நகைச்சுவையாக உள்ளது.

அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் தமக்குள்குறுகிய அரசியல் இலாபங்களை தேட முயற்சிக்காது இந்த விடயத்தில் கூடிய கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டியது யாதெனில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத 80 ச. கீ. பரப்பளவுடைய கோறளைப்பற்று மத்தியையும் 16 ச.கி பரப்பளவுடைய கோறளைப்பற்று மேற்கையும் ஒரே பிரதேச செயலகமாக இணைத்து பிரகடனப்படுத்தி தீர்வினை பெற்று கொள்வதுடன் ஏற்கனவே வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட எல்லைகளின் படி கோறளைப்பற்று வாழைச்சேனை கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக பிரிவுகளின் அனைத்து கிராமங்களையும் அந்தந்த நிருவாக கட்டமைப்புக்குள் நிருவகிக்கவும் கூடியதான தீர்க்கமான முடிவினை இவ்வரசின் காலத்தில் எடுப்பதுடன் நிகழ்கால மற்றும் எதிர்கால தமிழ் சந்ததிகளுக்கு நிலங்களை வரையறுத்து பாதுகாத்து கொடுக்கும் தார்மீக பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த சந்தர்பத்தில் மக்களால் வழங்கப்பட்ட ஆணைகளை புறந்தள்ளி வாய்மூடி மௌனிகளாக இருக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடு தற்கால தமிழ் மக்களுக்கும் எதிர்கால தமிழ் சந்ததிகளுக்கும் செய்யப்படும் வரலாற்று துரோகம் என்பதை உணர்ந்து எதிர்வரும் மாகாணசபை தேர்தலிலும் தொடர்ந்து வரும் ஏனைய தேர்தல்களிலும் தகுந்த பாடத்தை நிச்சயம் புகட்ட வேண்டும் என்பதே நியாயமான எதிர்பார்ப்பாகும் என்றார்.



Source: British Ceylon Map of Captain G.Schneider (1822)




# அலையாத்திக் காடுகள் அல்லது கண்டல் தாவரங்கள்



**சதுப்பு நிலக்காடுகள் எனும் அலையாத்திக் காடுகள்.**

கடல் நீர் நிலத்துடன் இணையும் இடங்களில் குறைந்த அளவு நீர் நிரம்பிய சேற்றுப்பாங்கான மண் பரப்பு கடல் நீரை உள்ளே வராமல் திருப்பி அனுப்பும், இதற்கு உதவி செய்யும் வண்ணம், அங்கு வளர்ந்திருக்கும் மரம், செடி கொடிகள் மற்றும் அவற்றின் வேர்கள், கடல் நீரை உள்ளே வரவிடாமல் தடுக்கும், இதுபோன்ற நில அமைப்பே, மாங்குரோவ் காடுகள் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றன.

**மாங்குரோவ் காடுகள்**

கடல் அலைகள் உள்ளே வராமலும், கடல் நீர் கரையில் உள்ள நிலத்தின் மண்ணை அரித்து, நிலத்தினுள் புகுந்து ஆக்கிரமித்து விடாமல், நிலத்தைக் காப்பதில், மண் அரிப்பைத் தடுப்பதில், முக்கிய பங்கு வகிப்பது, அலையாத்திக்காடுகளில் உள்ள மரங்களே. இவையே, தாங்கள் வளரும் நிலப்பரப்பைக் கடல்கொள்ளாமல், இன்றுவரை காத்து வருகின்றன.

சில அடி ஆழமே கொண்ட இந்த காடுகளில் உள்ள நீர் மட்டம், கடல்நீர் மற்றும் பேக் வாட்டர் எனும் ஆற்றின் கழிமுகப்பகுதியில் கடல் நீருடன் சேரும் ஆற்று நீர் கலந்து இணையும் இடமாகத் திகழ்கிறது.



**அலையாத்திக் காடுகளின் தன்மை:**

கடல் நீரிலே வளர்வது போலத் தோன்றினாலும், காடுகளில் உள்ள நீரில் வளரும் மரங்கள் நன்னீர் எனும் நல்ல நீரில் மட்டுமே வளரும் தன்மை கொண்டவை. இவற்றின் அடிப்பரப்பு நிலத்தில் இருந்தாலும், வேர்ப் பகுதிகள் படர்ந்து விரிந்து மண்ணின் மேலே காணப்படும். பலவகையான மரங்கள், குறைந்த வளம் கொண்ட இந்த மண்ணில் நன்கு வளர்கின்றன.

உலகின் பல இடங்களில் இதுபோன்ற காடுகள் காணப்பட்டாலும், தமிழ்நாட்டில், உலகிலேயே இரண்டாவது பெரிய அலையாத்திக்காடுகளாக, சிதம்பரம் நகரை அடுத்த பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள் திகழ்கின்றன.

அலையாத்திக்காடுகள் கடல் அலைகளில் இருந்து, கடல் அரிப்பில் இருந்து மட்டும் நிலத்தைக் காக்கவில்லை, கடல் கோள் எனும் பனை மர உயரத்திற்கு மேல் எழும்பும் பேரலைகளின் சீற்றத்தில், கடலோர கிராமங்கள் அழிந்துவிடாமல், எத்தனை வேகத்தில் அந்தப் பேரலைகள் வந்தாலும் சமாளித்து, அவற்றின் வேகத்தைக் குறைத்து, பாதிப்பைப் போக்குவதில், சிறந்த எல்லைக் காவலனாகத் திகழ்கின்றன.

மேலும், இந்தக் காடுகளில் உள்ள மரங்கள் மணிக்கு நூற்றைம்பது கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசினாலும், எந்த பாதிப்பும் அடையாமல் அவற்றை எதிர்த்து நிற்கும் ஆற்றல் மிக்கவை.

**அலையாத்திக் காடுகளில் உள்ள மரங்கள்:**

இந்தக் காடுகளில் நூற்றுக்கணக்கான வகைகளில் மரங்கள் இருந்தாலும், சில மரங்கள் நெடுநாட்கள் வளர்ந்து பயன்தரும் இயல்புடையவை. அதில் சில தில்லை மரம் மற்றும் சுரபுன்னை மரங்கள் இவை உட்பட அநேக மரங்கள், இந்த நீர்நிலைகளில் வாழும் தன்மை உடையவை.



**உலக முழுவதும் உள்ள அலையாத்திக்காடுகள்**

உலகம் முழுவதும் 112 நாடுகளில் அலையாத்தி காடுகள் உள்ளன. அவற்றில் 30 நாடுகளில் மட்டும் 2 லட்சம் சதுர கிலோமீட்டர் அளவு அலையாத்தி காடுகள் அரணாக உள்ளது.

ஒரு மதில் சுவர் எழுப்பினால், வெளியிலிருந்து ஒருவரை உள்ளே விடாமல் தடுக்கலாம், அல்லது நுழைபவரைச் சற்று தாமதப்படுத்தலாம், தாமதப்படுத்துவதால் அவரை தளர்வடையவும், செய்யலாம். இந்த வேலையைத்தான் அலையாத்தி காடுகள் நமக்குச் செய்கின்றன. இவை இயற்கையான அரண்.

அலையாத்தி காடுகளால் கடலிலிருந்து எழும் அலை, புயல் மற்றும் சுனாமி போன்றவற்றை 70 முதல் 90 சதவீதம் கட்டுப்படுத்த முடியும்.

**தமிழ்நாட்டில் அலையாத்தி காடுகளும்**

இந்தியாவைப் பொறுத்தவரையில், மேற்கு கடற்கரையை விடக் கிழக்கு கடற்கரையில்தான் அதிக அளவில் அலையாத்தி காடுகள் நிறைந்துள்ளன.

தமிழ்நாட்டில் பிச்சாவரம் அலையாத்தி காடுகள் பற்றி நாம் அனைவரும் அறிந்திருப்போம். தமிழ்நாட்டில் மட்டும் அலையாத்தி காடுகள் 44.83 சதுர கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ளது. முத்துப்பேட்டை, இராமநாதபுரம், பிச்சாவரம், தஞ்சை மாவட்டம் முத்துவராம், தூத்துக்குடி, பழவேற்காடு ஆகிய பகுதிகளில் சதுப்புநில காடுகள் உள்ளன.

**ஈழநாட்டில் அலையாத்தி காடுகளும்**




உலகின் 40 சதவீத அலையாத்தி காடுகள், ஆசியாவில் தான் உள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் பாதிக்கும் மேற்பட்ட சதுப்புநில காடுகள் அழிவைச் சந்தித்துள்ளது.

இலங்கையில் பாதிக்கு மேற்பட்ட சதுப்புநில காடுகள் அழிந்துவிட்டது.

**சுனாமியிலிருந்து மக்களைக் காத்த மாங்குரோவ் காடுகள்.**

கடலில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளால், தோன்றிய கடல்கோள் எனும் பேரலைகள், காவிரிப்பூம் பட்டினம் எனும் கடல் வணிக மாநகரை, அடியோடு அழித்துவிட்டதாக, வரலாற்றில் படித்திருப்போம். அதை நினைவுபடுத்தும் விதமாக, கடந்த 2004ஆம் ஆண்டு ஆசியக்கடல் பகுதியை துவம்சம் செய்த, சுனாமியை நாம் கண்டு அவற்றின் கோரத்தை, உணர்ந்திருப்போம்.

அந்த தேசியப் பேரிடரில், இந்து சமுத்திர நாடுகளில் உள்ளிட்ட பல கடற்கரையோர மக்களின் வாழ்வாதாரம், குடும்ப உறவுகள் அந்தப் பேரலை களில் பறிபோன துயரங்களை நாம் கண்டு மனம் வருந்தியிருப்போம்.






ஆயினும், இந்தப் பேரலைகள் மாங்குரோவ் காடுகள் உள்ள இடங்களில் தன் கோர முகத்தைக் காட்ட முடியாமல், ஒடியதை நம்மில் பலர் அறிந்திருக்க மாட்டோம்.

சிறிய பாதிப்பு கூட, அந்தக் கடல்கோள் எனும் பேரலைகளால் ஏற்படவில்லை, என்ன காரணம்?

**அலையாத்திக்காடுகள்**

பிச்சாவரம் பகுதிகளில் கடல் நீர் கலக்கும் இடங்களில் பல ஏக்கர் பரப்பளவில் காணப்படும் அரிய தில்லை மரம் எனும் ஆச்சா மரங்கள், சுரபுன்னை உள்ளிட்ட பல வகையான மரங்கள், கொடிய பேரலையாக நூறு கிலோமீட்டர் வேகத்தில் காற்றுடன் வந்த அந்த சுனாமியை, உள்நுழைய விடாமல் தடுத்ததன் காரணம், அவற்றின் உறுதியான தன்மை மற்றும், அந்த நீர்ப்பரப்பில், அவை பரவியிருந்த விதம், யாவும் சேர்ந்து, பேரலைகளின் பாதிப்பை ஏற்படவிடாமல் தடுத்தன.

இதன்பின்னரே, அரசாங்கமும் அலையாத்திக் காடு களின் அத்தியாவசியத்தை உணர்ந்து, அவற்றை, சுனாமி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள இடங்களில் வளர்க்க ஆரம்பித்தது. தற்காலம், சென்னை நகரில் இருந்து ஆரம்பித்து, தமிழகக் கடற்கரையோரம் அலையாத்திக் காடுகளை பரவலாக வளர்த்து வரு கிறார்கள்.

பிச்சாவரம் போல சென்னை மாநகரிலும் அலை யாத்திக் காடுகள் இருந்து, அவை நாற்பது ஆண்டு களுக்கு முன்னரே அழிந்துவிட்டன என்ற தகவலை உறுதிப்படுத்தும் வண்ணம், சென்னை பள்ளிக் கரணை சதுப்புநிலக்காடுகள் அமைந்துள்ளன. அந்த நீர்நிலைகளில் கடல் நாரைகள் உள்ளிட்ட அரிய பறவையினங்கள் கூட்டம் கூட்டமாக அங்கு இளைப் பாறும் உற்சாகம் தரும் காட்சிகளை, இன்றும் நாம் காண முடியும்.

**அலையாத்திக் காடுகளின் பயன்கள்**

இந்தக் காடுகளில் உள்ள மரங்கள் தங்கள் வேர்கள் மற்றும் தண்டுகளில் உள்ள சிறிய துளைகள் மூலம் காற்றை உறிஞ்சி, காற்றில் உள்ள கார்பனை எடுத்துக் கொண்டு, ஆக்சிஜனை அதிகம் வெளி விடுகின்றன. இதன் மூலம், மக்களுக்கு தடையில்லாமல் பிராண வாயு கிடைத்து, வியாதிகள் அணுகாமல் உடல் ஆரோக்கியம் பெறுகிறார்கள்.

மாங்குரோவ் காடுகளில் இருக்கும் நீர்வளமும், பசுமை அமைப்பும் இந்தப் பகுதிகளில், சில வகை மீன்கள் தங்கள் இனப்பெருக்கத்தை அதிகரிக்கக் காரண மாகின்றன. மேலும் கடல் வாழ் உயிரினங்கள் பல இந்த நிலப்பரப்பை ஒட்டி வாழ்வதால் கடல் வளம் காக்கப்படுகிறது.

கிட்டத்தட்ட மூன்றாயிரம் ஏக்கர் நிலப்பகுதியில் சிறிய தீவுகள் போன்ற மனற்த்திட்டுகளைக் கொண்டு விளங்கும் பிச்சாவரம் காடுகளில் வருடந்தோறும் இருநூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பறவைகள் கூட்டமாக வருவதைக் காண, சுற்றுலாப் பயணிகள் அதிகம் கூடுவர்.

**நன்மைகள் :**

மாங்குரோவ் காடுகள் மனிதர்களுக்கும், மற்றும் அங்குள்ள உயிரினங்களுக்கும் அநேக நன்மைகள் செய்கின்றன.

அலையாத்திக்காடுகளில் வளரும் மரங்கள் பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டவையாகும், அதில் காணப்படும் தில்லை மரங்கள், ஒரு காலத்தில் சிதம்பரம் நகரில் பரவலாக இருந்தவை, நடராஜர் திருக்கோவில் தல மரமாக விளங்குபவை. அவை காலவெள்ளத்தில், பிச்சாவரம் காடுகளில் தற்காலம் அதிக அளவில் காணப்படுகின்றன.

சிதம்பரம் நகருக்கு அருகில் கொள்ளிடக்கரையில் காணப்பட்ட ஆச்சாள் மரங்களும், தில்லை மரமும் வெவ்வேறு பெயர்கள் கொண்ட ஒரே மரமாக விளங் குகிறது.

**மருத்துவப் பலன்கள்**

ஆச்சாள் மரங்கள் எனும் தில்லை மரங்கள் மற்றும் சுர புன்னை மரங்களின் இலைகள் மற்றும் அவற்றின் வேர் கள் இந்த நீர்நிலைகளில் பரவி இருப்பதால், இதை ஒட்டிய பகுதிகளில் வாழும் மீனவ மக்களுக்கு, எந்த உடல் நல பாதிப்பும் ஏற்படுவதில்லை என்றும் வியாதிகள் அணு காமல் அவர்களின் உடலை இந்த மரங்களின் ஆற்றல் கொண்ட காற்று, பாதுகாக்கிறது என்று கூறுகின்றனர்.

**சரும வியாதிகள் அகல**

தில்லை மரத்தின் இலைகள் சரும வியாதிகளின் பாதிப்பைக் களைவதிலும், சுரபுன்னை மரத்தின் இலை கள் கொடிய வியாதிகள் அணுகாமல் காப்பதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. தில்லை மரம், நடராஜர் திருக் கோவில் தல மரம் மட்டுமல்ல, மக்களை இயற்கைப் பேரிடர்களில் இருந்து காக்கும், எல்லைக் காவல் மரமும் கூடவே!





# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஒய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

“இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்.“



**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai — 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai — 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai — 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai — 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai — 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai — 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai — 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai — 01 94 71 354 5782

**Swami Vipulanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai — 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla — 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla — 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa — 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa — 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa — 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa — 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa — 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa — 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa — 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa — 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa — 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa — 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa — 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa — 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa — 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa — 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa — 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa — 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa — 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa — 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa — 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa — 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa — 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa — 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# இந்தியாவின் தலையீட்டால் பின்வாங்கிய சீன நிறுவனம்! – பின்னணி என்ன?

16.12.2021



இலங்கையைவிட்டு சீன நிறுவனம் வெளியேறியிருப்பதன் பின்னணியில், இந்தியாவின் தலையீடு இருப்பதாக அதிரடித் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

இலங்கையிலிருக்கும் மூன்று முக்கியத் தீவுகளில் காற்றாலை மற்றும் சூரியஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்ட ஒப்பந்தத்தை முற்றிலுமாகக் கைவிட்டுவிட்டு, மாலத்தீவை நோக்கிச் சென்றிருக்கிறது, சீனாவின் சினோசர் - இடெக்வின் (Sinosar-Etechwin) நிறுவனம். இலங்கையைவிட்டு சீன நிறுவனம் வெளியேறியிருப்பதன் பின்னணியில், இந்தியாவின் தலையீடு இருப்பதாக அதிரடித் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. மேலும், சீன நிறுவனத்தைவிட்டு கைநழுவிய அந்தத் திட்டம், இந்தியாவின் முன்னணித் தொழிலதிபரான அதானியின் நிறுவனத்துக்குக் கைமாறுவதாகவும் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

**இலங்கை–சீன நிறுவனம் ஒப்பந்தம்:**

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் இருக்கும், யாழ்ப்பாணத்துக்குட்பட்ட மூன்று முக்கியத் தீவுகள் நெடுந்தீவு, அனலைத் தீவு, நயினாத் தீவு. டீசல் மூலம் மட்டுமே மின்சாரம் கிடைத்துக்கொண்டிக்கும் இந்தத் தீவுகளில், காற்றாலை மற்றும் சோலார் மூலமாக மின்சாரம் தயாரிப்பதற்கான உலகளாவிய ஏலத்தை இலங்கை அரசாங்கம் அறிவித்தது. இந்திய நிறுவனங்கள் உட்பட, பல நாடுகளின் நிறுவனங்கள் இந்தத் திட்டத்தைக் கைப்பற்ற போட்டியிட்டபோது, சீனாவைச் சேர்ந்த சினோசர் - இடெக்வின் நிறுவனம், சுமார் 12 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பீட்டில் திட்டத்தைக் கைப்பற்றியது. கடந்த ஜனவரி (2021) மாதம், அதிகாரபூர்வமாக இலங்கை அரசாங்கத்திடம் சீனா ஒப்பந்தம் போட்டுக்கொண்டது.

ஒப்பந்தம் கையெழுத்தானபோதே இந்தியா அதற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தது. காரணம், அந்தத் தீவுகளிலிருந்து இந்தியாவுக்கான தூரம் வெறும் 49 கி.மீட்டர் தொலைவிலும், கச்சத்தீவிலிருந்து வெறும் 29 கி.மீட்டர் தொலைவிலும் இருந்தது. எனவே, இந்திய எல்லைக்கு மிக அருகில், சீன நிறுவனம் ஒரு பெரிய மின்சாரத் திட்டத்தை செயல்படுத்தவிருப்பது, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என தமிழகத்தைச் சேர்ந்த தலைவர்களும் பகிரங்கமாக எச்சரிக்கை செய்தனர். அதேபோல, இலங்கையின் வடக்கு மாகாண தமிழ்த் தலைவர்களும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர்.

**சோலார்**



**எந்த வகையில் இந்தியாவுக்கு ஆபத்து?**

குறிப்பாக, பா.ம.க நிறுவனர் ராமதாஸ், "சீன நிறுவனம் நெடுந்தீவில் மின்திட்டங்களை செயல்படுத்தும் போர்வையில் இந்தியாவை 24 மணி நேரமும் கண்காணிக்க முடியும். ஆயுதங்களையும், ராணுவத் தளவாடங்களையும் கொண்டுவந்து சேமித்து வைத்துக்கொண்டால், இரு நாடுகளுக்கு இடையே போர் ஏற்பட்டால் உடனடியாக இந்தியாவைத் தாக்கி நிலைகுலைய வைக்க முடியும். இது சாதாரணமான ஆபத்து அல்ல. இந்த ஆபத்தின் தீவிரத்தை இந்தியா உடனடியாக உணர்ந்து, அதை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், இந்தியா, குறிப்பாக தமிழ்நாடு எந்த நேரமும் ஆபத்தின் விளிம்பில்தான் இருக்க வேண்டும்" என அறிக்கையின் மூலம் எச்சரித்தார்.



**மருத்துவர் ராமதாஸ்**

மேலும், "வடக்கில் லடாக் தொடங்கி வடகிழக்கில் சிக் கிம் மாநிலம் வரை இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்றுவரும் சீனா, இலங்கைத் தீவுகள் வழியாக தமிழகத்திலும் தொல்லை கொடுக்கத் தொடங்கும். அந்தத் தீவுகளை இந்தியாவுக்கு எதிரான இராணுவத் தளமாக மாற்றிக்கொள்ளலாம். அத்தகைய நிலை ஏற்பட்டால், இந்தியா வளர்ச்சியில் கவனம் செலுத்த முடியாமல் சீனாவைச் சமாளிப்பதிலேயே முழு கவனத்தையும் செலுத்தவேண்டிய நிலை ஏற்படலாம். அப்படி ஒரு நிலை ஏற்படுவதை இந்தியா இப்போதே தடுக்க வேண்டும்" என தமிழகத் தலைவர்களும் இந்திய அரசாங்கத்தை வலியுறுத்தினர்.

இந்தச் சூழ்நிலையில், இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லே, கடந்த பிப்ரவரி மாதம் அப்போதைய இலங்கை மின்சக்தித்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவைச் சந்தித்து தீவிர ஆலோசனையில் ஈடுபட்டார். ஆலோசனை முடிவில், இந்தத் திட்டத்துக்குத் தேவைப்படும் முழுத் தொகையான 12 மில்லியன் அமெரிக்க டாலரையும், இந்திய அரசாங்கம் இலங்கைக்கு நன்கொடையாகத் தருவதாக அறிவித்தார்.




**இந்தியத் தூதர் கோபால் பாக்லே**

இந்தியாவின் ஆஃபரை ஏற்றுக்கொண்ட அமைச்சர் டலஸ் அழகப்பெரும, "என்னைச் சந்தித்த இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான முழுமையான நிதித்தொகை 12 மில்லியன் அமெரிக்க டாலரை இலங்கைக்கு நன்கொடையாக வழங்குவதாக உறுதி அளித்திருக்கிறார். இந்தப் பிராந்தியம் குறித்து அக்கறை செலுத்துகிற ஒரு மிகப்பெரிய நாடாக இந்தியா இருக்கிறது. அது மட்டுமல்லாமல் இந்தியா இலங்கையின் மூத்த அண்ணனைப் போன்றது. எனவே, இந்தியாவின் இந்த யோசனையை, ஆலொசனையை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம்" என அறிவித்தார்.




இதனால், சீன நிறுவனத்துக்கும், இலங்கை அரசுக்கும் இடையேயான ஒப்பந்தத்தில் அப்போதே விரிசல் ஏற்பட் டது. இருப்பினும், எந்தவிதமான அதிகாரபூர்வ அறிவிப்பும் வெளியிடப்படாமல் இருந்தது.

**இடத்தை காலிசெய்த சீன நிறுவனம்:**

இந்த நிலையில், கடந்த டிசம்பர் 2-ம் தேதி சீனாவின் சினோசர் - இடெக்வின் நிறுவனம், இலங்கைத் தீவுகளில் மேற்கொள்ளவிருந்த மின்திட்டங்களை கைவிடுவதாக அதிகாரபூர்வமாக அறிவித்தது. மேலும், அந்த அறிவிப்புக்குக் காரணம், "மூன்றாவது தரப்பிலிருந்து (Third party) முன்வைக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்பிலான பிரச்னையே" என இலங்கையிலிருக்கும் சீனத் தூதரகம் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்தது. அதாவது, திட்டத்தைக் கைவிடுவதற்கு, "இந்திய அரசாங்கம"தான் காரணம் என்பதை சீனத் தூதரகம் மறைமுகமாக "மூன்றாவது தரப்பு" எனக் குறிப்பிட்டிருந்தது.

**சீனா**

அதைத் தொடர்ந்து, சீன நிறுவனம், சூரியஒளி மின்சாரத் திட்டத்தை இந்தியப் பெருங்கடலில் இருக்கும் மாலத் தீவுக்கு மாற்றியிருக்கிறது. அந்த நாட்டிலிருக்கும், சுமார் 12 தீவுகளில் சூரியஒளி மின்சாரத் திட்டத்தைச் செயல்படுத்தும் புதிய ஒப்பந்தத்தை மாலத்தீவிடம் ஏற்படுத்தியிருக்கிறது.

**மாலத்தீவு**

**அதானி வசம் செல்கிறதா இலங்கை மின்சாரத் திட்டம்?**

இந்த நிலையில், இலங்கையின் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, "வடக்கு மாகாணத்திலிருக்கும் மன்னார் முதல் பூநகரி வரையிலான பிரதேசங்களில், சுமார் 500 மெகாவாட் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்துக்கான விலை மனுகோரலை பெரும்பாலான நிறுவனங்கள் விண்ணப்பித்திருக்கின்றன. ஆனால், அந்த நிறுவனங்கள் அனைத்தையும் ரத்து செய்துவிட்டு, அதானி நிறுவனத்திடம் இந்தத் திட்டத்தை வழங்க முடிவு செய்திருக்கிறார்கள்" என கருத்து தெரிவித்திருக்கிறார்.

**அதானி**

இந்தியாவின் தலையீட்டால், இலங்கையில் சீன நிறுவனம் பின்வாங்கியிருப்பது, சீனாவின் முதற்கட்ட பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. இருப்பினும், இலங்கையின் பெரும்பாலான துறைகளில் சீனாவே கோலோச்சுகிறது. சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி, அவற்றையும் மெல்லத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் முயற்சியில், இந்திய அரசாங்கம் மிகத்தீவிரமாகச் செயல்பட்டுவருகிறது.

நன்றி: விகடன்

**25.12.2005** அன்று மட்டக்களப்பு தேவாலயத்தில் நடந்த நத்தார் நள்ளிரவு திருப்பலிப் பூசையின் போது தமிழ் இன துரோகிகளால் தேவாலயத்தினுள் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வெளிவிவகார குழுவின் முதன்மை உறுப்பினரும் வடக்கு கிழக்கு மனித உரிமை செயலகத்தின் முக்கிய செயற்பாட்டாளருமான மாமனிதர் ஜோசெப் பரராஜசிங்கம் ஐயா அவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும் . . .

தமிழர் தேசத்தில் சிங்கள பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட மனிதஉரிமை மீறல்களை உலகுக்கு எடுத்துரைத்து தமிழர் தேச விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த மாமனிதரை இந்நாளில் நினைவுகூருவோம். . .








25.12.2021









**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com


**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு**

**தொடர்புகளுக்கு**

**437.345.4203**







HAND CAR WASH



WE SPECIALIZE IN:
- Interior / Exterior
- Wash & Vacuum
- Interior Shampoo
- Leather Treatment
- Engine Shampoo
- High Speed Buff
- Waxing / Polishing
- Headlight Restoration
- Auto Tinting
- Ceramic Pro
- Insurance Approved



புதிய இடத்தில் புதிய பொலிவுடன்

**GRAND AUTOMOTIVE INC.**

www.grandautomotive.ca

ALL REPAIRS & MANINTENACE ALL KIND OF CARS

உங்கள் வாகனங்களின் சகலவிதமான
திருத்த வேலைகளையும் தரமான முறையில்
திருத்திக்கொள்ள நாங்கள்

Free Estimates, All Mechanical & Electrical Repairs
Muffler Work, Body Work & Painting
Friendly Services, Quality Workmanship & Guaranteed

We also install car Audio Systems,
Alarm Systems, Auto Glass & Seat Covers
If You are looking for a used Car, let us know
We can find you the best car in Town
Rust Proofing & Undercoating (Save you Body)

**GOOD NEWS**

Touch-up & Body Work on lease return cars

*All kind of Mechanical Work, Call Us*



Call: Louis
**Tel: 416.757.7891 Dir: 647.831.2709**
Email: itouchcarwash43@gmail.com
435A Midwest Road, Unit 5A, Scarborough ON M1P 3A6

HEADED LIGHT RESTORATION
We use only natural quality high-end products on all our vehicles



BEST QUALITY WORK FOR REASONABLE PRICES!
OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS

# இலங்கையில் தமிழர்களை அரவணைக்கிறது – பெய்ஜி ங் யாழ்ப்பாணத்தில் அதனை வெளிப்படுத்துகிறது

- இந்தியன் எக்ஸ்பிரஸ், 18.12.2021 -

இலங்கையில் தமிழர்களை அரவணைக்கிறது -பெய்ஜி ங் ஆண்கள், தங்கள் சட்டைகளைக் கழற்றி, பாரம்பரிய வெள்ளை வேஷ்டி அணிந்து, வெறும் மார்போடு பழங்கள் பூஜை பிரசாதங்கள் நிரப்பப்பட்ட தட்டுகளை எடுத்துக் கொண்டு கோவிலுக்குள் நுழைந்தனர். இலங்கையில் யாழ்ப்பாண நல்லூர் கந்தசுவாமி கோவிலில் உள்ளபாரம்பரியநடைமுறை அதுதான் என்பதால் இதில் அசாதாரணமானது ஒன்றும் இல்லை. ஆனால் வியாழக் கிழமை ஒரு பக்தர் போல் உடையணிந்து ஏனையவர்களை கோயிலுக்குள் அழைத்துச் சென்றவர் இலங்கைக்கான சீனத் தூதுவர் கிய் சென் ஹொங் ஆவார் .

சீனாவின் சூரிய சக்தி நிறுவனமொன்று மாலை தீவில் ஒரு புதிய வாடிக்கையாளரைக் கண்டுபிடித்ததாக ட்விட்டரில் அறிவித்த சில நாட்களுக்குப் பிறகு, “மூன்றாம் தரப்பொன்றின்” , பாதுகாப்புக் கவலைகள் காரணமாக யாழ்ப்பாண குடாநாட்டில் மூன்று தீவுகளில் அதன் திட்டத்தை இடைநிறுத்துவதற்கு வழிவகுத்திருந்த நிலையில் பாரம்பரியமாக இந்தியாவுடன் நெருக்கமாக இருந்து வரும் சிறுபான்மை இனத்தவரைகவரும் விதத்தில் சீனத் தூதர் கீ சென் கொங் தமிழ்மக்களை பெரும்பான்மையாக கொண்ட வடமாகாணத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார் புதன் மற்றும் வியாழன் அன்று யாழ் குடாநாட்டிற்கு அவர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தின் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான உரையாடல்களின்போது, இலங்கையில் சீனா-இந்தியா போட்டி பற்றிய கேள்விகளுக்கு கீ பதிலளித்துள்ளார் , இந்தியாவும் சீனாவும் எல்லைகளை எல்லையைப் பகிர்ந்து கொள்வதாகவும் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் உள்ள தூரத்தை விட இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் அதிகதூரம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

போட்டியிருப்பதை நிராகரித்த அவர், இரு நாடுகளும் தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகக் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்திற்கு அப்பால் உள்ள மூன்று தீவுகளில் சூரியவலு திட்டத்தை இரத்து செய்வதற்கு இலங்கை மீது “மூன்றாம் தரப்பினர்” அழுத்தம் கொடுப்பதாக பேசுவது “போலி செய்தி” என்றும் அவர் கூறியு ள்ளார்.

சீன இராஜதந்திரிஒருவர் வட மாகாணத்திற்குச் செல்வது இதுவே முதல் முறையல்ல வென்றாலும், இந்தியா தனது இராஜதந்திர மற்றும் அரசியல் செல்வாக்கை கொண்டிருக்கும் குடாநாட்டில் எந்த சீனத் தூதுவரும் ஒரு இரவு தங்கியிருந்து இவ்வளவு விரிவான முறையில் பகிரங்கமாக இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபடுவது இதுவே முதல் தடவையாகும். தமிழ் பிரிவினைவாத விடயத்தில் டெல்லி விலகியிருந்த போதிலும், வரலாறு, மொழி, பண்பாடு ஆகியவற்றினால் குடாநாட்டுடனான இந்தியாவின் உறவுகள் வலுவாக உள்ளன.

இலங்கையில் சீன நலன்களும் அதன் உள்சார் கட்டமைப்புத் திட்டங்களும் சிங்கள மக்களைபெரும்பான்மையாக கொண்ட தெற்கிலேயே குறிப்பாக ராஜபக்சக்களுடன் பெய்ஜிங் வைத்திருக்கும் இறுக்கமான உறவுகளின் காரணமாககவனத்தை குவித்ததாக காணப்படுகின்றன. போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் சீனர்கள் வீதிகளையும் வீடுகளையும் நிர்மாணித்திருகின்ற போதிலும் இந்தியாவுடன் அரசியல் மற்றும் மக்களுக்கு இடையிலான உறவுகள் வலுவாக உள்ள வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்கள் உள்ளடங்கலாந பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டமை, உறவுகளை களத்தில் விரிவுபடுத்துவதற்கான



விருப்பத்தை சுட்டிக்காட்டுகிறது.

குடாநாட்டில் அவர் விஜயம் மேற்கொண்டிருந்த இடங்களில் 1981 இல் சிங்கள அரசியல்வாதிகள் தலைமையிலான கும்பலால் எரிக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாண நூலகமும் உள்ளடக்கியிருந்தது . அங்கு அவர் மடிக்கணினிகள் மற்றும் கணினிகளை அன்பளிப்பாக வழங்கியதுடன் நூலகத்தை டிஜிட்டல் மயமாக்குவதற்கும் உதவியளித்துள்ளார் . 1990 களில் அதன் மறுசீரமைப்பிற்குப் பிறகு, டில்லி மற்றும் தமிழ்நாடு அரசு இரண்டும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை நன்கொடையாக வழங்கியுள்ளன. 2015 இல், நூலகத்தில் “இந்தியாகோர்னர்” திறக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் முக்கிய வாழ்வாதாரம் மீன்பிடித்தொழில் ஆகும், அரிதான கடல் வளங்களுக்காக தமிழக மீனவர்களுடனான அவர்களது போட்டிக்கு தீர்வு காணப்படாமல் போய்விட்டது. புதன் கிழமையன்று, சீனத் தூதுவர் மீன்பிடி வலைகள் மற்றும் 100,000 டொலர் மதிப்பிலான உலர் உணவுப்பொருட்களை மீனவர் கூட்டுறவு சங்க சம்மேளன உறுப்பினர்களுக்கு நன்கொடையாக அளித்துள்ளார் இந்த விஜயத்தின் போது இலங்கையின் மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சரும் யாழ்ப்பாணமாவட்டத்தின் எம்.பியு மான டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டிருந்தார் .

“இதுவரை தமிழ் மக்கள் சீனர்களுடன் அதிக நெருக்கத்தை கொண்டிருக்கவில்லை. தமிழர்களுடனான உறவை மேம்படுத்துவதற்காகவே இந்த விஜயம் அமைந்திருக்கலாம்” என யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தாத்தன் தெரிவித்தார்.

இலங்கையில், உத்தியோகபூர்வ மொழி அந்தஸ்தை தமிழ் பெற்றிருந்தாலும், அண்மைய மாதங்களில் தமிழை விலக்கிவைத்துவிட்டு மாண்டரின் உள்ளடங்கிய பெயர் பலகைகள் தொடர்பாக தமிழர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். சீனாவை நண்பனாக கருத வேண்டும் என்ற செய்தியை தமிழர்களுக்கு வழங்குவதாக இந்த விஜயம் நோக்கப்படுகிறது.

அதேவேளை உள்ளூர் சோதனைகளில் தேர்ச்சி பெறாத சேதன உர இறக்குமதியை கொழும்பு இரத்து செய்ததை அடுத்து உறவுகளில் சரிவு ஏற்பட்டிருக்கும் நிலையில் இந்த விஜயத்தை இலங்கையின் தலைமைக்கான ஒரு சமிக்ஞையாகவும் சிலர் கருதுகின்றனர். பதிலடியாக அமையும் வகையில், சீனத் தூதரகம் ஒரு ட்வீட்டில் “தீயது” என்று விவரித்ததுடன், கொடுப்பனவு தவறுக்காக, மக்கள் வங்கியை சீனா கறுப்புப் பட்டியலில் சேர்த்திருந்தது. உத்தவாதத்துக்கமைய கடனை செலுத்தாததால், சீன நிறுவனங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சீன வர்த்தக அமைச்சு தெரிவித்திருந்தது.

சீன இராஜதந்திரி ஒருவர் குடாநாட்டில் செலவழித்த நேரம் மற்றும் விஜயத்தின் போது அவர் சந்தித்த ஆட்கள் என்பன “முன்னொருபோதுமில்லாதது” என்று தூதுவர் கீயின் விஜயம் குறித்து ஈ .பி. ஆர் . எல் .எப். முன்னாள் உறுப்பினரும் யாழ் வாசியுமான ஸ்ரீதரன் திருநாவக்கரசு கூறியுள்ளார்.

வட மாகாணத்தில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு சீனா எவ்வாறு பங்களிப்பது என்பது தொடர்பாக அரசாங்க அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களுடன் கீ கலந்துரையாடியுள்ளார் . இந்த உரையாடல்களில் உருவான யோசனைகளில் இறால் வளர்ப்பும் உள்ளடங்கியிருந்தது




GTA
CHIROPRACTIC CENTRE
We are specialized in
• Motor Vehicle Accidents
• Slip & Fall
• WSIB
• Extended Health Care
• Sports Injuries
• Physiotherapy
• Chiropractic
• Orthotics Shoes
• Massage Therapy
• Acupuncture
Health is Wealth
Pathmaraj (Pat) Pathman
Tel: 416-321-0482 Cell: 416-528-5318
Fax: 416-321-0486
GTA Square Mall 5215 Finch Ave, E#206
Scarborough, ON, M1S 0C2
www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com


RS
R.S தங்கப் பட்டறை
நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்
குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்
திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்
பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்
தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough


தமிழீழம்
வட மண்டலம்
மேல் மண்டலம்
திருகோணமலை
தென் மண்டலம்


Nickon
Photo & Video
Digital Album
நிக்கொன்
போட்டோ & வீடியோ
டிஜிட்டல் அல்பம்
உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...
Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio

# தமிழ மரபுத் திங்கள்
## Tamil Heritage Month



தாய் தேசத்தின் நினைவு சுமந்து நடம்போம்!
மண்மீட்பினை தம் இரத்தத்தோடும் கனவோடும் சுமந்து
சரித்திரமாகிய எம் வீரர் பணி தொடருவோம்!
இடரிலும் தளரிலும் சிக்கும் எம் வாழ்வை மீட்டு
நிலவு பொழியும் எம் முற்றத்தில் திளைப்போம்!
இந்தப் புத்தாண்டில், வரும் பொங்கல் திருநாளில்
புது வாழ்வுக்குள் காலடி எடுத்து வைக்க
வாழ்த்ததுகிறோம்!

# 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த கோருவது சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை ஒருபோதும் பாதிக்காது

பாராளுமன்ற உறுப்பினரும், நீதியரசருமான சி. வி. விக்னேஸ்வரன்

டிசம்பர் 29, 2021

***13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்த கோருவது ஒருபோதும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை பாதிக்காது என்றும் மாறாக உரிமைக்கான போராட்டத்தை பலப்படுத்தும் என்றும் பாராளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான சி. வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.***

கடந்த தேர்தலில் உங்கள் கட்சி முன்வைத்த விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சர்வதேச சமூகத்தினால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே பெறப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால், தற்போது 13 ஆவது திருத்த சட்டத்தின் அடிப்படையில் தீர்வினைப் பெறும் முயற்சிகளை நீங்கள் முன்னெடுத்திருப்பது ஏன்? என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அளித்துள்ள பதிலிலேயே விக்னேஸ்வரன் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
மிகவும் சுருக்கமாக இந்த கேள்விக்கு நான் பதில் அளிக்கின்றேன். 13 ஆவது திருத்த சட்டத்தை ஒரு தீர்வாக நாம் ஏற்றுக்கொண்டுவிட்டதாக விஷமத்தனமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் நான் முன்னரும் மிகவும் தெளிவாக எனது நிலைப்பாட்டை கூறியிருக்கின்றேன்.



எங்களுடன் சேர்ந்து பல தமிழ்க் கட்சிகள் அண்மையில் கூடி 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியாவை வலியுறுத்துவதற்கு எடுத்த தீர்மானத்துக்கும் எமது அரசியல் தீர்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஏற்கனவே இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கும் ஒருசில சாதகமான விடயங்களை எமது தற்பாதுகாப்புக்காக பயன்படுத்துவதற்கு முயலும் ஒரு நடவடிக்கையே இது. இதனை நான் தற்போது மட்டும் கூறவில்லை. நான் முதலமைச்சராக இருந்தபோதே, 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம், முதலமைச்சர் நிதியம் ஆகியவை தரப்படவேண்டும் என்று பல தடவைகள் வலியுறுத்தி இருந்தேன். நில அபகரிப்பு, போரின் பின்னைய வறுமை, சமூக சீர்கேடு, இராணுவ மயமாக்கல் ஆகியன காரணமாக ஆபத்தின் விளிம்பில் இருக்கும் எமது தேசத்தைப் பாதுகாப்பதற்கு சில நடவடிக்கைகளை நாம் அவசரமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. "தீர்வு வரும், தீர்வு வரும்" என்று நாம் காலத்தை இழந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் நாம் எமது தேசத்தை இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை. ஆகவேதான் நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வினை நாம் பெற்றுக்கொள்ளும்வரையில் இருப்பவற்றைப் பாதுகாப்பதற்கு ஏற்கனவே சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களை நாம் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று முயற்சிக்க வேண்டியுள்ளது.

தற்போது எமக்கு நாம் விரும்பும் ஒரு தீர்வினை பெற்றுக்கொள்ளும் காலம் கனிந்துவிட்டதாகவும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் 13 ஆவது திருத்த சட்டத்தை இதனால்த்தான் வலியுறுத்துகின்றோம் என்பது போலவும் உண்மைக்கு மாறான கருத்துக்கள் கூறப்பட்டுவருகின்றன. முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான கடந்த 12 வருடங்களில் ஒவ்வொரு வருடமும் எமக்குத் தீர்வு வரும் என்ற நம்பிக்கையுடனேயே நாம் வாழ்ந்து வந்திருக்கின்றோம். யுத்தம் முடிவடைந்து மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டபோது அதில் நாம் போட்டியிட்ட போது கடும் எதிர்ப்புக்கள் எமக்கெதிராக முன்வைக்கப்பட்டன. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது என்பது 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு தீர்வாக நாம் ஏற்றுக்கொண்டுவிட்டதாக அர்த்தப்படுத்தப்பட்டுவிடும் என்று சில கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. தேர்தலையும் புறக்கணித்தன. ஆனால், உண்மையான நிலைமை அப்படி இருக்கவில்லை. அன்றே, நாம் 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஒற்றுமையுடன் நடவடிக்கை எடுத்து இருந்தால், இன்று மிகவும் பலமான ஒரு நிலையில் இருந்திருப்போம். அந்த நிலையில் நின்று கொண்டு எமது நிரந்தரத் தீர்வுக்காகப் போராடியிருப்போம். இன்று எமது நிலை மிகவும் வருத்தத்திற்குரியதாக மாறியுள்ளது. இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணித்து வந்துள்ளார்கள். எந்தவகையிலும், 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தக் கோருவது எமது சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வுக்கான கோரிக்கையை பாதிக்க முடியாது. ஆகவே, தவறுகளில் இருந்து நாம் பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.
தீர்வுக்கான எமது நடவடிக்கைகளும் ஒற்றையாட்சியின் கீழ் 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கான எமது முயற்சிகளும் வெவ்வேறானவை. அவை சமாந்திரமானவை, ஒருபோதும் ஒன்றுடன் ஒன்று சந்திக்க முடியாதவை. 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ் நான் முதலமைச்சராக இருந்திருக்கின்றேன். எமக்கு அமைச்சர்கள் இருந்தார்கள். பல நிறுவனங்கள் இருந்தன. ஆனால், இதற்காக எமது சுய நிர்ணயத்துக்கான கோரிக்கை ஒருபோதும் பாதிக்கப்படவில்லை. மாறாக, எனது பதவியைப் பயன்படுத்தி சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை நான் வலுப்படுத்தி இருக்கின்றேன். இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு யாழ்ப்பாணத்தில் பொதுமேடையில் வைத்து நேருக்கு நேராகவே 13 ஆவது திருத்தம் ஒருபோதும் எமக்கு ஒரு தீர்வு அல்ல என்று கூறியிருக்கின்றேன். மாகாண சபை ஆட்சி அமைந்துவிட்டது என்பதற்காக தாயகத்திலும் சரி, புலம்பெயர் நாடுகளிலும் சரி எமது மக்கள் சுயநிர்ணயத்துக்கான கோரிக்கையையோ நடவடிக்கைகளையோ கைவிடவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டாலும் நிலைமை அதுதான்.

நாம் சட்டப் புத்தகத்தில் இருக்கும் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தக் கோருவது நாளுக்கு நாள் எமது நிலைமை மோசமாகிக் கொண்டு வருவதைத் தடுக்கவே.

தமிழ் மக்களுக்கான நிறைந்த இறுதித் தீர்வு சர்வதேச சமூகத்தினால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே நடைபெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. தமிழ் கட்சிகள் காலம் காலமாக சமஷ்டியை ஒரு தீர்வாக வலியுறுத்தி வருகின்றன. கூட்டு சமஷ்டியே நிரந்த தீர்வாக அமைய முடியும் என்பது எமது கூட்டணியின் நிலைப்பாடு. இதனை நாம் தீர்மானிக்க முடியாது. எமது மக்களே தீர்மானிக்க வேண்டும். அதனால்த்தான் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு நாம் கோரிக்கை முன்வைத்திருக்கின்றோம். இதனை இந்தியாவிடமும் நாம் வலியுறுத்தி உள்ளோம். மீண்டும் வலியுறுத்துவோம். ஆனால், சர்வஜன வாக்கெடுப்பு இன்று நடக்கும், நாளை நடக்கும் என்று எதிர்பார்த்திருந்து எமது நிலத்தையும் மக்களையும் நாம் இழந்துவிடக்கூடாது. ஒவ்வொருநாளும் எமது நிலம் பறிபோகின்றது. பெருமளவில் எமது மக்கள் வெளியேறுகின்றார்கள். ஆகவேதான் ஏற்கனவே இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி சில வலுவூட்டும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளோம்.

இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில், தமிழ்த் தேசத்தை இல்லாமல் செய்வதற்கான பாரிய திட்டங்களை அவர்கள் பல காலத்திற்கு முன்பிருந்தே வகுத்திருக்கின்றார்கள். தமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அவர்களின் மிக சிறந்த உத்தி, காலத்தைக் கடத்துவதுதான். காலங் கடத்தி சிறிது சிறிதாக வடகிழக்கை ஆக்கிரமிப்பதே அவர்களின் குறிக்கோள். கடந்த 12 வருடங்களில் சிறிய அதிகாரத்தைக் கூட எமக்கு வழங்காமல் காலத்தை இழுத்தடிப்பு செய்ததன் மூலமே எம்மை அவர்கள் பலவீனப்படுத்தி இருக்கின்றார்கள். வடக்கையும் கிழக்கினையும் புவியியல் ரீதியாகப் பிரிப்பதற்கும், முல்லைத்தீவை ஒரு அம்பாறை ஆக்குவதற்கும் அவர்களுக்கு இன்னமும் சிறிது காலம் மட்டுமே தேவைப்படுகின்றது. தமிழ் மக்கள் தம்மை தாமே பாதுகாப்பதற்கான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள விடாமல் எவ்வளவுக்கு எவ்வளவு காலத்தை இழுத்தடிக்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ்த் தேசத்தை நிர்மூலம் செய்ய முடியும் என்பது அவர்களின் கணிப்பு. அதுதான் உண்மையும் கூட. புள்ளிவிபரங்கள் அதைத் தான் எடுத்துக் காட்டுகின்றன.

நாம் கோரிக்கை விடுவதால் இலங்கை அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்ப்படுத்துவதற்கு இலகுவில் உடன்படப்போவதில்லை. ஆனால், இதனை அமுல்ப்படுத்துவதற்கு இலங்கையை நிர்ப்பந்திப்பதற்கான தகுதியும், உரிமையும், கடமையும் இந்தியாவுக்கு இருக்கின்றது. இந்தியாவிடம் நாம் இந்தக் கோரிக்கையை எந்தவிதமான கால வரையறையும் இன்றி திறந்ததாக (open) விடுக்கவில்லை. தமிழ்ப் பேசும் மக்களுக்கு இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமையினை தீவிரமாக கவனத்தில் எடுத்து, மிக விரைவாக 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

இந்த இடத்தில் எமது முஸ்லிம் சகோதரர்கள் பற்றியும் மலையகச் சகோதரர்கள் பற்றியும் ஒரு சில வாசகங்களை உள்ளடக்குவது உசிதம் என்று எனக்குப் படுகிறது. வடகிழக்கு முஸ்லிம் தலைவர்கள் சிலர் 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் அது முஸ்லிம் மக்களுக்கு பாதகம் விளைவிக்கக் கூடும் என்று எண்ணுகின்றார்கள். இது தவறு. வடகிழக்கு முஸ்லிம் மக்கள் சிந்திக்க வேண்டிய ஒரேயொரு விடயம் தமது முஸ்லிம் அலகு தமிழ்ப் பேசும் பிரதேசமாக வடகிழக்கினுள் இருக்க வேண்டுமா அல்லது சிங்கள பெரும்பான்மையினர் வசம் இருக்க வேண்டுமா என்பது. சிங்களப் பெரும்பான்மையினர் வசம் சென்றால் தமக்கு என்ன நடக்கும் என்பதை முஸ்லிம் சகோதரர்கள் கடந்த சில வருடங்களுக்குள் உணர்ந்திருப்பார்கள். வடகிழக்கில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களை ஒன்று சேர்த்து சமஷ்டி முறையிலான முஸ்லீம் அலகின் கீழ்க் கொண்டு வருவது சிரமமல்ல. அதே போன்று மலையகத் தமிழ் மக்களும் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களை ஒன்று சேர்த்து சமஷ்டி முறையிலான மலையக தமிழர் அலகை ஸ்தாபிப்பது சிரமமல்ல. ஆனால் கிழக்கு மாகாண முஸ்லிம் சகோதரர்கள் சிங்கள அலகினுள் சென்றால் காலக்கிரமத்தில் தமிழ் மொழியானது அவர்களிடையே அழிந்து போகும். இஸ்லாம் மதமும் வெகுவாகப் பாதிக்கப்படும். இவற்றையெல்லாம் முஸ்லீம் தலைவர்களும் விடுதலைப் புலிகளும் கருத்துப் பரிமாறிய பின்னரே அவர்களுக்குள் ஒரு உடன்பாடு முன்னர் ஏற்பட்டது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு இஸ்லாமிய மக்கட் தலைவர்களும் மலையக மக்கட் தலைவர்களும் எம்முடன் சேர்ந்து ஒருவர்க்கொருவர் பலமாக இருப்பதே தற்போதைய அவசரமான தேவையாகும்.




# யாழ். கோட்டை அகழ்வாய்வில் கிடைத்த ஆலய அழிபாடுகள் நல்லூர்க் கந்தனுக்கு உரியதா?


யாழ். கோட்டையின் வெறிப்புறத் தோற்றம்

யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் நல்லூர் இராசதானியை மையப்படுத்தி அமைந்திருந்த நாற்றிசைக் கோவில்கள் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் நல்லூர் இராசதானியுடன் தொடர்புபடுத்திப் பேசப்படும் முக்கிய ஆலயங்களில் ஒன்றாக நல்லூர்க் கந்தன் ஆலயம் காணப்படுகின்றது. ஆயினும் இவ்வாலயத்தின் தோற்ற காலம் எது? தோன்றி இடம் எங்கே? தோற்றுவித்த மன்னன் யார்? என்பன தொடர்


தாமரைப் பூ வடிவும் செதுக்கப்பட்ட தூாண்

பு ... ன ... ே ... கள்விகளுக்கான விடைகள் இன்று வ ை ர தெளிவற்றதாகவே காணப்படுகிறது. சிலர் யமுனா ஏரியுடன் இணைந்த பகுதியில் காணப்படும் புராதன கட்டிட அத்திவாரங்களை ஆதாரம் காட்டி தற்போதைய கிறிஸ்தவ ஆலயம் அமைந்த இடத்திலேயே தொடக்க கால நல்லூர் ஆலயம் இருந்ததெனக் கூறுகினற்னர். அவ்வாலயத்தையே கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் ஆறாம் புவனேகபாகு திருத்திக் கட்டினான் என்பதற்கு நல்லூர் கட்டியத்தில் வரும் புவனேகபாகு பற்றிய செய்யுளை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் காணப்படும் வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்கள் பலவும் திராவிடக் கலைமரபை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டாலும், அவை ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் யாழ்ப்பாண மக்களுக்கு மத சுதந்திரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தோற்றம் பெற்றவை என்பதில் ஐயமில்லை. இத்தகைய வரலாற்றுப் பின் புலத்திலேயே தற்போதைய நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் தோற்றத்தையும் நோக்க வேண்டும். ஆயினும் அதன் தோற்றத்திற்கு நல்லூர் இராசதானிகாலத்திற்கு முந்திய வரலாற்று மரபு காரணம் என்பதில் ஐயமில்லை.

1519 இல் யாழ்ப்பாண அரசை வெற்றி கொண்ட போத்துக்கேயர் இங்கிருந்த பெரிதும், சிறிதுமான 500 இற்கும் மேற்பட்ட ஆலயங்களையும், பெரிய வசிப்பிடங்களையும் இடித்தழித்து அவற்றின் கற்களைக் கொண்டு தமது நிர்வாக மையங்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், கோட்டைகளைக் கட்டியதாக தமது ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளனர். அதிலும் நல்லூரில் அமைந்திருந்த மிகப் பெரிய ஆலயத்தை போத்துக்கேயர் தமது

பாகங்ற ... ா க ப ... ப யன்படுத்திவிட்டு பின்னர் அவ் வாலயத்தையும் இடித்தழித்து அக்கற்களைக் கோட்டை கட்டப் பயன் படுத்தியதாக போத்துக் கேய ஆசிரியரான குவைறோஸ் சுவாமிகள் குறிப்பிடுகின்றார். போத்துக்கேயரும், ஒல்லாந்தரும் (தொடக்ககால ஆட்சியில்) கடைப்பிடித்த கலையழிவுக் (Vandalism) கொள்கையால் 16 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்து இந்தப் பாரம் பரியம் அழிவடைந்ததென்பதற்கு பல்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் தற்போது கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் அகழ்வாய்வுகளுக்கும், கோட்டை மீள்புனரமைப்புப் பணிகளுக்கும் முக்கிய பங்குண்டு. அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்த தொல்லியல் ஆதாரங்கள் கோட்டை கட்டப்படுதவற்கு ஏறத்தாழ 1600 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிராந்தியம் புராதன குடியிருப்புக்களைக் கொண்ட மையம் என்பதையும், அக்காலத்தில் கடல்சார் வர்த்தகத்தில் இவ்விடம் முக்கிய வர்த்தகப் பரிமாற்று மையமாகத் திகழ்ந்திருந்ததென்பதையும் உறுதி செய்கின்றன. அவற்றுள் அங்கு கிடைத்த ஆலய அழிபாட்டுச் சின்னங்கள் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கன.

ஒல்லாந்தார் கால ஆவணங்களில் இருந்து கோட்டையைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் குறிப்பாக அதற்கு வேண்டிய கோறல் கற்கள் கோட்டைக்குத் தெற்கே, தென் மேற்கே அமைந்துள்ள தீவுகளில் இருந்து கொண்டு வரப்பட்டதென்பது தெரிகிறது. ஆயினும் கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இக்கோறல் கற்களுடன் பல அளவுகளில், பல வடிவங்களில் அமைந்த சுண்ணாம்பு மற்றும் கருங்கற்களும் கோட்டை கட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இதில் அவதானிக்கக் கூடிய முக்கிய அம்சம் கோறல் கற்கள் கோட்டை கட்டுவதற்கென்றே குறிப்பிட்ட அளவுகளில் (10” x 06”) வெட்டப்பட்டு பொழியப்பட்டு கோட்டை கட்டப் பயன்படுத்தியுள்ள போது அவற்றுடன் கலந்த நிலையில்


தூணில் செதுக்கப்பட்டுள்ள தாமரை வடிவம்

ஏற்கனவே பிற கட்டிடங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட பல அளவுகளிலும், பல வடிவங்களிலும் அமைந்த கருங்கல் மற்றும், சுண்ணாம்புக்கற் தூண்களும் பிற கட்டிடப் பாகங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வைரமான இக்கற்கள் பெரும்பாலும் படை வீரர்கள் தங்கியிருந்த பீரங்கித்தளங்கள், கூடுதளங்கள் வாசல் பகுதிகளைக் கொண்ட இடங்களிலேயே பயன்படத்தப்பட்டுள்ளன என்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. அக்கற்கள் போத்துக்கேயர் காலத்திற்கு முந்திய இந்து ஆலயங்களுக்கு உரியவை என்பதை அவற்றின் வேறுபட்ட அளவு, அமைப்பு, அவற்றில் செதுக்கப்பட்டுள்ள புடைப்புச் சிற்பங்கள், சித்திரங்கள் உறுதி செய்கின்றன. அவற்றிற்கு உதாரணமாக கோட்டையில் கிடைத்த சில கற்களை எடுத்து நோக்கலாம்.


பொழிந்த கருங்கற் தூாண்


பொழிந்த சுண்ணக்கற் தூாண்



சித்திர வேலைப்பாடுடைய தூண்



கர்ப்பக் கிருகத்தில் இருந்த பீடம்?

இந்து ஆலயத்திற்குரியவை என்பதை அடை யாளப்படுத்தும் கற்கள் காணப்பட்ட இடங் களுள் கோட்டைக்குள் இருந்த கிறிஸ்தவ தேவாலயம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 1730 இல் கட்டி முடிக்கப்பட்ட இவ்வாயலத்தில் பல்வேறு காலகட்டடத்திற்குரிய கல்லறை களும், போத்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கி லேயர் காலப் போர்வீரர்கள், உயர் அதிகாரிகள் என்போருக்காக எழுப்பப்பட்ட நினைவுச் சின்னங்களும், கல்வெட்டுக்களும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் போத்துக்கேயர் கட்டிய கத்தோலிக்க தேவாலயத்தையே பின்னர் ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் புரட் டஸ்தாந்து தேவாலயமாக மாற்றினர் என் பதை உறுதி செய்கின்றன. இவ்வாலய அழி பாடுகளிடையே கிடைத்த சான்றுகளைக் கொண்ட கோறல் கல், செங்கட்டி, சுதை என்பவற்றைப் பயன்படுத்தி இவ்வாலயத்தைக் கட்டியுள்ளனர் என்பது தெரிகிறது. ஆயினும் இவ்வாலயக் கட்டிடக்கலை மரபுக்குப் பொருந் தாத வகையில் இந்து ஆலயத்திற்குரிய கருங் கற் துாண்களும், சுண்ணாம்புக் கற்துாண் களும் காணப்படுகின்றன. இவை இவ்வாலய அழிபாட்டின் மேற்படையில் கண்டுபிடிக்கப் பட்டவையாகும். இவ்வழிபாடு முழுமையான ஆய்விற்கு உட்படுத்தப்படுமானால் மேலும் பல கற்கள் கிடைக்க வாய்ப்புண்டு. இங்கு கிடைத்த கற்களில் கருங்கற்துாண்களும், ஒரு முருகைக் கற்துாணும் சிறப் பாகக் குறிப்பிடத் தக்கது. அதில் இரு கருங்கற் துாண்களும் இந்து ஆலயத்தின் கருப்பக் கிருக அல்லது முன்மண்டபத் துாணாக இருக்கலாம். சற் சதுர வடிவில் நன்கு பொழிந்து வெட்டப்பட்ட துாண்களின் நடுப்பாகத்தில் தாமரைப்பூ வடிவம் சிறபமாகச் செதுக்கப் பட்டுள்ளது. ஒரு கருங்கற் துாணின் மேற்பாகத்தில் காணப்படும் தாமரை வடிவம் திராவிடக் கலைமரபிற்குரிய போதிகை வடிவமாகக் காணப்படுகிறது. மற்றைய துாண் சுண்ணக்கல்லால் ஆனது. ஏறத் தாழ 5 அடி நீளமும் 11.2 அகலமும் கொண்ட இத்துாண் பலகை போன்ற வடிவில் நன்கு பொழியப் பட்டுள்ளது. இத்துாண் ஆலய முகப் பின் வாசல்படியில் அல்லது கபோதத்திற்கு மேல் வைக்கப்பட்ட கற்பலகையாக இருக்



கபோதக் கல்?

கலாம்.

ஏனைய துாண்களும், கற்களும் கண்டு பிடிக் கப்பட்ட முக்கிய இடமாக கோட்டையின் மேற் குப்பக்க மேல் மாடித்தளம் காணப்படுகிறது. பெருமளவு சிதைவடைந்த இம்மேற்தளம் மீள்கட்டுமானத்திற்காக அகழப்பட்டபோது அதன் அடிப் பாகங்கள் முருகைக் கற்களோடு சுண்ணக்கல் மற்றும் கருங்கற்துாண்களும் பயன் படுததிக் கட்டப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மேலும் இதன் மேற் தளத்திலுள்ள பீரங்கித் தளங்களும், சுடதளங் களும் பல்வேறு அளவுகளிலும், வடிவங் களிலுமான கருங்கல், சுண்ணக்கற் துாண்களைக் கொண்டு கட்டப்பட்டவையாகக் காணப்படுகின் றன. இவை கோட்டை கட்டு வதற்கான நோக்கில் வெட்டப்பட்ட கற்களாக இல்லாதது ஆலயத்திற்குரிய துாண்கள் என் பதை அவற்றின் வடிவங்களும், அவற்றில் பொறிக்கப்பட்ட அலங் காரங்களும் உறுதி செய்கின்றன. அவற்றில் இரு சுண்ணக்கற் துாண்கள் நடுவில் சற்சதுரமாக வெட்டப்பட்டு ஒரு பக்கத்தில் ஒரு துவாரமும் மறுபக்கத்தில் இரு துவாரங்களும் இடப்பட்டு இரு பக்க நுனிப் பாகங்களும் அலங்காரமாகச் செதுக்கப் பட்டுள்ளது. இதனால் இத்துாண்களில் காணப்படும் துவாரங்கள் இன் னொரு கற் துாணுடன் பொருத்திக்கட்டும் வகையில் செதுக்கப் பட்டதெனக்கருத இடமுண்டு. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சில சுண்ணாம்புக்கற்கள் வளைவாக வெட்டப்பட்டு அவை பிறகற் களுடன் பொருத்திக்கட்டும் வகையில் அவற்றின் உட்பாகம் மூன்று படிகள் கொண்டதாகச் செதுக்கப்பட்டுள்ளது. இக்கற்கள் துாணின் மேற்புறத்தில் பலகைக்கு மிண்டு போல் அமைந் துள்ள வளைவான கொடுங்கையாக இருக்கலாம்.

இங்கு சற்சதுர வடிவில் நடுவில் பள்ளமாக அமைந்த கருங் கற்பலகைகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் மிகப் பெரிய கருங்கல்லின் நடுப்பகுதியில் பள்ளமிடப்பட்ட கருங்கல் ஒன்று கிடைத்துள்ளது. இக்கல் கருப்பக் கிருகத்தில் இருந்த ஆவடை யாக அல்லது தெய்வச் சிலை வைக்கப்பட பயன்படுத்திய பலிபீடமாக எடுத்துக்கொள்ள இடமுண்டு.



யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட சோழர் காலக் கல்வெட்டு

மேற்கூறப்பட்ட கற்களும், கற்துாண்களும் இந்து ஆலயங்களுக்குரியவை என்பதில் ஐயமில்லை. அதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் கோட்டைக்குள் கண்டுபிடிக்கப்பட்ட துாண் ஒன்றில் பொறிக்கப்பட்ட கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டொன்று இராஜேந்திர சோழமன்னன், யாழ்ப்பாணத்தில் இருந்த ஆலயம் ஒன்றிற்கு வழங்கிய தானம் பற்றிக் கூறுகிறது. 16ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டை அன்னியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததால் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதங்களை முன்னிலைப்படுத்திய அன்னியர் ஆட்சியில் கோட்டைக்குள் இந்து ஆலயங்கள் கட்டியிருக்க வாய்ப்பில்லை. இதனால் இவ்வாயலக் கற்கள் 16ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட ஆலயங்களுக:குரிய கற்கள் என்பதில் சந்தேகமில்லை. போத்துக்கேயர் யாழ்ப்பாண அரசு காலத்தில் இருந்த ஆலயங்களையும், மிகப் பெரிய வசிப்பிடங்களையும் அழித்து அதன் கற்களைக் கோட்டை கட்டவும் பயன்படுத்தியதாகக் கூறியுள்ளனர். அதில் யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னனான சங்கிலியனைப் போத்துக்கேயர் வெற்றி கொண்டதன் பின்னர் நல்லூரில் இருந்த மிகப் பெரிய இந்து ஆலயத்தை தமது இராணுவ, நிர்வாக மையமாகப் பயன்படுத்தி விட்டுப் பின்னர் அவ்வாலயத்தையும் அழித்ததாகக் கூறியுள்ளனர். அல்வாலயமே தற்போதைய நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் ஆரம்ப காலக் கோயிலாக அடையாளம் காணமுடிகிறது. அவ்வாலயக் கற்களும் கோட்டை கட்டப் பயன்படுத்தப்பட்டதால் தற்போதைய கோட்டை அகழ்வாய்வுகளில் கிடைத்துவரும் ஆலய அழிபாடுகள் சில தொடக்ககால நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு உரியவை எனக் கூறுவது மிகையாகாது..

நன்றி: நல்லைக்குமரன் மலர் 2011



# தமிழர் பகுதிகளில் கால்பதிக்கும் சீனா ! இந்தியாவுக்கு நேரடி அச்சுறுத்தல்! தமிழர் தேசத்தின் அரசியல் இறையாண்மை நிலைநாட்டப்பட வேண்டும் :

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

டிசம்பர் 19, 2021

தமிழர் தாயகத்தில் சீனா மேற்கொள்ளும் திட்டங்களில் இருந்து முழுமையாக விலகிக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், எந்த திட்டங்களானாலும் தாயக மக்களிடமிருந்து வெளிப்படையான இசைவு பெற்ற பிறகே தொடங்க வேண்டும் என இடித்துரைத்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் சீன வட்டத்தை விரிவாக்கும் ஆட்டத்துக்காகத் தமிழர் தாயகப் பகுதிகளை பலியிடவிடாது, தமிழர் தேசமும், தமிழர் அரசியல் தலைமைகளும் தமது அரசியல் இறையாண்மையினை செலுத்த வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத்தீவின் தமிழர் தாயகப்பகுதியின் வட புலத்தே, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இயற்றும் மின்சக்தி திட்டத்தை தற்காலிகமாக நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ள சீனா, இந்த முடிவுக்கு "மூன்றாம் தரப்பின் பாதுகாப்பு" காரணமென கூறியுள்ளது. சீனாவின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது எனினும் தமிழர் தாயகத்தின் சீனா மேற்கொள்ளும் திட்டங்களில் இருந்து முழுமையாக விலகிக் கொள்ள வேண்டும்.

போருக்கு பின்னராக ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தாயக பகுதிகளில் தொடங்கப்படும் திட்டங்கள் எதுவானாலும் அம்முயற்சிக்கு தாயக மக்களிடமிருந்து வெளிப்படையான இசைவு பெற்ற பிறகே தொடங்க வேண்டும். இசைவு என்பது திட்டங்களின் அரசியல், பொருளியல் கூறுகளுக்கு மட்டுமன்று, நம்பகமான பன்னாட்டு அமைப்பொன்றின் சூழலியல் மதிப்பாய்வின் ஊடாகச் சூழலியல் கூறுகளுக்கும் இசைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

சீன நிறுவனங்களுக்கு திட்டங்கள் வழங்குவதன் மூலம் இந்தியாவைச் சுற்றிவளைக்கவும் அடக்கி வைக்கவும் சீனாவுக்கு உதவும் சிறீலங்காவின் நகர்வுகள் தமிழர் இறையாண்மை மீது நெடுந்தாக்கத்தினை ஏற்படுத்தும். வட புலத்தே யாழ் குடா நாட்டையும் இந்தியாவின் தமிழ் நாட்டையும் பிரிக்கும் குறுகலான பாக்கு நீரிணையில் அமைந்த சிறு தீவுகளான நெடுந்தீவு, அனலைத்தீவு, நயினா தீவு ஆகிய இடங்களில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு சைனோ சர் ஹைப்ரிட் டெக்னாலஜி என்ற சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

சிறீலங்காவுக்கான சீனத் தூதரகம் "மூன்றாம் தரப்பு" எதுவென்று சொல்லா விட்டாலும் அது இந்தியாதான் என்று நம்பப்படுகிறது. அந்தச் சிறு தீவுகளில் இந்திய நிறுவனமான அதானி குழுவுக்கு 12 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள திட்டப் பணியை வழங்கும் ஒப்பந்தத்தை கடந்த பெப்ரவரியில் கொழும்பு நீக்கம் செய்து, அதனை சீன நிறுவனத்துக்கு வழங்கிய போது, இந்தியா தனது பாதுகாப்பு சார்ந்த கவலைகள் தெரிவித்தது.

இந்திய நிறுவனத்தின் முயற்சியை சீனம் கீழறுத்த செயல் அந்த நேரத்தில் சிறீலங்காவில் தன் நலன்களைக் காத்துக் கொள்வதோடு அண்டை நாடுகளோடு இந்தியாவுக்குள்ள உறவுகளைக் கெடுக்கவும் கிழக்காசிய நாடாகிய சீனத்துக்குள்ள வல்லமையாகக் கருதப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குப் முனையத்தின் இரண்டாம் கட்ட வளர்ச்சிக்கு இந்தியாவுடனும் ஜப்பானுடனும் செய்த ஒப்பந்தத்தை சிறீலங்க அதிபர் கோத்தபய ராஜபக்சே, பெய்ஜிங்கின் தூண்டுதலால் முறித்துப் போட்டதாகச் செய்தி வந்த நேரத்தில் அந்தச் சிறு தீவுகளில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்ட நிலையங்களை நிரமாணிக்கும் முன்மொழிவு பிறந்தது. இந்தியாவுடனும் ஜப்பானுடனும் செய்த ஒப்பந்தப்படி கிழக்குப் முனையத்தில் சிறீலங்காவின் துறைமுகப் திணைக் களத்துக்கு 51வீத பங்குகள் இருக்கும். இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் 49 வீத பங்குகள் இருக்கும் என கூறப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சிறீலங்கா மறுத்தன் காரணம் என்ன ?சீன நிறுவனங்களை வளர்த்தெடுக்கும் வசதிகளையொட்டி முனையத்தை நடத்துவதில் தன் புவிசார் அரசியல் போட்டி நாடுகளான இந்தியாவும் ஜப்பானும் எவ்விதப் பங்கும் வகிக்க விடாமல் தடுக்க பெய்ஜிங் அழுத்தம் கொடுத்ததாலேயே கிழக்குப் முனையத்தை வளர்த்தெடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற சிறிலங்கா மறுத்ததாக பரவலாக நம்பப்படுகிறது. இந்தியாவும் ஜப்பானும் அமெரிக்காவின் நெருங்கிய தோழடமை நாடுகள். நாற்கூட்டுப் பாதுகாப்பு உரையாடல் (குவாட்) பங்காளிகள். ஆனால் நாட்டின் சொத்துகளை அயல் நாடுகளுக்கு விற்கத் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்ததைக் காரணமாகக் காட்டியே சிறிலங்கா இந்தப் பேரத்திலிருந்து விலகிக் கொண்டது. சிங்கள மக்களும் இந்திய மக்களும் பண்பாட்டுறவு என்றும் சிறீலங்கா இந்தியாவின் நட்பு நாடு என்றும் தம்பட்டமடிக்கும் கொழும்பின் நிலையினை இந்த விலக்கல், அதன் உண்மை முகத்தை வெளிச்சம்போட்டு காட்டியது. 2019 மே மாதம் செய்த மூல உடன்பாட்டை மதித்து நடக்கும்படி கொழும்பைக் நியூ டெல்லி கேட்டுக் கொண்டது.



திட்டங்கள் தொடர்பாக இந்தியாவுக்கு அளித்த உறுதிப்பாடுகளிலிருந்து விலகிக் கொள்ளும் ராஜபக்சேயின் நகர்வு, இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்த கருத்துக்களை மீளுறுதி செய்கிறது. 1998இல் பெர்னாண்டஸ் கூறினார்: "சீனா எதிர்காலத்தில் முதலாம் எண் அச்சுறுத்தலாகும்... இடைக்கால நோக்கிலும் நெடுங்கால நோக்கிலும் இந்தியாவுக்கு முதன்மையான பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருந்து வரவே வாய்ப்புண்டு. சீனத்தின் அச்சுறுத்தல் பாகிஸ்தானின் அச்சுறுத்தலை விடவும் பெரிது. இந்தியாவின் பாதுகாப்பு பற்றிக் அக்கறை எவரும் இந்தக் கருத்தை ஏற்கத்தான் வேண்டும்."

மேற்கே பாகிஸ்தானில் குவாதர் தொடங்கி கிழக்கில் கோக்கோ தீவுகள் வரை இந்தியா மீதான கடல்சார் சுற்றிவளைப்பானது தெற்கே சிறீலங்காவில் பெய்ஜிங்கின் வளரும் செல்வாக்கினால் முழுமையடைகிறது. இந்தியப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் மோகன் மாலிக் கூறியது போல், "இந்தியாவின் பால் சீனத்தின் மூலோபாயம் என்பது சுற்றிவளைத்தல், மூடியடைத்தல், சிக்கவைத்தல் ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டது." 2017ஆம் ஆண்டு தெற்கிலங்கையில் இந்தியப் பெருங்கடல் கடற்போக்குவரத்து வழிகளையொட்டி அமைந்த அம்பாந்தோட்டாவில் சீனம் கட்டிய துறைமுகத்தை பெய்ஜிங்கிடம் 99 ஆண்டுக் குத்தகைக்குக் கொழும்பு ஒப்படைத்தது. 2014ஆம் ஆண்டு கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல் நிறுத்தப்பட்ட போது புது டெல்லி வன்மையாக எதிர்த்திருந்தது.

இலங்கையின் வட கடலோரத்தில் யாழ் குடாநாடும் அதன் கடற்பகுதியில் அமைந்த சிறு தீவுகளும் தொன்றுதொட்டுத் தமிழர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்துள்ளன. ஆக, அவை தமிழர் தாயகத்தின் பிரிக்க முடியாத பகுதியாகும். மேலும், இலங்கைத் தீவின் தமிழர் தாயகம் பகுதியும் அதையொட்டிய கடற்பிராந்தியம் தமிழர் இறைமைக்கு உட்பட்டவை. இதனை உறுதி செய்திடத் தமிழர் தேசமும், தமிழர் அரசியல் தலைமைகளும் தமது அரசியல் இறையாண்மையினை செலுத்த வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.



# பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

-ராஜி பாற்றர்சன்-

பகுதி 02

*பெண்களுக்கு எதிரானவன் முறைகள்*

உலகளாவிய ரீதியில் பெண்கள் பலவிதமான வன் முறைகளுக்கு முகம் கொடுத்துவருகிறார்கள். மூன்றில் ஒரு பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்களுடைய வாழ் நாளில் தங்களுடைய நெருங்கிய உறவினர்களால் உடல் அல்லது பாலியல் வன் முறையை அனுபவிக்கின்றனர் என்பதை 2018 ஆம் ஆண்டின் தரவுகளின் அடிப்படை யில் உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. கடத்தல்காரர்கள் பெண்களையே அதிகமாக குறி வைக் கிறார்கள். மனித கடத்தல்கள் சம்பவங்களில் 71 வீதமான பெண்கள பாதிக்கப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக் கின்றன. மேலும் நான்கில் மூன்று பெண்கள் அல்லது சிறுமிகள் பாலியல் ரீதியாக சுரண்டப்படுவதை ஐக்கிய நாடுகளுக்கான பெண்கள் பிரிவின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

**பாலினவன்முறைக்குஎதிரானபதினாறுநாட்கள்செயற்பாடு**

குழந்தை திருமணம் கட்டாய திருமணம் உளவியல் ரீதி யான துஷ்பிரயோகம், இணைய-வழியிலான துன்



புறுத்தல், அடித்தல் உள்ளிட்ட பலவன் முறைகளுக்கு எதிராகவும் அவர்களுக்கு சமத்துவம் வழங்கப்பட்டு வன் முறையற்ற வாழ்வு வாழ அவர்களுக்கு உள்ள உரி மையை நிலை நாட்ட உலகளாவிய ரீதியில் பெண்கள் பலவழியில் போராடிவருகின்றனர். அவற்றில் பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான 16 நாட்கள் செயல்பாடானது, பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினமான நவம்பர் 25 அன்று தொடங்கி, மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10 வரை இயங்கும் வருடாந்திர சர்வதேச பிரச்சாரத்தை முக்கிய மானதாக கொள்ளலாம். இந்த விழிப்புணர்வு போராட டமானது 1991 ஆம் ஆண்டு தொடக்கம் பெண்களின் உல களாவிய தலைமைத்துவ நிறுவனத்தின் ஆர்வலர்களால் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் பெண்களின் உலகளாவிய தலைமைத்துவமையத்தால் இந்த விழிப்புணர்வு தொடர்ந்து ஒருங்கிணைக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடதக்கது.

நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 வரை பெண்கள், வன்முறை மற்றும் மனித உரிமைகளுக்கு இடையிலான தொடர் புகளை இந்த பிரச்சாரம் முன்னிலைப்படுத்துகிறது. நவம்பர் 25-ம்திகதி, பெண்களுக்கு எதிரானவன் முறைக்கு எதிரான சர்வதேச தினம் டிசம்பர் 1-ம்திகதி, உலக எய்ட்ஸ் தினம் டிசம்பர்-6 ம்திகதி 14 பெண் பொறி யியல் மாணவிகள் பெண்ணியவாதிகள் என்பதற்காக சுட்டுக் கொல்லப்பட்ட மாண்ட்ரீல் படுகொலையின் ஆண்டு விழா, மற்றும் டிசம்பர் 10-ம்திகதி, மனித உரிமைகள் தினம் என நான்கு மிகமுக்கியமான குறிப்பிடத்தக்க தேதிகளை உள்ளடக்கியது சிறப்பம் சமாகும்.

இந்த பதினாறு நாட்கள் கொண்ட விழிப்புணர்வு செயற் பாடுகள் உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் எடுத்துவரப்படுகின்றது. இந்த பிரச்சார செயற்பாடுகளில் ஒரு பகுதியாக வானொலி, தொலைக் காட்சி நிகழ்வுகள், செய்தியாளர் சந்திப்புகள் திரைப்பட காட்சிகள் பட்டறைகள், கருத்தரங்குகள், மற்றும் ஆர்ப் பாட்டங்கள் என்பன உள்ளடங்குகின்றன. அதுமட்டு மல்லாது புகைப்படம், சுவரொட்டி, புத்தக கண்காட்சிகள் விரிவுரைகள், விவாதங்கள், சாட்சியங்கள் மற்றும் பேச்சுக்கள் ஊடாகவும் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப் படுகின்றன. சமூக வலைத்தளங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் அனைவரும் இந்த விழிப்புணர்வில் பங்கேற்று ஆதரவை வழங்க முடியும்.

பலரின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகள் காரணமாக பல ஆண்டுகளாக, 16 நாட்கள் பிரச்சாரம் தற்பொழுது பன் மடங்கு அதிகரித்து, பல எதிர்ப்புக்களையும் கடந்து இப் போது 90 நாடுகளில் உள்ள 800க்கும் மேற்பட்ட நிறு வனங்களின் பங்கேற்பையும் உள்ளடக்கியுள்ளது. பல பெண் மனித உரிமை ஆர்வலர்களால் இது வருடாந்தம் நடை பெறும் நிகழ்வாக பல நகரங்களில் மாறியுள்ளமை



இம் முயற்சிக்கு கிடைத்த பெருவெற்றியாகவே கருத முடியும். ஒவ்வொரு இடங்களிலும் அந்தந்த நாடுகளின் அரசியல் மற்றும் பிரதேச சூழலுக்கு ஏற்ற வகையில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வர அனைவரும் இணைவோம் என்னும் கருப்பொருளின் கீழ் 2008-ல் ஆரம்பிக்கப்பட்ட பிரச்சாரம் அனைவரையும் வியந்துபார்க்கவைத்தது. இது மிகவும் தைரியமாக சரியான பாதையில் முன்னெடுக் கப்பட்ட விடயமாக பலராலும் கருதப்படுகின்றது.



உலகளவில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு அர்ப் பணிக்கப்பட்ட கொள்கை உருவாக்கம் மற்றும் வளங்கள் இரண்டையும் அதிகரிப்பதுடன், இந்தப்பிரச்சினையைப் பற்றிய பொது விழிப்புணர்வை பரந்த அளவில் ஏற்படுத் துவதை இது நோக்கமாகக்கொண்டுள்ளது.

எது எப்படியோ எமக்கு முன்னால் இந்த இலக்கை எட்டு வதற்குரிய மிக நீண்ட பயணம் காத்திருக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

ஒவ்வொரு நாளும் நூற்றுமுப்பத்தேழுபெண்கள் அவர் களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களால் கொல்லப் படுகின்றார்கள் என்று ஐக்கிய நாடுகள் பெண்கள் பிரிவு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2017-ம் ஆண்டில் மாத்திரம் வன்முறையால் உயிரிழந்த 87000- த்திற்கு அதிகமான பெண்களில் 50,000- த்திற்கு அதிகமான பெண்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களாலேயே கொல்லப்பட்டதாக தகவல்கள்தெரிவிக்கின்றன. இவர் களில் 30,000- த்திற்கு அதிகமானவர்கள் அவர்களது வாழ்க்கை துணையினரால் கொல்லப்பட்டதாக அறிக் கைகள் தெரிவிக்கின்றன. இந்த அளவிற்கு வீட்டு அல்லது குடும்ப வன்முறைகள் நாள் தோறும் பெருகி கொண்டே செல்கின்றன. பலநாடுகளில் இது சட்டரீதியாக குற்றமாக கருதப்பட்டாலும் இன்னும் சில நாடுகளில் பெண்களை பாதுகாப்பதற்குரிய சட்டங்கள் உருவாக்கப்படவில்லை என்பதே நிதர்சனமாகும்.

இன்றுவரை, மூன்றில் இரண்டு நாடுகளில் மட்டுமே குடும்ப வன்முறை சட்டத்திற்குப்புறம்பானதாக இருக்கின்ற அதேசமயம் உலகளவில் 37 நாடுகளில் பாலியல் பலாத்காரம் செய்பவர்கள் பாதிக்கப்பட்ட பெண் ணை திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும்தற்போது 49 நாடுகளில் குடும்ப வன்முறையி லிருந்து பெண்களைப்பாதுகாக்கும் சட்டங்கள் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது. எது எப்படியாயினும் மாற்றங் கள் என்பது ஒவ்வொரு தனிநபரிலிருந்து தானே உருவாக வேண்டும். ஒவ்வொரு வரும் மனிதநேயத்தோடு ஒவ் வொரு பெண்களையும் மதித்து அவர்கள் கௌரவமாக வாழ செய்தால் உயிரைப்பறிக்கும் வன்முறைகளிலிருந்து விடுதலையை கொண்டுவரலாம்.




29ஆம் ஆண்டு
வீரவணக்கம்
மேஜர் வேலன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை
கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை
கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க்ஜெயராஜ்)
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்
கடற்புலி லெப். தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டிவீதி, யாழ்ப்பாணம்
கடற்புலி குணசீலன்
(சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா)
2ம் குறுக்குத்தொரு,
உதயபுரம், மணியம்தோட்டம்
கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
மணியந்தோட்டம், கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதமலை வடக்கு, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் றொசான்
(அரத்தினசிங்கம் அருணராசா)
அரசடி வீதி,
நலலூர், யாழ்ப்பாணம்
இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி
தமிழர் கடலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
வேங்கைகளின் இருபத்து ஒன்பது ஆம் ஆண்டு
நினைவு வணக்க நாள் – 16.01.2022
கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ் ஜான்சன்)
2ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்
சங்கத்தமிழ்